


# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 சனவரி 01, 2009 புரட்சி 7 முழக்கம் 53 விலை : ரூ.2.50


# ஜன.8 இல் பிரதமருக்கு கருப்புக்கொடி!

### பெரியார் திராவிடர் கழகம் அறிவிப்பு

ஜன. 8 ஆம் தேதி சென்னை வரும் இந்தியாவின் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கருப்புக்கொடி காட்டுவது என பெரியார் திராவிடர் கழகம் முடிவு செய்துள்ளது. இது குறித்து கோவையில் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

ஈழத் தமிழர்கள் மீதான இனப் படுகொலையை நிறுத்தக் கோரி தமிழகம் ஒருமித்த கண்டனக் குரலை எழுப்பி வருகிறது. தமிழக முதல்வர் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் மத்திய அரசு உடனே போரை நிறுத்த இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றியது.

இவ்வளவுக்கும் பிறகு சென்னையில் கொட்டும் மழையில் லட்சக்கணக்கான தமிழர்கள் அணிவகுத்து சிங்கள ராணுவத்தின் இனப்படுகொலைக்கு எதிராக தங்களது எதிர்ப்பை உண்மையாக வெளிப்படுத்தினர். பிறகு தமிழக நாடாளுமன்ற குழு - பிரதமரை சந்தித்து வற்புறுத்தியது.


இறுதியாக முதலமைச்சர் கலைஞர் தலைமையில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் டெல்லியில் பிரதமரை சந்தித்து வலியுறுத்திய பிறகும் இலங்கை அரசு போரை நிறுத்தவில்லை. தமிழக மீனவர்களை சுட்டுக் கொல்வதையும் தடுக்கவில்லை.

ஒட்டு மொத்த தமிழர்களின் கோரிக்கைக்கு செவி சாய்த்து, பிரதமர் எந்த இணக்கமான முடிவும் எடுக்காமல், தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்காமல், பிரதமர் தமிழகம் வருவது - தமிழக மக்களைஅவமதிக்கும் செயலே ஆகும்.

எனவே 8.1.2009 அன்று சென்னை வரும் பிரதமருக்கு, தமிழர்களின் எதிர்ப்பை வெளிப்படுத்திட, கருப்புக்கொடி காட்டுவது என பெரியார் திராவிடர் கழகம் முடிவெடுத்துள்ளது.

இவ்வாறு பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## பெருமை சேர்க்கிறார், சிற்பி. ராசன்



2008 ஆம் ஆண்டுக்கான தலை சிறந்த 10 மனிதர்களில் பெரியார் திராவிடர் கழகத்தைச் சார்ந்த தோழர் சிற்பி. இராசன் அவர்களை 'ஆனந்தவிகடன்' குழு தேர்வு செய்துள்ளது. கழகத்துக்கு பெருமை சேர்க்கும் சமூகப் புரட்சியை - அமைதியாக செய்து முடித்துள்ள தோழர் சிற்பி. இராசன் பற்றி 'ஆனந்த விகடன்' வெளியிட்ட செய்தியை பூரிப்புடன் வெளியிடுகிறோம்.

ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து, சாமிகளையே செதுக்கிச்செய்யும் சிற்பிகளை உருவாக்கியவர் ராஜன். இவரும் சிஷ்யர்களும் செய்து அனுப்பிய சிலைகள் இன்று உலகம் எங்கும் பல கோயில்களில் அருள்பாலிக்கின்றன. இதுதான் மௌனப் புரட்சி. பெரியாரின் கருத்துக்களைப் படித்து வெடித்த வயதில்,தாகமும் கோபமுமாகச் சிற்பக் கலை பயின்றார். உலகம் அறிந்த சிற்பியாக உருவான பிறகு எடுத்தார் அடுத்த ஆயுதத்தை. 'கோயில் பிரவேசம், கர்ப்பக்கிரகத் தரிசனம் எல்லாம் இன்னும் மறுக்கப்படும் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் கைகள் செய்யும் சிலைகளே கோயிலுக்குப் போக வேண்டும்' என முடிவெடுத்தார். சுவாமிமலை அருகே உள்ள திம்மக்குடியில் ஆர்வம் உள்ள தலித் இளைஞர்களுக்குத் தங்க இடம், பயிற்சிகள் அத்தனையும் இலவசமாகத் தந்து, ராஜன் நடத்துகிற சிற்ப மையம், புரட்சியின் இன்னொரு களம். தனது உளியால் சமூகத்தைச் செதுக்கி வரும் ராஜன், கலைப் போராளி!

**– நன்றி 'ஆனந்த விகடன்' 31.12.08**

## போராட்டங்களின் ஆண்டாகியது 2008

போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், கைதுகள் என்று களப்பணிகளில் பம்பரமாகச் சுழன்ற பெரியார் திராவிடர் கழகம் மீண்டும் தன்னை செயல்படும் இயக்கமாக தமிழ்நாட்டுக்கு வெளிப்படுத்திய ஆண்டு 2008.

தமிழகத்தில் தொடர்ந்து மத மோதல்களை உருவாக்கும் வன்முறைகளை நடத்திய பாரதிய ஜனதா தனது மாநில செயற்குழுவை சேலத்தில், அதன் தேசிய தலைவர் ராஜ்நாத்சிங் தலைமையில் கூட்டியபோது, செயற்குழு நடக்கும் பகுதியிலேயே எதிர்ப்புப் போராட்டம் நடத்திய கழகம் ஈழத் தமிழருக்கு எதிராக அதிகார ஆணவத் திமிர் காட்டிய தமிழக காங்கிரஸ் தலைமையகத்துக்கு அருகேயும் தமிழின உணர்வை போராட்டங்களாக வெளிப்படுத்தியது.

தமிழகத்தில் பயிற்சிக்கு வந்த சிங்கள ராணுவத்தை ஓட வைத்ததும், தீண்டாமை திமிர் பேசிய ஆதிக்க சாதியினரைப் பணிய வைத்ததும், கடந்த ஆண்டு கழகம் நடத்திய போராட்டங்கள்தான், அறிக்கை விளம்பரங்களில் தன்னை மூழ்கடித்துக் கொள்ளாமல், ஆக்கபூர்வ கள பணிகளில் அர்ப்பணித்துக் கொண்டுள்ள பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் கடந்த ஆண்டு தொய்வின்றி தொண்டாற்றிய செயல்பாடுகளை இத் தொகுப்பு பட்டியலிடுகிறது.

பெரியாரின் எழுத்து பேச்சுகளைத் தொகுக்கும் மகத்தான கழகப் பணியை முடக்கிய திராவிடர் கழகத் தலைமை நீதிமன்றத்துக்கு ஓடிய வரலாற்றுத் துரோகம் நிகழ்ந்ததும், அதை கழகம் எதிர் கொண்டதும் இதே ஆண்டுதான்.

தமிழக காங்கிரசாரை மகிழ்விக்க அப்பட்டமான பொய் வழக்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குனர் சீமான், மணியரசனை கைது செய்து, பல வாரங்களாக சிறையிலடைத்து வைத்துள்ளது கலைஞர் ஆட்சி.

பிரச்சாரம், போராட்டம், களப்பணி என கடந்த ஆண்டு கழகம் கடந்து வந்த பாதையில் பதித்த சில முக்கிய சுவடுகளின் தொகுப்பு:

**ஜனவரி**

7 ஈரோடு மாவட்டம் நம்பியூரிலுள்ள திருமண மண்டபத்தை அருந்ததியர் சமூகத்தினருக்கு வாடகைக்குவிட மறுத்த தீண்டாமைக்கு எதிராக கழகம் களமிறங்கி, சாதி ஒழிப்பு கூட்டியக்கத்தை உருவாக்கி, கோபியில் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. போராட்டம் வெற்றி பெற்றது. ஆதிக்கசாதியினர் இறங்கி வந்து மறுக்கப்பட்ட அதே அருந்ததி தோழருக்கு மண்டபத்தை வாடகைக்கு வழங்க முன் வந்தனர். தீண்டாமைத் தடை தகர்ந்தது.

14 சென்னை வந்த குஜராத், பா.ஜ.க. முதல்வர் மதவெறியர் மோடிக்கு எதிராக கழகம் உள்ளிட்ட அமைப்புகள் இணைந்து பாசிச எதிர்ப்பு முன்னணியை உருவாக்கி ஆர்ப்பாட்டம் நடத்தியது.

**பிப்ரவரி**

3 இலங்கை இராணுவத்துக்கு இந்தியா ராணுவ உதவி செய்யக்கூடாது என்று ஜனவரி மாதத்திலிருந்து தமிழகம் முழுதும் பொது மக்களிடையே கையெழுத்து இயக்கம் நடத்தி - அந்த கையெழுத்துகளை டெல்லியில் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனியிடம் நேரில் அளித்ததோடு, டெல்லி நாடாளுமன்றத்தின் முன் கண்டன ஆர்ப்பாட்டத்தையும் கழகம் நடத்தியது. 10 லட்சம் கையெழுத்துடன் 400 கழகத் தோழர்கள், தோழியர்கள் பிப்.3 ஆம் தேதி டெல்லி புறப்பட்டு, பிப். 6 ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தி, 7 ஆம் தேதி பாதுகாப்பு அமைச்சரை நேரில் சந்தித்து வற்புறுத்தினர். இந்தியா இலங்கை இராணுவத்துக்கு ஆயுதம் வழங்கும் துரோகத்தை முதன்முதலாக மக்கள் மன்றத்திற்கு இதன் வழியாக கழகம் அம்பலப்படுத்தியது.

தேசிய ஜிம்னாஸ்டிக் போட்டியில் பங்கேற்று கேரளா சென்ற தமிழக அணியை அவமதித்தது மலையாள அணி. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பிப். 3 ஆம் தேதி பொள்ளாச்சியில் கராத்தே போட்டிக்கு வந்த மலையாள அணிக்கு கழக சார்பில் கண்டனமும்,

(3 ஆம் பக்கம்)

## தோழர்களே! கருப்புக்கொடி ஏந்தி – தலைநகர் நோக்கி திரளுவீர்!

### தலையங்கம்

## சரியான தீர்ப்பு!

*பார்ப்பனப் பண்ணையமாய் திகழும் அய்.அய்.டி. நிறுவனத்துக்கு எதிராக முதன்முதலாக ஒரு சமூகநீதி தீர்ப்பை சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கிறது. இந்தியாவின் அனைத்து அதிகாரங்களையும் தங்களது பூணூலுக்குள் சுருட்டி வைத்திருப்பவர்கள் அய்.அய்.டி. நிர்வாகப் பார்ப்பனர்கள் என்பதை இந்தத் தீர்ப்பு வெட்ட வெளிச்சமாக்கியிருக்கிறது. அய்.அய்.டி.யின் இயக்குனராக உள்ள எம்.எஸ்.அனந்த் எனும் அய்யங்கார் பார்ப்பனர் நியமன முறையே சட்ட விரோதமானது என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சந்துரு, முனைவர் ஃ.முரளிதரன் தொடர்ந்த வழக்கில் தீர்ப்பளித்துள்ளதோடு வழக்குச் செலவுக்காக இயக்குனர் எம்.எஸ். அனந்த் ரூ.5000-த்தை வழங்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.*

*1961 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான சட்டத்தின் கீழ் இந்திய தொழில் நுட்ப நிறுவனங்கள் (அய்.அய்.டி.கள்) செயல்படுகின்றன. இந்த சட்டத்தின் 17(1)வது விதியின்படி இயக்குனர் தேர்வு நடைபெற வேண்டும். இதன்படி இயக்குனர் தேர்வு செய்யப்படவிருப்பதை அரசிதழில் (கெசட்) வெளியிட வேண்டும். பிறகு குடியரசுத் தலைவர் முன் அனுமதி பெற்று (அவர்தான் அய்.அய்.டி.யின் தலைவர்) குழு ஒன்றை நியமிக்க வேண்டும். அக்குழுவில் தொடர்புடைய துறையின் அமைச்சர், தொழில்நுட்ப நிறுவனத்தின் முன்னாள் தலைவர், முன்னாள் இயக்குனர், பல்கலைக்கழக மான்யக் குழு தலைவர், விஞ்ஞானம் மற்றும் தொழில் ஆய்வு நிறுவனத்தின் மேலாளர் மற்றும் இயக்குநர், பெங்களூர் விஞ்ஞான கழகத்தின் தலைவர், மற்றும் முன்னாள் இயக்குநர், மத்திய அரசு நியமிக்கும் 3 பிரதிநிதிகள், மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழிற் கல்வி தொடர்புடைய மத்திய அரசு அதிகாரி ஆகியோர் இந்த குழுவில் இடம்பெற வேண்டும். இயக்குனராகும் தகுதியுடையோர் பட்டியலை குழு தயாரித்து, குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற்ற பிறகு அறிவிக்க வேண்டும் என்பதுதான் சட்டம். இவ்வளவு கடுமையான தேர்வுமுறைகளை புறக்கணித்து சட்டத்தை மதிக்காமல், மனித வளத்துறை அமைச்சகத்தைச் சார்ந்த ஒரு சிறு செல்வாக்குள்ள குழுவே இயக்குனரை தேர்வு செய்துள்ளது. குடியரசுத் தலைவர் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்ட தகவலில் குழு அமைக்கப்படாததும் சுட்டிக்காட்டப் படவில்லை. பார்ப்பனப் பண்ணையம் கேட்பாரில்லை என்பதுபோல் தொடர்ந்து நாட்டின் உயர்கல்வி நிறுவனத்தின் இயக்குனர்கள் நியமனம் நடந்து வந்துள்ளது.*

*பதவி தனக்குத்தான் கிடைக்கும் என்பதை உறுதியாக தெரிந்த எம்.எஸ்.அனந்த் தேர்வு செய்யப்படுவதற்கு முன்பே நியமனத்துக்கான பத்திரங்களை வாங்கி வைத்துள்ளது நீதிமன்றத்தில் ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு மோசமாக முறைகேடுகள் நடந்த நிலையிலும்கூட ஏதோ சில நிர்வாக நடைமுறைகளால் பதவி நியமனம் ரத்தாகிவிட்டதுபோல் பார்ப்பன ஏடுகள் எழுதி வருகின்றன. "இந்த இயக்குனர் மீண்டும் இப்பதவியை ஆக்கிரமிக்கும் நோக்கத்தோடு சூடாகவே காலியான இடத்தை அனந்த் வைத்துக் கொண்டிருந்தார்" என்று நீதிபதி சந்துரு தமது தீர்ப்பில் சுட்டிக் காட்டியுள்ளார். இந்தத் தீர்ப்பு இந்தியாவில் தற்போது இயக்குநர்களாக உள்ள அனைவருக்குமே பொருந்தக் கூடியதாகும். காரணம் அனைத்து இயக்குனர்களுமே கொல்லைப்புற வழியாகவே நுழைந்துள்ளனர். இது நாட்டின் மிகப் பெரிய மோசடியாகும்.*

*57 வயதுக்குட்பட்டவராகவே புதிய இயக்குநர் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் மீறப்பட்டு 62 வயதுள்ள அனந்த் நியமிக்கப்பட்டுள்ளார். எனவே சட்டவிரோதமாக பதவி பெற்றவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதோடு, இவர்கள் காலத்தில் நடந்த பேராசிரியர்கள் நியமனங்களையும் ரத்து செய்ய வேண்டும். வெகு மக்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய தீர்ப்பை வழங்கிய நீதிபதியை பாராட்ட வார்த்தைகள் இல்லை. இந்தத் தீர்ப்பு வரலாற்றுச் சிறப்பு மிக்கது. உறுதியோடு போராடிய முனைவர் முரளிதரன் அவர்களை பாராட்டுகிறோம்.*

**- புரட்சிப் பெரியார் முழக்கம் 01.01.2009**

# கொள்கையற்ற கட்டுப்பாட்டை சாடுகிறார் பெரியார்

**துரோகிகள் யார்? (14)**

*2002 ஆம் ஆண்டு 'விடுதலை' ஞாயிறு மலரில் வாசகர் ஒருவர் கி.வீரமணியிடம் ஒரு கேள்வி கேட்டார். தோழர் என்று அழைப்பது பற்றிய கேள்வி இது. அந்தக் கேள்வியும், கி.வீரமணி தந்த பதிலும் இது தான்.*

*கேள்வி : கம்யூனிஸ்ட் கட்சிகளில் தோழர் சங்கரய்யா என அழைக்கும் நிலை உள்ளது. அதுபோல நமது கழகத்திலும் நடைமுறைப்படுத்தப்படுமா?*

*வீரமணி பதில் : அவரவர்களுக்கு ஒரு தனித்தன்மை உண்டு. பிறரைப் பார்த்து காப்பியடிப்பது நமது வேலை அல்ல.*

*- இப்படி ஒரு பதிலை ஒரு பெரியாரியல்வாதி கூறுவது பெரியாரியலுக்கு எதிரானதேயாகும்.*

*1932 ஆம் ஆண்டிலேயே 'தோழர்' என்றே அழைக்க வேண்டும் என 'குடிஅரசு' பத்திரிகையில் கையெழுத்திட்டு அறிக்கை வெளியிட்டவர் பெரியார். அந்த அறிக்கை இதுதான்.*

> *"இயக்கத் தோழர்களும், இயக்க அபிமானத் தோழர்களும் இனி ஒருவருக்கொருவர் அழைத்துக் கொள்வதிலும், பெயருக்கு முன்னால், பின்னால் மரியாதை வார்த்தை சேர்ப்பது என்பதிலும் ஒரே மாதிரியாக, "தோழர்" என்கிற பதத்தையே உபயோகிக்க வேண்டும் என்றும், மகா-ள-ஸ்ரீ, திருவாளர், திரு, தலைவர், பெரியார், திருமதி, நீஜத் என்பது போன்ற வார்த்தைகளை சேர்த்துப் பேசவோ, எழுதவோ கூடாது என்றும் வணக்கமாய் வேண்டிக் கொள்கிறேன். 'குடிஅரசி'லும் அடுத்த வாரம் முதல் அந்தப்படியே செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்".*
>
> ***- ஈ.வெ.ரா. (குடிஅரசு 13.11.1932)***

*- இப்படி தோழர் என்றே அழையுங்கள் என்று பெரியார் கூறியதை, இளம் தலைமுறையினரிடம் மறைப்பது பெரியாரியல் புரட்டு அல்லவா?*

*1932 இல் பெரியார் வலியுறுத்திய ஒரு கருத்து, ஏதோ கழகத்துக்கு தொடர்பே இல்லாதது போல் அது பிறருக்குரியது என்றும், அதை காப்பியடிக்க வேண்டாம் என்றும், அப்படி காப்பியடிப்பது நமது வேலை அல்ல என்றும் எழுதுவதற்குப் பெயர் என்ன?*

*இப்படி கேள்வி கேட்ட இளைஞர்கள் எல்லாம் 'குடிஅரசை' பார்க்கவா போகிறார்கள் என்ற நம்பிக்கை தானே? அப்படி இளைஞர்கள் பார்த்துவிடக் கூடாது என்பதால்தான் காலவரிசைப்படி முழுமையான பெரியார் தொகுப்பு வெளியிடுவதை, இவர்கள் தடுத்திட துடிக்கிறார்கள் என்பதும் இப்போது புரிகிறதா?*

*இப்படி பெரியாரியலுக்கு எதிராக வீரமணி எதை வேண்டுமானாலும் கூறினாலும் அதை கேள்விக்கு உட்படுத்தும் நிலையே அந்த அமைப்பில் இல்லை.*

*திராவிடர் கழகத்தில் வீரமணி - கொள்கைகளுக்கு எதிராக செயல்படுவதைத் தட்டிக் கேட்டால், உடனே துரோகிகள் என்ற முத்திரையைக் குத்திவிடுவது அவரது வழக்கம். பார்ப்பன ஜெயலலிதாவை கண்ணை மூடிக் கொண்டு ஆதரிப்பதை 1996 இல் திராவிடர் கழகத்துக்குள் இருந்த இளைஞர்கள் கேள்விக்கு உட்படுத்திய போது வழக்கம்போல 'துரோகிகள்' பட்டத்தையே கி.வீரமணி சூட்டினார். ஒரு இயக்கம் கொள்கையை விட்டே விலகிப் போகும்போது, கட்டுப்பாடு பேசுவதில் என்ன அர்த்தமிருக்க முடியும் என்ற கேள்வியைத்தான் அன்று இளைஞர்கள் முன் வைத்தார்கள். கொள்கையா, கட்டுப்பாடா என்ற கேள்வி எழும்போது, கட்டுப்பாடு என்பதைவிட கொள்கைதான் முன்னுரிமை பெற வேண்டும் என்பதே சரியான பெரியாரியல் பார்வை.*

*பெரியார் காங்கிரசில் இணைந்து அதன் கொள்கைகளை நம்பி கடுமையாக உழைத்த தலைவர். கதர் மூட்டையைத் தெருதெருவாக சுமந்து விற்றார். நீதிமன்ற புறக்கணிப்புக்காக தனக்கு வரவேண்டிய பல ஆயிரம் ரூபாய்க்கான பத்திரங்களையும் உதறித் தள்ளினார். அதே பெரியார் தான் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை காங்கிரஸ் ஏற்க மறுத்தபோது காங்கிரசு மாநாட்டிலே 'கலக'க் குரலை உயர்த்தினார். கி.வீரமணி வாதப்படி பார்த்தால் பெரியார் கூட காங்கிரஸ் வலியுறுத்திய ஒற்றுமையை கட்டுப்பாட்டை மீறியவர்தான். அதற்காக பெரியாருக்கு துரோகி பட்டம் தந்துவிட முடியுமா? அது பெரியாரியல் அணுகுமுறையா என்று கேட்கிறோம். திராவிடர் கழகத்தில் வீரமணியால் வெளி யேற்றப்பட்டவர்கள் துரோகிகள் பட்டம் தரப்பட்டவர்கள்கூட வீரமணி அணுகுமுறையை கேள்வி கேட்டவர்களாகவே இருப்பார்களேதவிர, பெரியார் கொள்கைக்கு எதிராக செயல்பட்டவர்களாக இருப்பதில்லை. பெரியார் கொள்கைக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டே கூட வீரமணி கூடாரத்தில் இருக்கலாம். ஒரு தடையும் இருக்காது. வீரமணி புகழ் பாடினால் யாரும் ஆதிக்கசாதி உணர்வாளராக இருக்கலாம். தலித் வெறுப்புள்ளவராக இருக்கலாம். அவையெல்லாம் பிரச்சினை அல்ல. ஈரோட்டில் தீண்டாமை ஒடுக்கு முறைகளுக்கு எதிராக சாதி ஒழிப்பு கூட்டியக்கத்தை உருவாக்கி போராடியவர் தோழர் இரத்தினசாமி. அவர் திராவிடர் கழகத்தின் மாவட்ட செயலாளர். இப்போது திராவிடர் கழகத் தலைமை அவரை கட்சியை விட்டு நீக்கிவிட்டது. காரணம் - அந்த சாதி ஒழிப்பு கூட்டியக்கத்தில் பெரியார் திராவிடர் கழகமும் இடம் பெற்றுள்ளது என்பதால் தான், தமிழ்நாட்டில் இன்னும் தீண்டாமை பல்வேறு வடிவங்களில் தலைவிரித்தாடி வருகிறது. தலித் மக்களை அனுமதிக்காத கோயில்கள், கோயில் நுழைவுப் போராட்டங்களும்,இரட்டை தம்ளர் உள்ள தேனீர் கடைகளை எதிர்க்கும் போராட்டங்களும் நடந்து வருகின்றன.*

*வீரமணியோ, அவரது 'விடுதலை'யோ இவைகளை எதிர்ப்பதிலோ, போராடுவதிலோ முனைப்புக் காட்டுவது இல்லை. அந்தக் கழகத்துக்குள்ளே ஓரளவு கொள்கை உணர்வோடு செயல்படும் இரத்தினசாமிகளும் வெளியேற்றப்படுகிறார்கள். கேட்டால் 'கட்டுப்பாடு', 'ஒற்றுமை குலைவு' என்ற 'தாரக மந்திரத்தை' வீசி விடுவார்கள்.*

*கொள்கையற்ற ஒற்றுமை கட்டுப்பாடு பற்றி பெரியார் என்ன கூறினார்? இதோ அவரது கருத்து:*

> *"ஒற்றுமையை உச்தேசித்து, கொள்கைகளை விட்டுக் கொடுத்தன் பலன்தான், மகாத்மா முக்காடிட்டு சங்கராச்சாரி போல் மூலையில் உட்கார நேர்ந்ததும் அவரது நடவடிக்கைகள் இப்போது ஒரு மடாதிபதி சம்பிரதாயம் போல் ஆனதும் மடங்களில் பலர் ஆஷாடபூதித்தனம் செய்து பெருமை அடைவது போல் காந்தி மடத்திலும் பல சாஸ்திரிகள் போய் அமர்ந்து முகஸ்துதி செய்து பெருமை பெற்று வாழ்வதுமான காரியங்கள் நடந்தது. காந்தி கொள்கைக்கு இருந்த மதிப்புகள் அடியோடு போய் காந்தி மடம் ஏற்பட்டதற்குக் காரணமே கொள்கையை விட்டுக் கொடுத்து ஒற்றுமையை நாடிய பைத்தியக்காரத்தனம்தான். மகான்களின் செயலில் பைத்தியக்காரத்தனமும் ஒன்றாதலால் மகாத்மா காந்திக்கு அது தகும். ஒரு சமயம் அதை மாற்றிக் கொள்ள அவருக்கு நம்பிக்கைப் பிறந்தாலும் பிறக்கும். நமக்கு அது தகாது. நமக்கு அந்த நம்பிக்கை இல்லை. கொள்கையை விட்டு இராஜியான ஒரு ஸ்தாபனமும் ஒரு மனிதனும் ஒரு நாடும் உருப்படியாகாது என்பது என் புத்திக்கு எட்டிய உறுதியான முடிவு."*
>
> **பெரியார் - 'குடிஅரசு' 12.6.1927**

*- பெரியார் இவ்வளவு தெளிவாகக் கூறிய கருத்துகள் வீரமணியால், இளைய சமுதாயத்திடம் விளக்கப்படுவது இல்லை. காரணம், இந்தக் கருத்துகள் நூலாக அச்சேற்றப்படாததுதான். இதுவே - இவர்கள் பெரியாரியலைப் புரட்டுவதற்கும் திருப்புவதற்கும் வாய்ப்பாகி விடுகிறது.*

*கொள்கையற்ற ஒற்றுமை, கட்டுப்பாடு பற்றி பெரியார் கூறும் இந்தக் கருத்துக்கு என்ன பதில் கூறப் போகிறார்கள்?*

**(புரட்டுகள் உடைப்பு தொடரும்)**

***18.12.08 அன்று வெளிவந்த இத்தொடரில் 23.3.2002 'விடுதலை' என்பதற்கு பதிலாக 23.3.2008 'விடுதலை' என தவறாக வெளிவந்துள்ளது. திருத்திப் படிக்க வேண்டுகிறோம்.***

# கழகப் போராட்டத்தின் வெற்றிகள்

(முதல் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டமும் நடத்தப் பட்டது.

4 கோபியில் சுற்றுச் சூழலைக் கெடுக்கும் 'வர்ணா பட்டுநூல்' தொழிற்சாலைக்கு எதிராக கோபியில் கழகம் ஆர்ப்பாட்டம்.

18 உடுமலை அருகே உள்ள சாளரப்பட்டி கிராமத்தில் அருந்ததியினர் மீது ஆதிக்கசாதியினர் நடத்திய தாக்குதலைக் கண்டித்து உடுமலையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கழகம் பங்கேற்றது. இதே பிரச்சினைக்காக மதுரையில் பிப்.23 இல் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

தேனியில் ஒரு துப்புரவுத் தொழிலாளியின் குடும்பத்துப் பெண்ணை, தேனி காவல் நிலையத்தில் காவல் துறையினர் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிய குற்றத்தில் வழக்குப் பதிவு செய்யாத தேனி காவல்துறையைக் கண்டித்து, போராட்டம் நடத்தச் சென்ற கழகத் தலைவர், தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

**மார்ச்**

3 சிங்கள புத்த பிக்குகள் மரம் நடு விழா என்ற பெயரில் தமிழகத்தில் ஊடுருவ முயல்வதற்கு திருச்சியில் கழகம் எதிர்ப்பு தெரிவித்தது.

4 தில்லை சிற்றம்பல மேடையில் நீதிமன்ற அனுமதி யோடு தேவாரம் பாடச் சென்ற 80 வயது முதியவர் ஓதுவார் ஆறுமுகசாமியைத் தாக்கிய தில்லை தீட்சதப் பார்ப்பனர்களைக் கண்டித்து தில்லை நடராசர் கோயிலை அரசு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வலியுறுத்தி, சென்னையில் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. மதுரையில் கழகம் மார்ச். 8 இல் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

11 இலங்கை ராணுவத் தளபதிகள் குன்னூர் அருகே பயிற்சிக்காக இந்திய ராணுவப் பள்ளிக்கு வரும் செய்தி அறிந்து, உடன் கோவையில் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. சிங்கள ராணுவத்தினர் பயிற்சி பெறாமல் ஆந்திராவுக்கு ஓடினர்.

15-16 சீர்காழி ஒன்றிய கழக சார்பில் கிராமங்களில் பிரச்சாரப் பயணம் நடந்தது.

18 இந்திய அரசுக்கு சொந்தமான அச்சகத்தில் மலையாளிகள் ஆதிக்கம், தமிழர்களுக்கு எதிரான பாகுபாடுகளைக் கண்டித்து, கோவையில் கழகம் ஆர்ப்பாட்டம், போராட்டம் வெற்றி பெற்றது. அச்சகப் பணியாளர் தேர்வு நிறுத்தப்பட்டது.

28 தமிழக மேற்கு மாவட்டங்களில் தீண்டாமைக்கு எதிராக அருந்ததியினர் எழுச்சிப் பெற்றுள்ளதற்கு பெரியார் திராவிடர் கழகம் முக்கிய பங்காற்றியுள்ளதாக 'பிரன்ட் லைன்' (மார்ச் 28) பத்திரிகை எழுதியது.

**ஏப்ரல்**

7 ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்துக்காக கன்னட வெறியர்களைக் கண்டித்து பொள்ளாச்சியில் கழகம் ஆர்ப் பாட்டம்.

10 ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை எதிர்த்த கன்னடர்கள், பெங்களூரில் தமிழ்ச் சங்கத்தின் மீது தாக்குதல் நடத்தியதைக் கண்டித்து, சென்னையில் கன்னட நிறுவனங்கள் தாக்கப்பட்டன. தாக்குதலையொட்டி சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் 7 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஒரு வாரம் கழித்து பிணையில் விடுதலையானார்கள். ஆனை மலையிலும், ப.குமாரபாளையத்திலும் கழகம் இதே கோரிக்கையை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தியது.

இந்திய அரசுக்காக தகவல் சேகரிக்க, மாநில உரிமைகளுக்கு எதிராக, ஈரோடு மாவட்டத்தில் மத்திய அரசின் இருப்புக் காவல்படை (சி.ஆர்.பி.எஃப்) குவிக்கப்பட்டதை எதிர்த்து கழகம் முற்றுகைப் போராட்டம்.

14 கா.சு.புதூர் கிராமத்தில் சுகாதார பாதுகாப்பு கோரி பொள்ளாச்சியில் கழகம் ஆர்ப்பாட்டம்.

தூத்துக்குடியிலிருந்து திருச்செந்தூர் வரை தூத்துக்குடி மாவட்டக் கழகம் சாதி ஒழிப்புப் பிரச்சாரப் பயணத்தை நடத்தியது.

**மே**

3 மத்திய அரசின் சுங்கம் மற்றும் கலால் வணிக துறையில் மலையாளிகள் ஆதிக்கத்தை எதிர்த்து கோவையில் கழகம் ஆர்ப்பாட்டம்.

6 பாதிக்கப்பட்ட சாளரப்பட்டி அருந்ததி மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்கக் கோரி, உடுமலையில் கழகம் ஆர்ப்பாட்டம்

17 கோவையில் நடிகவேள் எம்.ஆர்.ராதா நூற்றாண்டு விழா மாநாடு போல் நடந்தது.

20 மேட்டூரில் மாபெரும் நாத்திகர் விழா மூட நம்பிக்கை ஒழிப்பு பேரணி எழுச்சியுடன் நடந்தது. கழகத்துக்கு 50000 நன்கொடை வழங்கியது.

30 குடந்தையில் நடிகவேள் நூற்றாண்டு விழாவை கழகம் எடுத்தது. கழகத்துக்கு ஒரு லட்சம் நன்கொடை வழங்கியது.

## தடைகள் – கெடுபிடிகளுக்கு இடையே நிகழ்ந்த பரப்புரைகள்

பிப்ரவரி தொடங்கி, மே மாதம் வரை வாரத்துக்கு இரண்டு பிரச்சாரக் கூட்டங்கள் என்று திட்டம் வகுத்து பெரியார் சிந்தனைகளை மக்களிடம் இடைவிடாது பரப்புவதில் முனைப்போடு செயல்பட்டது திருப்பூர் பெரியார் திராவிடர் கழகம்.

சிற்பி ராசன் - மந்திரமல்ல தந்திரமே நிகழ்ச்சிகளை தோழர்கள் அழைத்த ஊர்களுக்கெல்லாம் சென்று நடத்தினார். சென்னையில் 11 நாட்கள் தொடர்ந்து அவரது நிகழ்ச்சிகள் நடந்தன.

திருப்பூர், கோவை, மயிலாடுதுறை, சீர்காழி, மேட்டூர், சேலம் நகரங்களில் 4 நாள், 5 நாள் தொடர்ந்து சிற்பி ராசன் நிகழ்ச்சிகளை கழகத்தினர் நடத்தினர். குழந்தைகள் - சிறுவர்களுக்கான பயிற்சி முகாமை, சென்னை மாவட்டக் கழகம் நடத்தியது.

சமர்பா குழுவினரின் எழுச்சி இசை நிகழ்ச்சிகள், மேட்டூர் 'டி.கே.ஆர்.' குழுவினரின் இசை நிகழ்ச்சிகள், காவை. இளவரசன் தூத்துக்குடி பால். அறிவழகன், மந்திரமா தந்திரமா நிகழ்ச்சிகள் பல்வேறு ஊர்களில் நடத்தப்பட்டன. 'குடிஅரசு' தொகுப்புக்கு முன்பதிவுத் திட்டத்தின் கீழ் உறுப்பினர்களை இணைக்கும் பணியில் கழகத் தோழர்கள் கடும் உழைப்பை வழங்கினர். 'ஒப்பந்தங்களை சீர்குலைத்தது - யார்' நூலின் இரண்டாம் பதிப்பை கழகம் வெளிக் கொண்டு வந்து, மக்களிடம் பரப்பியது. மேட்டூரில் வெளியிடப்பட்ட 'குடிஅரசு' தொகுப்புப் பணியில் கழகத் தோழர்களின் உழைப்பு மதிப்பிட முடியாது.

ஜனவரி 5 ஆம் தேதி சென்னையில் கழகம் ஏற்பாடு செய்த மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணிக்கு இந்து முன்னணி இராம.கோபாலனின் மிரட்டலுக்கு பணிந்து கலைஞர் அரசு தடை விதித்தது. ஈழத் தமிழர் ஆதரவு பொதுக் கூட்டங்களுக்கும் கலைஞர் ஆட்சி தடை விதித்தது. புதுவையில் கழகக் கூட்டத்துக்கு அம்மாநில அரசு விதித்த தடையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் கழகம் வழக்கு தொடர்ந்தது. தடையை நீக்கி உத்தரவிட்டது உயர்நீதிமன்றம்.

தடை நீங்கியதால் தொடர்ந்து மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணியோடு கழகம் மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசுக்கு பாராட்டு விழாவையும் சென்னையில் நடத்தியது.

திருச்சி விமான நிலையத்தில் கொழும்பிலிருந்து வந்த விமானம் தரை இறங்க விடாமல் தடுக்கும் போராட்டத்தை திருச்சி மாவட்டக் கழகத் தலைவர் நடத்தி பரபரப்பை ஏற்படுத்தினார். தடைகளை எதிர்கொண்டு கழகம் பிரச்சாரங்களை கடந்த ஆண்டு நடத்தியது.

31 பயிற்சி முகாம்களை நடத்தும் திட்டத்தின் கீழ் இரண்டு நாள் பயிற்சி முகாம் புதுவையில் தொடங்கியது.

**ஜூன்**

7, 8 மேட்டூரில் சேலம் மாவட்டக் கழக சார்பில் இரு நாள் பயிற்சி முகாம் சிறப்புடன் நடந்தது.

சின்ன சேலம் கள்ளக் குறிச்சி ரயில் பாதையை மேலும் சுற்றுப் பகுதிகளுக்கு நீட்டிக்கக் கோரி சங்கராபுரத்தில் கழகம் ஆர்ப்பாட்டம்.

12 சென்னை சேத்துப்பட்டில் சட்டவிரோத கோயிலை எதிர்த்து கழகம் தொடர்ந்த வழக்கில் கோவிலை இடிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு.

14 கழக மூத்த தலைவர் திருவாரூர் தங்கராசுக்கு பாராட்டு விழாவையும், நாத்திகர் விழாவையும் சென்னை மாவட்டக் கழகம் நடத்தியது.

15 சென்னையில் கழகத்தின் செயற்குழு கூடியது. 'குடிஅரசு' தொகுப்புகளை வெளியிடும் திட்டங்களை உருவாக்கியது.

21, 22 கோபியில் ஈரோடு மாவட்டக் கழக சார்பில் 2 நாள் பயிற்சி முகாம் சிறப்புடன் நடந்தது. காரத் தொழுவில் கழகம் மூட நம்பிக்கை ஊர்வலம்.

30 சாதி மறுப்பு திருமணத் தம்பதிகளை எதிர்த்த சாதிவெறியர்களுக்கு துணை போன ஈரோடு மாவட்டக் காவல் துறையைக் கண்டித்து கழகம் ஆர்ப்பாட்டம்

**ஜூலை**

4 நிர்வாண சாமியார்கள் ஊர்வலத்தை எதிர்த்து சென்னை மாவட்டக் கழகம் போராட்டம்; சாமியார்கள் ஊர்வலம் ரத்தானது.

5-6 பூம்புகாரில் நாகை மாவட்டக் கழகத்தின் 2 நாள் பயிற்சி முகாம் சிறப்புடன் நடந்தது.

கேரளாவுக்கு மணல் கடத்துவதை எதிர்த்து ஆனைமலையில் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. அடுத்த இரு நாட்களிலேயே கேரளாவுக்கு மணல் கொண்டு போக அரசு தடை விதித்தது; போராட்டம் வெற்றி.

8 ரோகினி மில்ஸ் முன்பு கழக அமைப்பான பஞ்சாலை தொழிலாளர் சங்கம் நிர்வாகத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்.

12 மீனவர் படுகொலையைக் கண்டித்து பாதுகாப்பு அமைச்சர் அந்தோணி உருவ பொம்மை பொள்ளாச்சியில் கழக சார்பில் எரிப்பு.

17 விழுப்புரத்தில் நடிகவேள் நூற்றாண்டு விழா

22 ஜூலை 2 முதல் 27 வரை கழக முன்னணி அமைப்பான தமிழ்நாடு மாணவர் கழகம், தமிழகத்தில் பல்வேறு ஊர்களில் பயணம் செய்து மாணவர்களை சந்தித்தது.

25 பெரியார் நூல்களை நாட்டுடைமையாக்கக் கோரி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கழகம் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. சென்னை, சேலம், நெமிலி, திருப்பூர், தர்மபுரி, கோவை, ஈரோடு, திண்டுக்கல், உடுமலை, மயிலாடுதுறை, பொள்ளாச்சி, விழுப்புரம் உள்ளிட்ட பல ஊர்களில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

30 சென்னையில் கழக சார்பில் கலைவாணர் நூற்றாண்டு விழா.

**ஆகஸ்டு**

26 மேட்டூரில் 'குடிஅரசு' 27 தொகுதிகளை கழகம் வெளியிட்டது.

**செப்**

15 அண்ணா நூற்றாண்டையொட்டி கோவையில் 100 பேர் அண்ணா போல் வேடமணிந்து கழக சார்பில் ஊர்வலமாக வந்தனர்.

27 தொடர்ந்து மதக் கலவரங்களை உருவாக்கி வரும் பா.ஜ.க. மாநில பொதுக்குழு சேலத்தில், பா.ஜ.க. தேசியத் தலைவர் ராஜ்நாத்சிங் தலைமையில் கூடியபோது பல்வேறு மனித உரிமை அமைப்புகளை ஒன்று திரட்டி செயற்குழு கூட்டம் நடக்கும் மண்டபம் அருகே கழகம் போராட்டம் நடத்தியது. 250 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். கழகத் தோழர்கள் மோட்டார் வாகனங்களை பா.ஜ.க. வினர் எரிக்க நிலைமை பதட்டமானது.

**அக்டோபர்**

5 திருப்பூரில் பெரியார் அண்ணா சிலைகளை அகற்றக் கோரிய இந்து மதவெறி சக்திகளுக்கு எதிராக திருப்பூர் கழகத் தோழர்கள் பெரியார் கைத்தடி ஊர்வலம் நடத்தி கைதானார்கள்.

13 சிங்கள ராணுவத்துக்கு இந்தியா வழங்கிய படைக் கருவிகளை திரும்பப் பெற வற்புறுத்தி, சென்னை, சேலம், கோவை, தூத்துக்குடி, கள்ளக்குறிச்சி போன்ற ஊர்களில் கழகம் ஆர்ப்பாட்டங்களை காயக் கட்டுகளுடன் நடத்தியது.

14 ஈழத்தில் சிங்கள ராணுவம் போரை நிறுத்தக்

(4 ஆம் பக்கம்)

## பாண்டு வாத்தியத்துடன் சிறை ஏகினர்

டிசம்பர் 19 ஆம் தேதி கழகத் தலைவர் கொளத்தூர் மணி, த.தே.பொ.க. பொதுச் செயலாளர் பெ. மணியரசன், இயக்குனர் சீமான் ஆகியோர் கோவை சிறைக்கு காவல்துறை அழைத்து வந்தபோது ஒரே உணர்ச்சி வெள்ளம். பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன், திரைப்பட இயக்குனர் மணிவண்ணன் மற்றும் கோவை தோழர்கள் ஏராளமாகத் திரண்டிருந்தனர். திருப்பூர், பொள்ளாச்சி, பல்லடம் தோழர்களும் ஏராளமாக திரண்டு வந்திருந்தனர். பாண்டு இசை முழங்க மூவரும் சிறைக்குள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

**கைது செய்யப்பட்ட நாள் – டிசம்பர் 19.**

தொடர்ந்து இருவாரமாக சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

# இயக்குநர் சீமான் வாகனம் எரிக்கப்பட்டதை கண்டித்து கோவையில் ஆர்ப்பாட்டம் – கைது



சென்னை வளசரவாக்கம் இயக்குநர் சீமான் வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த அவரது காரை நள்ளிரவில் காங்கிரஸ்காரர்கள் எரித்துள்ளனர். செய்தி அறிந்ததும் கோவை செஞ்சிலுவை சங்கம் முன்பு 19.12.2008 வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் கழகப் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமையில் சீமான் காரை எரித்தவர்களை கைது செய்யக் கோரி ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்தில் செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, மாநகர செயலாளர் வே.கோபால், மாநகர அமைப்பாளர் இ.மு.சாஜித், அலுவலகப் பொறுப்பாளர் சா.கதிரவன், பகுதி கழக தோழர்கள் அ.வகாப், செந்தில், காட்டூர் கார்த்தி, தமிழரசன், குமணன், ப.கண்ணன், வழக்கறிஞர்கள் பாலசந்தர், பார்த்தசாரதி, சூலூர் ஒன்றிய செயலாளர் பன்னீர்செல்வம், தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் சகா. மணிகண்டன், பாலமுரளி, சிலம்பரசன் மற்றும் தமிழ் தேச பொதுவுடைமை கட்சி கோவை பொறுப்பாளர்கள் தமிழரசன், சங்கர் ஆகியோர் பங்கேற்றனர். ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுத்து அனைவரையும் கைது செய்து பாப்பநாயக்கன் பாளையத்திலுள்ள திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டு இரவு 7 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர்.

### சென்னையில்

20.12.08 அன்று சென்னையில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்கள்

கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், எ.கேசவன், இரா.உமாபதி, பா.இராசன், ஆ.தமிழ்ச்செல்வன், சி.அருள்தாசு, நா.தினகரன், ந. அய்யனார், சொ. அன்பு, ரியாஸ் பாசா, கோ.சீனு, ப.மனோகரன், சைதை இராசு, கலங்கரை ஓவி, நா. தஞ்சை தமிழன், பாவலர் கீர்த்தி, கி. முருகன், இளைய சிம்மன், வெங்டேசன் (ம.க.இ.க.), எம். கார்த்திக், பாண்டியன் (தமிழ் உரிமை மீட்பு இயக்கம்), கோ. தமிழரசு, சு. ஆனந்த், சு. பிரகாசு, ச. சரவணன், கு. சரவணன், ந. சுதாகர், ந. சுபாசு, எல். ரகுநாத், ம. கணேசன், பா. விஜி, இராவணன், சுகுமார், பொற்செல்வன், அருள், இராஜி, எஸ்.ராஜா, எஸ்.நாகராஜ், கன்னியப்பன், எம்.கார்த்திக், எம்.எட்டப்பன், வ.ரவிக்குமார், மு. சக்திவேல், கோதண்டன், வெங்கடேசு, நந்தா, வி.தீபக், மு.கண்ணதாசன், தமிழ்ச்செல்வன், ஜெயக்குமார், அப்பு, வி.ஜெயராம், செயவேல், சுப்ரமணி, சுப்பு, பாலசிங்கம், சக்திவேல், மனோஜ்குமார், மு. பைரவன், பி. சுரேஷ், கார்த்திக்.

இவர்கள் அனைவரும் டிசம்பர் 31 ஆம் தேதி வரை ஒவ்வொரு நாள் மாலையிலும் அண்ணா சாலை காவல்நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்பது நீதிமன்ற நிபந்தனை.

### தூத்துக்குடியில்

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக பேசியதற்காக பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ. மணி மற்றும் திரைப்பட இயக்குநர் சீமான் ஆகியோர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து தூத்துக்குடி 1 ஆம் நுழைவாயில் காந்தி சிலை முன்பாக 19.12.2008 மாலை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு பெரியார் திராவிடர் கழக தூத்துக்குடி மாநகர தலைவர் கோ. அ.குமார் தலைமையேற்றார். ஆதித் தமிழர் பேரவை இரா.வே.மனோகர் ஆர்ப்பாட்டத்தினை தொடங்கி வைத்து தனது கண்டனத்தினை பதிவு செய்தார். தொடர்ந்து பெரியார் தி.க.வின் தூத்துக்குடி மாவட்ட தலைவர் பொறிஞர் சி.அம்புரோசு தனது கண்டன உரையினை சிறப்பாக பதிவு செய்தார்.

அவரைத் தொடர்ந்து புரட்சிகர இளைஞர் முன்னணி இரா.தமிழரசன், தலித்திய சமூக நீதி உரிமை பேரவை தவராசு பாண்டியன், மக்கள் குடியுரிமை ஜனநாயகம் செ. பிரபாகர், மனித உரிமைப் பாதுகாப்பு மய்யம் வழக்கறிஞர் சுப.இராமச்சந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

கழகத் தோழர் தூத்துக்குடி பால். பிரபாகரன், காங்கிரசு கட்சியின் போலி தேசப் பற்றினையும் தமிழின விரோதப் போக்கையும், ஈழத் தமிழருக்கு இழைக்கும் துரோகத்தையும் விளக்கிப் பேசினார்.

நிறைவுரையாக மக்கள் உரிமைக் குழு வழக்கறிஞர் அதிசயக்குமார் காங்கிரஸ் கட்சி மற்றும் தமிழ்நாடு அரசு ஆகியோரைக் கண்டித்து வழக்கறிஞர்களாகிய எங்களுக்கே கருத்து சொல்ல உரிமை உண்டா என்று கேள்வி எழுப்பி தனது கண்டன உரையினை சிறப்பாக பதிவு செய்தார். இறுதியாக கழக மாநகர துணைத் தலைவர் சா.த.பிரபாகரன் நன்றி கூறினார்.

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடாது என்று பார்ப்பனத் திமிருடன் கட்டுரை வெளியிட்ட ‘இந்து’ நாளேட்டின் அலுவலகம் முன்பு கோவையில் கழகத்தினர் ‘இந்து’ ஏட்டைக் கொளுத்தி கைதானார்கள்.

24 சென்னையில் மனித சங்கிலியில் கழகம் பங்கேற்பு

27 தீபாவளி நாளன்று காலை 7 மணியிலிருந்து 11 மணி வரை சென்னையில் ‘ஈழத்தில் ரத்தத்தில் வெடி குண்டு; தமிழகத்தில் சத்தத்தில் பட்டாசா’ என்ற முழக்கத்தோடு, பெரியார் திராவிடர் கழகம் தோழமை அமைப்புகளோடு இணைந்து வீதி வீதியாக ஊர்வலமாக சென்று மக்களிடம் தீபாவளியை புறக்கணிக்க வேண்டுகோள் விடுத்தது.

30 ஈழத் தமிழர் அவலங்களை விளக்கிடும் 500 குறுந்தகடுகளை உடுமலை கழகத் தோழர்கள் இலவசமாக மக்களுக்கு வழங்கினர்.

31 ஈழத் தமிழர்களுக்காக புதுவையில் அமைதியாக உண்ணாவிரதம் இருந்தவர்களை மிரட்டி, வன் முறையில் இறங்கிய காங்கிரசாரை தட்டிக் கேட்ட புதுவை கழகத்தினரை காவல்துறை கைது செய்து சிறையிலடைத்து வழக்கு தொடர்ந்தது.

**நவம்பர்**

11 மயிலாடுதுறையில் கழகத் தோழர்கள், ராஜபக்சே உருவ பொம்மைகளை எரித்து கைதானார்கள். சீர்காழியில் கிராமம் கிராமமாக வீடியோ காட்சிகளை கழகம் ஒளிபரப்பியது.

கோபியில் ராஜபக்சேயை பாடையில் ஏற்றி ஊர்வலம் நடத்தி, உருவ பொம்மைக்கு தீயிட்ட கழகத்தினர் கைது செய்யப்பட்டனர்.

18 நவம்பர் 18 முதல் டிசம்பர் முதல் தேதி வரை 15 நாட்கள் தமிழக மாணவர் கூட்டமைப்பு நடத்திய ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான பரப்புரைப் பயணத்தில் கழகத் தோழர்கள் பங்கேற்றனர். தமிழகம் முழுதும் பயணக் குழுவினரை வரவேற்று கூட்டங்களை ஏற்பாடு செய்யும் கடமைகளை கழகத்தினரே ஏற்றனர்.

17 வி.பி.சிங்கை இழிவுபடுத்தி எழுதிய ‘இந்தியா டுடே’ பத்திரிகைக்கு செருப்படி தரும் போராட்டத்தை கோவையில் கழகம் நடத்தியது.

19 ஈரோட்டில் நடந்த ஈழத் தமிழர் படுகொலை கண்டன கூட்டத்தில் உரையாற்றியதற்காக காங்கிரசாரின் மிரட்டலுக்கு பணிந்து கலைஞர் ஆட்சி கழகத் தலைவர் கொளத்தூர் மணி த.தே.பொ.க. பொதுச்செயலாளர் மணியரசன், இயக்குநர் சீமான் ஆகியோரை 19 ஆம் தேதி கைது செய்து கோவை சிறையில் அடைத்தது.

**டிசம்பர்**

20 கைதைக் கண்டித்து தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி அலுவலகமான சத்திய மூர்த்தி பவன் முன் முற்றுகைப் போராட்டம் நடத்தச் சென்ற 62 கழகத்தினர் கைது செய்யப்பட்டனர். அனைவரும் புழல் சிறையில் அடைக்கப்பட்டு 22 ஆம் தேதி இரவு நிபந்தனை பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

### புதுவை கழகத்தின் சீரிய பணிகள்


டெல்லியில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்ற புதுவை கழகத் தோழர்கள் புதுவையில் பயிற்சி முகாம்கள் கலைவாணர் நூற்றாண்டு விழா, ஈழத் தமிழர்ஆதரவுக் கூட்டங்களை நடத்தியதோடு, புதுவை அடித்தள மக்களைப் பாதிக்கக் கூடிய தேங்காய்த் திட்டு துறைமுகத் திட்டத்தை எதிர்த்து, பல்வேறு அமைப்புகளை ஒன்று திரட்டி, தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து திட்டம் வரவிடாமல் தடுப்பதில் வெற்றி பெற்றனர். அதன் காரணமாகவே அவ்வப்போது காவல்துறையின் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்டாலும் புதுவைக் கழகம், நெஞ்சுரத்துடன் அவற்றை சந்தித்து உறுதியாக செயல்பட்டு வருகிறது.

**வி.பி.சிங் மறைவு இரங்கலுரை அடுத்த இதழில்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 2nd January 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2039 சனவரி 08, 2009 புரட்சி 7 முழக்கம் 54 விலை : ரூ.2.50

# துரோகம் வென்றது!

சிங்கள ராணுவம் கிளி நொச்சியைப் பிடித்து விட்டதைப் பார்ப்பனர்களும், பார்ப்பன ஊடகங்களும் தேசிய காங்கிரசாரும் தங்களது வெற்றியாகவே மகிழ்ந்து கொண்டாட்டம் போட்டு வருகிறார்கள்! இந்தியாவின் பச்சை துரோகத்துக்கு, தமிழக முதல்வர் கலைஞரும், மவுன சாட்சியாகி, இந்தத் துரோகத்தில், தனது பங்கினையும் பதிவு செய்து கொண்டுள்ளார்.

உழைப்பால் உதிரத்தைச் சிந்தி, ஈழத் தமிழர்கள் தங்களுக்கென கட்டமைத்த நிர்வாக தலைநகரம் வீழ்ந்து நிற்கிறது. 3 லட்சம் தமிழர்கள் குடும்பத்தோடு தங்கள் உடைமைகளை அப்படியே விட்டு, தங்களின் பாதுகாப்பு அரணான விடுதலைப்புலிகளோடு இடம் பெயர்ந்து விட்டனர்.

மக்கள் நடமாட்டமே இல்லாத கிளிநொச்சிக்குள் புகுந்த ராணுவம், காலி மைதானத்தில் வெற்றிக் கும்மாளம் போடுகிறது. மக்கள் நெரிசலாக இடம் பெயர்ந்த முல்லைத் தீவிலும் சிங்கள விமானங்கள் குண்டுகளைப் பொழிந்து, அ ப்பாவி மக்களை பிணமாக்கி வருகிறது.

மக்களையும் விடுதலைப்புலிகளையும் பிரிக்கவே முடியாது. மக்களிடமிருந்தே விடுதலைப்புலிகள் உருவாகி வருகிறார்கள் என்ற உண்மையை 3 லட்சம் மக்களும் தங்கள் தலைவரோடு இணைந்து இடப் பெயர்வு செய்த நிகழ்வின் வழியாக மீண்டும் உலகுக்கு உணர்த்தியிருக்கிறார்கள்.

'மக்களுக்கு சேதாரமே இல்லாத ராணுவ நடவடிக்கை' என்று ராஜபக்சே அப்பட்டமாக கூறும் பொய்யை மான வெட்கமின்றி பார்ப்பன ஊடகங்கள் புகழ்ந்து எழுதுகின்றன. குறிப்பாக பார்ப்பன 'இந்து', ராஜபக்சேயை சிறப்பு பேட்டி கண்டு வெளியிட்டு, வெற்றிக் களிப்பில் தள்ளாடுகிறது.

இலங்கையில் மனித உரிமை மீறல்களை கண் காணிக்க இந்தியாவின் உச்சநீதிமன்ற நீதிபதி பகவதி தலைமையில் அமைக்கப்பட்ட சர்வதேச வல்லுநர் களைக் கொண்ட பன்னாட்டுக்குழு, இலங்கையின் மிக மோசமான மனித உரிமை மீறல்களை சுட்டிக்காட்டி அங்கு செயல்படவே முடியாது என்று அறிவித்ததை இந்தப் பார்ப்பன ஏடுகள் மறைத்து விடுகின்றன.

இனப்படுகொலைகள் நிகழக்கூடிய உடனடி ஆபத்துகள் நிறைந்த உலகின் 8 நாடுகள் பட்டியலில் இலங்கையும் ஒன்றாக சேர்க்கப்பட்டுள்ளதை ஒதுக்கித் தள்ளிவிட்டு, ராஜபக்சேயை ஜனநாயகத்தின் புனிதராக்கி இந்த பார்ப்பன ஏடுகள் பாராட்டு மாலை களைக் குவிக்கின்றன. (காங்கோ, ஆப்கானிஸ்தான், ஈராக், மியான்மார், பாகிஸ்தான், சோமாலியா மற்றும் சூடானின் தார்பூர் பகுதி ஆகியவை மற்ற ஏழு நாடுகள்ஆகும்) இதற்காக இலங்கையைத் தவிர, ஏனைய நாடுகள் அய்.நா.வின் கண்டனத்துக்கு உள்ளாகிய நிலையில் இந்தியா தரும் பாதுகாப்பு அரவணைப்பால், இலங்கை மட்டும் கண்டனத்தி லிருந்து தப்பி வருகிறது. இந்த உண்மை தெரிந்தும் பார்ப்பன ஏடுகள் ஊமைகள் போல் வேடம் தரித்து நிற்கின்றன.

போர் நிறுத்தம் கோரி, தமிழக சட்டசபை ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றிய பிறகு இந்தியாவின் அதிகாரிகள் என்.என்.ஜா, கே.பி.எஸ். மேனன், காங்கிரசின் வெளியுறவுப் பிரிவு இணைச் செயலாளர் இராவ்னிதாக்வர் ஆகியோர் கொழும்புக்குப் போய், தமிழக அரசியல்வாதிகளின் கூக்குரலை ஒதுக்கித் தள்ளிவிட்டு, போரைத் தொடருமாறு இலங்கை அரசை வலியுறுத்தி வந்ததைக்கூட இந்தப் பார்ப்பன ஏடுகள் கண்டிக்கத் தயாராக இல்லை.

"தமிழ்நாட்டின் அரசியல் கோமாளிகள் கூறுவதை இந்தியா ஒரு போதும் காதில் வாங்காது" என்று இலங்கை ராணுவ தளபதி சரத் பொன்சேகா திமிருடன் பேசியதை சடங்குக்காக இந்தியா கண்டித்ததே தவிர அவர் கூறியதுதான் நூற்றுக்கு நூறு உண்மை என்பதை செயலில் காட்டிவிட்டது.

'கிளிநொச்சியைப் பிடித்தப் பிறகே எனது கொழும்பு பயணம்' என்று இறுமாப்பு காட்டினார், இந்தியாவின் வெளிநாட்டுத் துறை அமைச்சர் வங்காளப் பார்ப்பனர் பிரணாப் முகர்ஜி. கலைஞர் சொன்னாலும் சரி; வேறு எவர் சொன்னாலும் சரி; அசைய மாட்டேன் என்றார்.

கிளிநொச்சியை ராணுவம் பிடித்த பிறகுகூட, இந்தியப் பார்ப்பன ஆளும் வர்க்கம் ஓய்ந்துவிட வில்லை. 'ரா' உளவு நிறுவனத்துக்கு சொந்தமான நவீன கருவிகள் பொருத்தப்பட்ட ஒரு உளவு விமானத்தில் 'ரா' அதிகாரிகள் கடந்த 3 ஆம் தேதி வானத்தில் பறந்து வேவு பார்த்து, சிங்கள ராணுவத் துக்கு இரகசிய தகவல்களைத் தெரிவித்து வரு கிறார்கள். 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு (ஜன.6) இதை அம்பலப்படுத்தியுள்ளது. 40,000 அடி உயரத்தில் பறக்கும் இந்த விமானத்தில் பொருத்தப்பட்ட காமிரா மூலம் பூமியில் உள்ளவர்களை தெளிவாக படம் பிடித்துவிட முடியும். இரவு நேரத்திலும் படம் பிடிக்க லாம். மேகங்கள் சூழ்ந்திருந்தாலும்கூட படம் பிடிக்க லாம். 40,000 அடி உயரத்தில் பறப்பதால், மற்ற விமானங் களின் பாதையில் குறுக்கிடாது பறக்க முடியும். விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் இருக்கு மிடத்தைக் கண்டறிந்து, சிங்கள ராணுவத் துக்கு உளவு கூறவே இந்திய உளவு நிறுவனம் விமானத்தில் கிளம்பியுள்ளது.

இலங்கை இராணுவத்தைப் போல் பாலஸ்தீனர் களின் காசா பகுதியில், இஸ்ரேல் யூதவெறி ஆட்சி, குண்டுகளைப் போடுகிறது. அதைக் கண்டித்து உலகம் முழுதும் கண்டனக் குரல் வெடிக்கிறது. பார்ப்பன 'இந்து' ஏடு, இஸ்ரேல் குண்டு வீச்சைக் கண்டிக்கும். ஆனால், இலங்கை குண்டு வீச்சை மட்டும் ஆதரிக்கும். காசா மக்கள் மீது குண்டு விழுந்தால் கண்டனம்; தமிழன் மீது குண்டு விழுந்தால் இவர்களுக்கு, ஆனந்தக் களியாட்டம்.

ஒவ்வொரு நாளும் நாட்டின் நிகழ்வுகளுக்கெல் லாம், தமது பேனாவை உடனே தூக்கும் கலைஞர், மத்திய அரசின் துரோகத்தைக் கண்டிக்காமல், வாயை இறுக மூடிக் கொண்டு விட்டார். "கிளிநொச்சியைப் பிடித்தால் என்ன; அழித்தால் என்ன? இப்போது திருமங்கலத்தை நாங்கள் பிடித்தாக வேண்டும்" என்று சூளுரைத்துக் கிளம்பி விட்டார்.

'வீரப்ப மொய்லி'கள் பிரபாகரனை பிடித்துக் கொண்டு வந்து இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று திமிருடன் பேசுகிறார்கள். போபாலில் விஷ வாயு கசிந்து, பல்லாயிரம் மக்களை உயிர்ப்பலியாக்கி, அமெரிக்காவுக்கு தப்பி ஓடிய யூனியன் கார்பைடு நிறுவனத்தின் தலைவன் ஆன்டர்சனை, இந்தியாவுக்கு திருப்பிக் கொண்டு வந்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க யோக்கியதையற்ற காங்கிரசார், அதே யூனியன் கார்பைடு நிறுவனத்துக்கு, மீண்டும் புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்க அனுமதியளித்த மானங் கெட்ட காங்கிரசார், பிரபாகரனை பிடித்து வரச் சொல்லி, ஒப்பாரி வைப்பதுதான் வேடிக்கை; வினோதம்.

தமிழர்களின் தாயகப் பகுதியை ராணுவத்தின் பிடிக்குள் கொண்டுவருவது என்ன நியாயம்?

தமிழர்கள் தங்கள் தாயகப் பகுதியில் ஒரு தலை நகரையும், நிர்வாகக் கட்டமைப்புகளையும் உருவாக்கி யதை அழிப்பது என்ன நியாயாம்? சிங்களப் பகுதியிலா, அவர்கள் நிர்வாக அமைப்பை உருவாக்கினார்கள்?

இலங்கை எங்கள் நாடு என்று கூறிக் கொண்டு சொந்த நாட்டு மக்கள் மீது குண்டு வீசுவதை கண்டிக்காதது எவ்வகையில் நியாயம்?

'அய்வருக்கும் தேவி - அழியாத பத்தினி' என்று கூறி அதை நம்ப வைத்த பார்ப்பனர்கள் பார்வையில் இவை நியாயங்களாகிவிட்டன!

சூடு, சொரணையுள்ள தமிழன் ஒவ்வொருவனும் இந்தப் பார்ப்பன கூட்டத்தையும், தேசிய காங்கிரசை யும், வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் பின்னங்கால் பிடறியில் தெறிக்க ஓட ஓட விரட்டிட சபதமேற்க வேண்டும்! பார்ப்பானின் தேசியத்தையும், பார்ப்பானின் காங்கிரசையும் தோலுரிப்பதே இனி மானமுள்ள தமிழனின் கடமையாக மாறவேண்டும்! வராற்று துரோகத்துக்கு வட்டியும் முதலுமாக வாங்கிக் கட்டும் காலம் வந்தே தீரும்!

## சமரசத்துக்கு எல்லையே இல்லையா?

திராவிடர் இயக்கத்தையும், தி.மு.க.வையும், தொடர்ந்து கொச்சைப்படுத்தி எதிர்ப்பு இயக்கமே நடத்தி வரும் ஏடு 'தினமலர்'! இதன் நிறுவனர் கோபால்ஜி என்ற பார்ப்பனர், விசுவ இந்து பரிஷத்தின் தென் மண்டல பொறுப்பாளர். பெரியாரை, 'ஈ.வெ.ரா.' என்றும், அண்ணாவை 'அண்ணாத்துரை' என்றும் தான் இப்போதும் இந்த ஏடு எழுதும். பார்ப்பன சங்கத்தின் சங்கராச்சாரியின் ஊதுகுழலான இந்த ஏட்டை 'முரசொலி' எத்தனையோ முறை 'பூணூல் மலர்', 'தினமலம்' என்றெல்லாம் எழுதியிருக்கிறது. தோழர் சின்னக்குத்தூசி எத்தனையோ காட்டமான கட்டுரைகளை எழுதியிருக்கிறார். அந்த ஏட்டின் நிறுவனருக்கு அஞ்சல்தலை வெளியிடும் விழாவில் முதல்வர் கலைஞர் பங்கேற்று, அவரை பெரியாரோடு ஒப்பிட்டுப் பேசும் நிலைக்குப் போனது மிக மோசமான இனத் துரோகமேயாகும். எல்லாவற்றிலும் சமரசம் செய்து கொண்டு வரும் கலைஞர், அண்மையிலே செய்த மிக மோசமான சமரசமாக இதைக் கூறலாம். கலைஞரை தமிழினத்தின் மூத்த தலைவராகக் கருதும் அனைவரையும், கலைஞரின் அண்மைக்கால நடவடிக்கைகள் கடுமையாக காயத்தை ஏற்படுத்தி வருகின்றன. கலைஞர் தனது அடையாளத்தை இழந்து கொண்டே வருகிறார் என்பதைச் சுட்டிக்காட்டத்தான் வேண்டும்.

## சத்தியில் தடையை மீறி கழகம் ஆர்ப்பாட்டம் – கைது



கொளத்தூர் மணி, இயக்குநர் சீமான், பெ.மணியரசன் கைதைக் கண்டித்து, ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் காவல்துறை தடையை மீறி கழகத்தின் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட இளைஞரணி செயலாளர் சிதம்பரம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன், ம.தி.மு.க. வெங்கிடுசாமி, ஸ்டாலின் சிவக்குமார் (சி.பி.அய்.), சண்முகம் (ஆதித் தமிழர் விடுதலை முன்னணி), பொன்னுசாமி, விடுதலை பழனிசாமி, செல்வக்குமார் உட்பட 4 தோழர்கள் கலந்து கொண்டனர். அனைவரையும் காவல்துறை கைது செய்தது. இரவு 7.30 மணிக்கு அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

**தலையங்கம்**

# மற்றொரு 'பொடா'

மீண்டும் 'பொடா'வைக் கொண்டு வரமாட்டோம் என்று பாசாங்கு காட்டி வந்த மத்திய காங்கிரஸ் ஆட்சி இப்போது தனது பார்ப்பன சுயரூபத்தைக் காட்டிவிட்டது. பார்ப்பன சக்திகளுடனும், பா.ஜ.க.வுடனும் கைகோர்த்துக் கொண்டு, 'பொடா'வை புதிய வடிவில் கொண்டு வந்துவிட்டது. ஒவ்வொரு முறையும் சில மன வியாதி கொண்ட மனிதர்கள் இலக்கு இல்லாத பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடும் போதெல்லாம் அரசுகள் அதையே வாய்ப்பாக்கி, அடக்குமுறை சட்டங்களைக் கொண்டு வருவதும், அந்த சட்டம் அப்பாவிகளைப் பழிவாங்குவதற்கே பயன் படுத்தப்படுவதும் இந்திய தேசிய பார்ப்பன ஆட்சிகளின் வாடிக்கையாகிவிட்டது.

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் என்று ஏற்கனவே ஒரு கறுப்புச் சட்டம் தனது கோர முகத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறது. அந்த முகத்தை மேலும் விகாரமாக்கி, மேலும் பல கொடூரமான சட்டப் பிரிவுகளை நுழைத்து, சட்டத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்து, கடந்த டிசம்பர் 15 ஆம் தேதி நாடாளு மன்றத்தில் அறிமுகப்படுத்தினார்கள். அடுத்த நாளே எவ்வித விவாதமும் இன்றி சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இதன்படி குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதற்கான கெடு 90 நாட்களிலிருந்து 180 நாட்கள் வரை உயர்த்தப்பட் டுள்ளது. அதுவரை பிணையில் வர முடியாது; மற்றொரு பிரிவின்படி கைது செய்யப்பட்டவர். விசாரணை தொடங்கிய நிலையிலும்கூட பிணையில் வெளிவர முடியாது குற்றப் பத்திரிகையில் குற்றம்சாட்டப்பட்டவர் குற்றமிழைத்துள்ளார் என்பதற்கான அடிப்படை முகாந்திரம் இருப்பதாக நீதிமன்றம் கருதினால், பிணை வழங்கலை மறுக்கும் அதிகாரம்நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. பயங்கரவாதி என்பதற்கான விளக்கங்கள் ஏதுமில்லாத நிலையில், இச்சட்டம் மீண்டும் முறைகேடாகவே பயன்படுத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை.

காவல்நிலையத்தில் பெறப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களை நீதிமன்றம் ஏற்கத் தேவையில்லை என்ற ஒன்றில்தான் - பொடாவிலிருந்து இந்த சட்டம் மாறுபடுகிறது.

இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை சிறப்பு புலனாய்வுக் குழு எனும் மத்திய அரசின் புலனாய்வு நிறுவனம் விசாரணை நடத்தும் இந்த விசாரணைக்கு மாநில அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற அவசியமும் இல்லை. எனவே மாநிலங்களுக்கான உரிமையில் இச்சட்டம் தலையீடு செய்த நிலையிலும் மாநில சுயாட்சி பேசிய தி.மு.க. சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்ற கோரிக்கையை மட்டும் பாதுகாப்பாக முன் வைத்துவிட்டு, சட்டத்தை ஆதரித்துவிட்டது. பொடா சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நீண்டகாலமாக வற்புறுத்தி வந்த பா.ஜ.க. மகிழ்ச்சியோடு சட்டத்தை ஆதரித்துள்ளது. அப்பாவி முஸ்லீம்களை பழிவாங்குவதற்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும்போது, பா.ஜ.க. விட்டு விடுமா? தமிழ்நாட்டில் தப்பித் தவறி ஜெயலலிதா ஆட்சிக்கு வந்துவிட்டால் தமிழின உணர்வாளர்களை நசுக்குவதற்கு இந்தச் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்வார் என்பதில் சந்தேகமே இல்லை. ம.தி.மு.க.வால் ஆதரிக்கப்பட்ட பொடாதான் அக்கட்சியின் பொதுச் செயலாளர் மீதே பாய்ந்தது என்பது கடந்தகால வரலாறு.

இத்தகைய கடுமையான சட்டங்களால் தீவிரவாதத்தை நிறுத்தவே முடியாது என்பதுதான் கடந்த காலங்களில் கிடைத்த பாடமாகும். துப்பாக்கியை கையில் எடுத்துவிட்ட தீவிரவாதிகள் மரணத்துக்கே அஞ்சாத நிலையில், கடுமையான சட்டங்களுக்கா அஞ்சுவார்கள்? ஈராக்கில் எவரையும் கைது செய்து, காலவரையறையின்றி சிறையிலடைக்கவும், சுட்டுத் தள்ளவும், ராணுவத்துக்கும், பாதுகாப்புப் படைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தும்கூட, அங்கே தீவிரவாதிகள் செயல்பாடுகளை தடுக்க முடிந்ததா? தீவிரவாதிகளைத் தடுக்க முடியாத இந்த சட்டங்கள், அப்பாவிகளுக்கு எதிராகவே முறைகேடாகப் பயன்படுத்தப்படுகின்றன.

மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் பொதுச் செயலாளராக செயல்பட்ட பினாயக்சென் என்ற மருத்துவர், சட்டீஸ்கர் மாநிலத்தில் பொடாவின் கீழ் கைது செய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சிறையிலுள்ள மாவோயிஸ்டுகள் தந்த கடிதத்தை வெளியில் உள்ள தோழர்களிடம் கொண்டு வந்து கொடுத்தார் என்பதே அவர் மீது சுமத்தப்பட்ட "பயங்கரவாத" குற்றச்சாட்டு. அந்தக் கடிதத்தில் தேசவிரோத கருத்துகூட ஏதும் இல்லை. நீண்டகாலம் விசாரணையின்றி சிறையில் அடைத்து வைக்க இந்தச் சட்டங்கள் பயன்பட்டனவே தவிர, குற்றச்சாட்டுகள் நீதிமன்றங்களில் நிரூபிக்கப்படுவதே இல்லை. இத்தகைய 'தடா, பொடா' சட்டங்களின் கீழ் 98 சதவீத குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதே இல்லை. குஜராத் முதல்வர் மோடி மதவெறிப் பார்வையோடு சிறுபான்மையினரை பொடாவின் கீழ் ஆண்டுக்கணக்கில் சிறையிலடைத்தார். அவர்கள் உச்சநீதிமன்றத்தால் நிரபராதி என்று விடுதலை செய்யப்பட்டு விட்டனர்.

தற்போது வந்துள்ள சட்டப்படி, தீவிரவாத நடவடிக்கைகளுக்கு திட்டமிட்டதாக சந்தேகித்தாலேகூட ஒருவரைக் கைது செய்துவிட முடியும். போலீஸ் காவலில் வைத்து விசாரிக்கும் காலமும் 15 நாளிலிருந்து 30 நாளாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

காவல்துறை விசாரணை என்றாலே அது சித்ரவதைதான். ஒருவரை கட்டாயப்படுத்தி அவருக்கே எதிரான சாட்சியாக்கக்கூடாது என்று இந்திய தண்டனை சட்டத்தில் பிரிவுகள் இருந்தாலும்கூட, இந்த சட்டத்துக்கு எதிராகவே காவல்துறை விசாரணைகள் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்படுகின்றன. சித்திரவதைகள் செய்யக் கூடாது என்று அய்.நா.வின் சர்வதேச உடன்பாடுகள் வலியுறுத்துகின்றன. இந்த உடன்பாட்டில் கையெழுத்திட மறுக்கும் வெகு சில நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருக்கிறது என்பதே உலக அரங்கில் இந்தியாவுக்கு தலைகுனிவுதான். இந்தியாவில் கிரிமினல் குற்றங்களில் கைது செய்யப்படுவோர் "சூத்திரர்களாகவும்", "தீண்டாதவர்களாகவும்" இருப்பதால் இந்திய பார்ப்பன ஆட்சி, மனித உரிமைகள் பற்றி கவலைப்படுவதே இல்லை.

ஆக, மீண்டும் மனித உரிமைகளுக்கான ஒரு கொடும் சட்டம் அரசிடம் வந்துவிட்டது. இதனால் தீவிரவாதம் குறைந்துவிடாது. தீவிரவாதத்துக்கான பிரச்சினைகளை அரசியல் ரீதியாக தீர்ப்பது ஒன்றே தீவிரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்குமே தவிர, அடக்குமுறை சட்டங்கள் அல்ல!

# ஈழத் தமிழர் பிரச்சினையில் 8 ஆண்டுகள் 'மவுனப் புரட்சி'

âçòthj â«k‹fY - ah®? (15)

ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு இழைத்த துரோகம் பற்றி தமிழக முதல்வர் வாய் திறக்கவில்லை. அவருக்கு திருமங்கலம் தொகுதி இடைத் தேர்தலுக்கு காங்கிரஸ் கட்சியின் ஆதரவு தேவைப்படுவதால், வாய் திறக்க தயாராக இல்லை. மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள பா.ம.க.வின் நிறுவனர் மருத்துவர் இராமதாசுகூட, "மத்திய அரசு எங்களை அவமானப்படுத்திவிட்டது; இழிவுபடுத்திவிட்டது" என்று பேட்டி அளித்துள்ளார். ஆனால், பெரியார் இயக்கம் ஒன்றை வழி நடத்தும் - தலைவர் என்ன சொல்லியிருக்க வேண்டும்? உண்மைகளை எவருக்கும் அஞ்சாமல் வெளிப்படுத்திக் கண்டனம் தெரிவிப்பதுதானே பெரியார் பின்பற்றிய அணுகுமுறை?

ஆனால், தனக்கு 'தமிழர் தலைவர்' பட்டம் சூட்டிக் கொண்ட வீரமணி, 'விடுதலை'யில் வெளியிட்ட அறிக்கை (4.1.2009) எப்படி இருக்கிறது? அந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ள வார்த்தைகள் மொத்தம் 305. இதில் ஒரு வார்த்தைகூட இந்திய அரசு பற்றியோ, அதன் துரோகம் பற்றியோ கிடையாது. இது பற்றி கலைஞர் வாய்திறக்காத காரணத்தால் வீரமணியும் வாயை மூடிக் கொண்டுவிட்டார் போலும். "ஓ தமிழ்ச்சாதியே! உன் நிலைக்கு என்றுதான் விடுதலை? நியாயம் பேசும் உலகமே? நீ ஏன் உண்மையானாய்?" என்று சர்வதேசத்தையே கேள்வி கேட்கிறாரே தவிர, இந்தியாவின் துரோகத்தைக் கண்டித்து ஒரு வார்த்தைகூட கிடையாது. அது மட்டுமல்ல, புலிகளை ஆதரிப்பதாக, தம் மீது குற்றச்சாட்டுகள் வந்துவிடக் கூடாது என்ற எச்சரிக்கையோடு, "பத்துத் தடவை பாடை வராது என செத்து மடிய செரு களம் கண்ட **போராளிகளுக்காக நாம் வருந்தவில்லை**. சாகத் தேவை இல்லாத அப்பாவி மக்கள், பிஞ்சுகள், என்னருமை தமிழ் இனம் இப்படி நாளும் அழிய வேண்டுமா?" என்று எழுதி, தான் போராளிகளுக்காக குரல் கொடுக்கவில்லை; அப்பாவி மக்களுக்காகவே குரல் கொடுக்கிறேன் என்று "வீர" மணி பதுங்கிக் கொள்கிறார்.

1971 ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத்துக்கான பொதுத் தேர்தல் வர இருந்த நேரத்தில்தான், சேலத்தில் பெரியார் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டை நடத்தினார். அப்போது நடந்த ஊர்வலத்தில் ராமன் படத்தை செருப்பாலடித்ததற்காக நாடு முழுதும் பார்ப்பனர்களும், காங்கிரசாரும் கூக்குரல் எழுப்பி, அதையே தி.மு.க.வுக்கு எதிரான தேர்தல் பிரச்சாரமாக மாற்றினார்கள். தி.மு.க.வை தீவிரமாக ஆதரித்துக் கொண்டிருந்த பெரியார், அந்த நிலையில் என்ன கூறினார், தெரியுமா? "ஆமாம்; ராமனை செருப்பால் தான் அடித்தேன். அடித்ததில் என்ன தவறு? இன்னும் சொல்லப் போனால், எவன் எவன் அப்படி அடிக்கவில்லையோ, அவன் மானமற்றவன்" என்று கூறினார். அதுதான் பெரியாரின் அணுகுமுறை. ஆனால், பெரியாரின் வாரிசாக அறிவித்துக் கொண்டுள்ள வீரமணியோ பெரியார் இயக்கத்தின் அடையாளங்களையே குலைத்து வருகிறார்.

கி.வீரமணி ஆசிரியராக உள்ள 'உண்மை' ஏடு, அவரது பிறந்தநாள் சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டிருக்கிறது. (டிச.1-15, 2008) அதில் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கலி.பூங்குன்றன், 1983 ஆம் ஆண்டுகளிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரை ஈழத்தமிழர் பிரச்சினைக்காக திராவிடர் கழகம் நடத்திய பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்களை எல்லாம் தொகுத்துத் தந்திருக்கிறார்.

"1983 முதல் இந்நாள் வரை ஈழத் தமிழர்ப் பிரச்சினையில் **தொய்வின்றி தொடர்ச்சியாக** ஒரே நிலையில் நின்று குரல் கொடுத்தும், போராடியும் வரும் திராவிடர் கழகத்தின் நிலைப்பாடு வரலாற்றில் என்றும் நின்று பேசக் கூடியதாகும்" என்ற "வரலாற்றுக் குறிப்போடு" அத்தொகுப்பு முடிகிறது. அத்தொகுப்பை உற்றுக் கவனித்தால், ஒரு உண்மை புரியும்.

25.12.1998 - அன்று பெரியார் திடலில் ராஜீவ் கொலை வழக்குத் தீர்ப்புக் குறித்து ஒரு கூட்டம் நடந்ததற்குப் பிறகு அடுத்த ஈழத்தமிழர்களுக்கான நிகழ்ச்சியை 7.12.2006 இல் தான் திராவிடர் கழகம் நடத்தியிருக்கிறது. இடைப்பட்ட 8 ஆண்டுகளில் திராவிடர் கழகம் ஒரு துரும்பைக்கூட ஈழத் தமிழர் பிரச்சினைக்காக அசைக்கவில்லை என்று அவர்களே பதிவு செய் திருக்கிறார்கள். என்ன காரணம்? இந்த 8 ஆண்டுகாலத்தில் ஈழத் தமிழர் பிரச் சினையே முடிவுக்கு வந்து விட்டதா? தொய்வின்றி - தொடர்ச்சியாகப் போராடுபவர்கள் ஏன் தொடர்ச்சியை விட்டார்கள்? ஏன் தோய்ந்து போனார்கள்?

இந்த இடைப்பட்ட காலத்தில் இரண்டு முக்கிய நிகழ்வுகள் தமிழகத்தில் நடந்தன. ஒன்று - ராஜீவ் வழக்கில் 'தடா' சட்டத்தின் முறையற்ற விசாரணையின் கீழ் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டோருக்கு தூக்குத் தண்டனையை நிறுத்தக் கோரி நாடு முழுதும் நடந்த பிரச்சார இயக்கம். இரண்டாவது - 2001 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் நடந்த ஜெயலலிதாவின் ஆட்சி!

1996இல் திராவிடர் கழகத்தை விட்டு வெளியேறி பெரியார் திராவிடர் கழகத்தைத் தொடங்கிய லட்சியத் துடிப்பு மிக்க இளைஞர்கள் தூக்குத் தண்டனை எதிர்ப்பு இயக்கத்தை கையில் எடுத்தார்கள். வழக்கில் உள்ள 26 தமிழர்களுக்காக மக்களிடம் நிதி திரட்டியது பெரியார் திராவிடர் கழகம். தூக்குத் தண்டனை எதிர்ப்பு மாநாடுகளை நடத்தியது. பல்வேறு அமைப்புகள் ஒன்றிணைந்து, '26 தமிழர்கள் உயிர்க்காப்பு வழக்கு நிதிக்குழு' பழ. நெடுமாறன் தலைமையில் அமைக்கப்பட்டு, அதில் பெரியார் திராவிடர் கழகம் தீவிரமாக தனது பங்களிப்பை வழங்கியது. நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய இப்பிரச்சினையில் வழக்கம் போல் வீரமணியின் திராவிடர் கழகம் ஒதுங்கிக் கொண்டுவிட்டது. தூக்குத் தண்டனை எதிர்ப்பு இயக்கத்துக்கு ஒரு ரூபாய்கூட நிதி தராத வீரமணி, அதே காலகட்டத்தில் நடந்த 'கார்கில்' யுத்தத்துக்கு தேச பக்தியோடு' ஒரு லட்சம் நிதியை அறக்கட்டளை சார்பில் வழங்கினார். தூக்குத் தண்டனை எதிர்ப்புப் பிரச்சாரப் பயணம், தமிழகம் தழுவிய அளவில் இரண்டு முறை நடந்தது. தி.க. புறக்கணித்தது. நாமக்கல்லில் நடந்த தூக்குத் தண்டனை எதிர்ப்பு மாநாட்டில் பேசுவதற்கு தோழர்

(4 ஆம் பக்கம்)

# வி.பி.சிங்கை வீழ்த்தினார்கள்; அவர் பிறப்பித்த சமூகநீதி ஆணையை வீழ்த்த முடியவில்லை

*மண்டல் பரிந்துரையை எதிர்த்து வி.பி.சிங் ஆட்சியைக் கவிழ்த்தார், ராஜீவ். அதே காங்கிரஸ் வி.பி.சிங் ஆணையை அமுல்படுத்தியே வருகிறார் என்றார் விடுதலை இராசேந்திரன். கடந்த இதழின் தொடர்ச்சி –*

1990 செப்டம்பர் 9 ஆம் தேதி 27 சதவீத இட ஒதுக்கீடு வந்தவுடன், ஒரு மாத இடைவெளியில் (1990, செப்.14-16), ம.பி. மாநிலம் போபாலில் கூடிய பாரதிய ஜனதா கட்சியின் செயற்குழு - இராமன் கோயில் கட்டுவதற்கான 'ரதயாத்திரை'யை அத்வானி தலைமையில் நடத்த முடிவு செய்து, அதற்கான ஏற்பாடுகளை செய்யும் பொறுப்பை அசோக் சிங் காவிடம் ஒப்படைக்க முடிவு செய்தார்கள். மாணவர் கலவரத்தைத் தூண்டிவிட்டு வி.பி.சிங் தானாகவே பதவி விலகும் நிர்ப்பந்தத்தை உருவாக்க முயன்ற வர்கள் அதில் தோல்வி கண்டதால் அடுத்தக் கட்ட மாக ரதயாத்திரையைத் தொடங்க திட்டமிட்டார் கள். யாத்திரையின் உண்மையான நோக்கமே மண்டல் பரிந்துரைக்கான எதிர்ப்புதான். இதை அத்வானியே ஒரு பேட்டியில் ஒப்புக் கொண்டார்.

"மண்டல் பிரச்சினை எனக்கு நெருக்கடியைக் கொடுத்தது என்பது உண்மைதான். குறிப்பாக என்னுடைய டெல்லி தொகுதியில் தீக்குளிப்புச் சம் பவங்கள் நடந்துள்ளன. பெற்றோர்கள், ஒவ்வொரு நாளும் என்னை சந்தித்து இன்னும் வி.பி.சிங் ஆட்சியை ஏன் ஆதரித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று என்னை கேட்கிறார்கள். மண்டல் பிரச்னையைக் காரணம் காட்டி, இந்த ஆட்சிக்கு தரும் ஆதரவை நாங்கள் திரும்பப் பெற்றால், அது இந்த ஆட்சிக்கு பெரும் லாபமாகிவிடும் என்று நான் கருதுகிறேன். எனவே நான் அவர்களிடம் சொன் னேன், "ஆமாம்; இந்த அரசாங்கம் மோசமாக நடந்து கொண்டு வருவது உண்மைதான். இதை வீழ்த்துவதற்கான நடவடிக்கைகள் என்ன என்பதை முடிவு செய்து, உரிய நேரத்தில் எடுப்பேன்" என்று கூறினார் அத்வானி (இந்துஸ்தான் டைம்ஸ் 21 செப். 1990).

ரதயாத்திரை தொடங்கும் முடிவை எடுத்த அடுத்த 5 நாட்களில் அத்வானி அளித்த பேட்டி இது! ஆக, அத்வானி 'ராமனை' முன் வைத்து, ரத யாத்திரையைத் தொடங்கியதே வி.பி.சிங் ஆட்சிக்கு சட்டம் ஒழுங்குப் பிரச்னையை உருவாக்கி, நெருக்கடிக்குள்ளாக்க வேண்டும் என்பதுதான். நேரடியாக 27 சதவீத இடஒதுக்கீட்டை எதிர்த்தால் பாரதிய ஜனதாவுக்குள் உள்ள வடமாநில அப்பாவி பிற்படுத்தப்பட்டோரின் எதிர்ப்புக்குள்ளாகிட நேரிடுமே என்பதால், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத் தப்பட்டோர் உரிமைக்கான அடையாளங்களை ஒழிக்க 'இந்து' என்ற கவசத்தைப் போர்த்திடும் முயற்சிகளில் பார்ப்பனியம் இறங்கியது.


திட்டமிட்டபடி பா.ஜ.க. வி.பி.சிங் ஆட்சிக்கு அளித்த ஆதரவைத் திரும்பப் பெற்றது. உண்மையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரியில் தான் அந்த ரத யாத்திரைக்கான திட்டத்தை பா.ஜ.க. தீட்டியிருந்தது. ஆனால், மண்டல் பரிந்துரை அமுலான காரணத் தால், ஆட்சியை விட்டு வைக்கக் கூடாது என்ற காரணத்தால் உடனே பயணத்தைத் தொடங் கினார்கள். (தொடங்கிய தேதி 7.8.90)

பாரதிய ஜனதா ஆதரவைத் திரும்பப் பெற்ற வுடன், நாடாளுமன்றத்தில் நம்பிக்கை கோரும் தீர்மானத்தைக் கொண்டுவரத்தயாரானார் வி.பி.சிங். பதவி பறிபோகும் என்பது அவருக்கு உறுதியாகத் தெரியும். அதற்காக நரசிம்மராவ் செய்ததுபோல் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விலை பேச வில்லை. நாடாளுமன்றத்தை சந்திக்கத் தயாரானார்; நம்பிக்கை ஓட்டுகோரும் ஒற்றைவரி தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார். சமூக நீதிக்கு கதவு திறந்த சரித்திர நாயகர்கள் - பெரியார், அம்பேத்கர் பெயர்களை நன்றியுடன் நினைவு கூர்ந்து, வி.பி.சிங் தனது உரையைத் தொடங்கினார். இந்த அவையில் - மண்டல் ஆதரவு அணி ஒன்றும், மண்டல் எதிர்ப்பு அணி ஒன்றும் இருக்கிறது. இந்த வாக்கெடுப்பின் வழியாக யார் எந்த அணியில் நிற்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் உணர்ந்து கொள்ளட்டும் என்றார். வி.பி.சிங் மண்டல் ஆணை அறிவிப்பு வெளி வந்தவுடனேயே வசந்த் சாத்தே என்ற மராட்டிய பார்ப்பன காங்கிரஸ் உறுப்பினர், நாடாளுமன்ற வாயிலிலேயே உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்தார். அப்போது காங்கிரஸ் கட்சி, இதில் தனது நிலையைத் தெரிவிக்கவில்லை. ஆனால்,

## விடுதலை இராசேந்திரன் இரங்கலுரை

நாடாளுமன்றத்தில் நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது பேசிய ராஜீவ் காந்தி, மண்டல் பரிந்துரையை முழுமையாக எதிர்த்து 3 மணி நேரம் - 10 முறை தண்ணீர் குடித்துக் கொண்டே பேசினார்.

இடஒதுக்கிடு பொருளாதார அடிப்படையில் தான் இருக்க வேண்டும் என்று பார்ப்பன குரலையே ராஜீவ் எதிரொலித்தார். நாட்டை சாதியால் கூறு போடுகிறது மண்டல் அறிக்கை என்றார். அத்வானியும் அதே குரலையே ஒலித்தார். இந்தப் பிரச்சினையில் ராஜீவ் குரலும், அத்வானி குரலும் ஒன்றாகவே ஒலித்தன என்பதை மறந்துவிடக் கூடாது. அ.இ.அ.தி.மு.க.வும், மண்டல் எதிர்ப்பு அணியில் நின்று வி.பி.சிங் ஆட்சிக்கு எதிராகவே வாக்களித்த துரோகத்தை செய்தது. கான்ஷிராமின் பகுஜன் சமாஜ் கட்சியும், வி.பி.சிங் ஆட்சியை ஆதரித்து வாக்களிக்கவில்லை. நடுநிலை என்று கூறி ஆட்சிக் கவிழ்ப்புக்கே துணை நின்றது. காங்கிரஸ் கூட்டணியில் இடம் பெற்றிருந்த தமிழ்நாட்டின் முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த மறைந்த அப்துல் சமது ஒருவர் மட்டும் தான் அணி மாறி, வி.பி.சிங் ஆட்சிக்கு ஆதரவாக வாக்களித்தார் என்பதை சுட்டிக் காட்ட வேண்டும். பொருளாதார அடிப் படையை வலியுறுத்திய ராஜிவ் காந்தியிடம் வி.பி.சிங் கேட்டார், உங்கள் கட்சி ஆளும் ஆந்திராவிலும்,



கருநாடகத்திலும் சாதி அடிப்படையில்தானே இடஒதுக்கீடு இருக்கிறது என்று. அவர் கேட்ட கேள்விக்கு ராஜீவ் மவுனமானார். உண்மையில் காங்கிரஸ் கட்சியிலே இருந்த பல பிற்படுத்தப்பட்ட, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த ஆணையை வரவேற்றாலும், அந்த உணர்வுகளை ராஜீவ் மதிக்க தயாராக இல்லை. அதே ராஜீவ் காந்தி சென்னையில் எம்.ஜி.ஆர். சிலை திறப்புக்கு வந்த போது, மண்டல் பரிந்துரையை கல்விக்கும் அமுல்படுத்த வேண்டும் என்று குரலை மாற்றிப் பேசி தமிழ்நாட்டை ஏமாற்ற இரட்டை வேடம் போட்டார்.

அத்வானி ரதயாத்திரை - பீகாருக்குள் நுழைந்த போது, மாநில முதல்வர் லல்லுபிரசாத், யாத்திரையை அனுமதித்தால் கலவரம் வரும் என்று பிரதமர் வி.பி.சிங்கிடம் கேட்டபோது, 'உங்கள் முடிவில் நீங்கள் தொடர்ந்து செல்லுங்கள்' என்று பச்சைக் கொடி காட்டினார். வி.பி.சிங் ஆட்சிக்கு ஆதரவு திரும்பப் பெறப்படுமே என்பது பற்றி அவர் கவலைப் படவே இல்லை. இன்று ஆட்சிக்கு ஆதரவைத் தக்க வைத்துக் கொள்வதற்காக கொள்கைகள் பலிகடா வாக்கப்படுவதை பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்?

வி.பி.சிங் ஆட்சிக்கு ஆதரவை விலக்கிக் கொள்ளும் அறிவிப்பை பா.ஜ.க. அறிவித்தவுடன், வி.பி.சிங் தொலைக்காட்சியில் பேசினார்: "இந்த நட்டநடு இரவில், நமக்கு மேலே உள்ள நம்மைப் படைத்தவனுக்கு வீடு கட்டப் போகிறார்கள். அவருக்கு வீடு கட்டவில்லையென்றால், வீடு இல்லா மல் தவித்துப் போய்விடுவார்" என்றுகேலியாக சுட்டிக் காட்டினார்.

வி.பி.சிங் பிரதமராக இருந்த காலத்தில் தமிழ்நாட்டில் கலைஞர் முதலமைச்சர். கலைஞர் ஆட்சி விடுதலைப்புலிகளுடன் ரகசியமாக தொடர்பு கொண்டுள்ளது என்று மத்திய உளவுத் துறை இரண்டு அறிக்கைகளை தயார் செய்து, அதை பிரதமர் அலுவலகத்துக்கு அனுப்பியது. ஆனால் பிரதமர் வி.பி.சிங் பார்வைக்கு வராமல், பார்ப்பன அதிகார வர்க்கம் மறைத்து விட்டது. அமைச்சரவை செயலாளருக்கும், பிரதமர் அலுவலகத்துக்கும் வந்த அந்த இரு அறிக்கைகளும், வி.பி.சிங் பார்வைக்கு வராமல் மறைக்கப்பட்டன. காரணம், உள் நோக்கத் துடன் தயாரித்த இந்த அறிக்கையை வி.பி.சிங் குப்பையில் போட்டு விடுவார் என்பது அவர் களுக்குத் தெரியும். அப்படி அறிக்கை தயாரித்தவர் கூட அப்போது உளவுத்துறை இயக்குனராக இருந்த இதே எம்.கே.நாராயணன் தான். இத்தனைக்கும் அப்போது விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட அமைப்புகூட அல்ல.

வி.பி.சிங் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பிறகு, ராஜீவின் பினாமியாக சந்திரசேகர் பிரதமர் பதவியில் அமர்த் தப்பட்டார். அப்போது சுப்ரமணியசாமி, சட்டத் துறை அமைச்சர். ஏற்கனவே தயாரிக்கப்பட்ட உளவுத் துறை அறிக்கை அப்போது தோண்டி எடுக்கப்பட்டு, சுப்ரமணியசாமி துறைக்குப் போகிறது. உடனே தி.மு.க. ஆட்சி, ராஜீவ் ஆலோசனைப்படி பிரதமர் சந்திரசேகரால் கலைக்கப்படுகிறது. தி.மு.க.வின் மூத்த அமைச்சர் நாஞ்சில் மனோகரன், சந்திரசேகரை நேரில் சந்தித்து எவ்வளவோ எடுத்துக் கூறியும் காதில் போட்டக் கொள்ள தயாராக இல்லை. ராஜீவ் கொலை பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜெயின் ஆணையத்தின் முன், வி.பி.சிங் அளித்த சாட்சியம். ஜெயின் அறிக்கையில் பதிவாகியுள்ளது. அதில் தி.மு.க. ஆட்சியையும், விடுதலைப் புலிகளையும் தொடர்பு படுத்தி உளவுத்துறை தயாரித்த அறிக்கை, தனது பார்வைக்கே கொண்டுவரப்படாததை வி.பி.சிங் குறிப்பிட்டுள்ளார். மேலும் தீவிரவாதம் பற்றி ஜெயின் ஆணையத்தின் முன் அவர் அளித்த சாட்சியம் இதுதான்.

"விடுதலைப் புலிகளால் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என்று கூறுவது பற்றி எனது கருத்து இதுதான். ஜம்மு காஷ்மீரிலும், பஞ்சாபிலும், அசாமிலும் கூட தீவிரவாதிகள் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன. அங்கே 100 சதவீத திருப்தியான நிலை வந்துவிடவில்லை. தமிழ்நாட்டைப் போலவே இதுவும் மத்திய அரசின் கவலைக்குரிய பிரச்சினை தான். தமிழக அரசியல் தலைவர்களோடு நான் தொடர்பு கொண்டிருந்தேன். அவர்கள் - தமிழ் நாட்டில், ஈழப் போராளிகளின் ராணுவ நட வடிக்கைகள் எதுவும் இல்லை என்று கூறினார்கள். அதே நேரத்தில், தீவிரவாதத்தைத் தடுக்கும் நட வடிக்கைகள் தமிழ்நாடு உட்பட, இந்தியாவின் வேறு பகுதிகளிலும் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதே எனது கருத்து." - ***என்றார் வி.பி.சிங்.***

விடுதலைப்புலிகளை மட்டும் தனிமைப்படுத்தி, அவர்களை முற்றாக ஒழித்துவிடவேண்டும். அதை வைத்து தி.மு.க. ஆட்சியைக் கலைத்துவிடவேண்டும் என்று திட்டமிட்டு செயல்பட்ட ஆளும் பார்ப்பன வர்க்கப் பார்வையிலிருந்து வி.பி.சிங் பார்வை வேறு பட்டே இருந்தது என்பதற்காக இதை சுட்டிக் காட்டுகிறோம்.

பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டால் தகுதி திறமை போய்விடும் என்று பார்ப்பனர்கள் கூக்குர லிட்டபோது வி.பி.சிங் கேட்டார், "தென்னகம் முழுதும் நீண்டகாலமாக இடஒதுக்கீடு அமல் படுத்தப்பட்டுத்தான் வருகிறது. அங்கே நிர்வாகம் கெட்டு போய்விட்டதா?" என்று கேட்டார். காலம் காலமாக நிர்வாக அமைப்பிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட மக்களை நிர்வாக அமைப்புக்குள் கொண்டு வருகிறேன் என்று கூறிய வி.பி.சிங், இதுதான் உண்மையான ஜனநாயகம் என்றார். இப்படி அதிகாரத்தைப் பரவலாக்குவதால்தான் ஆதிக்கவாதிகள் அலறுகிறார்கள் என்று கூறிய அவர், அதற்கு உதாரணமாக ஒரு கதையை கூறினார்.

(4 ஆம் பக்கம்)

# பகுத்தறிவுக் கவிஞர் வி.பி.சிங்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அண்ணன் தம்பிக்குள் பாகப் பிரிவினை நடந்தது. கடைசியில் இருந்த மாடு ஒன்றையும் பிரித்துவிட வேண்டும் என்றார்கள். மாட்டின் வாய்ப் பகுதி தம்பிக்கும் வால் பகுதி அண்ணனுக்கும் பிரிக்கப் பட்டது. வாய்ப்பகுதி கிடைத்த தம்பி, அன்றாடம் மாட்டுக்கு தீனி போட வேண்டும். வால் பகுதி கிடைத்த அண்ணனோ, பாலைமட்டும் கறந்து கொண்டிருந்தார். தம்பிக்கு ஆத்திரம் வந்தது. ஒரு நாள் தம்முடைய தலைப் பகுதியிலிருந்த மாட்டின் கொம்பை பிடித்து ஆட்டவே, மாடு, வால் பகுதி யிலிருந்த அண்ணனை எட்டி உதைக்க, பால் கீழே கொட்டியது. ஒவ்வொரு நாளும் இது தொடரவே அண்ணனுக்கு ஆத்திரம் வந்துவிட்டது. நான் தீனி போட வேண்டும்; நீ மட்டும் பால் கறக்க வேண்டுமா; இது நீதியா என்று தம்பி கேட்டார். அதே நீதியைத் தான், நாமும் கோருகிறோம் (பலத்த கைதட்டல்) என்றார் வி.பி.சிங். காலம்காலமாக பயனை மட்டும் அனுபவித்துக் கொண்டிருந்தவர்களிடம் உள்ள அதிகாரத்தை நான் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்து கொடுக்க முன் வந்ததால் அவர்களுக்கு என் மீது ஆத்திரம் வருகிறது என்றார் வி.பி.சிங்.

கொள்கைக்காக பதவியை தூக்கி எறிந்த வி.பி. சிங்கை முதல்வராக இருந்த கலைஞர் தமிழகத்துக்கு அழைத்தார். தமிழகம் முழுதும் நான்கு நாட்கள் சூறாவளியாக கலைஞருடன் சுற்றுப் பயணம் செய்தார் வி.பி.சிங். அந்தப் பயணத்தில் பத்திரிகை யாளர் என்ற முறையில் நானும் உடன் சென்றேன். சென்ற இடமெல்லாம் வி.பி.சிங்குக்கு உற்சாக வரவேற்பு காத்திருந்தது. மக்கள் கூட்டம் அலைமோதியது. இது பெரியாரின் மண். இது சமூக நீதியின் தலைநகரம் என்று தான் ஒவ்வொரு கூட்டத்திலும் வி.பி.சிங் குறிப்பிட்டார்.

வி.பி.சிங் பிரதமராக இருந்த காலத்தில் தான் காவிரி நடுவர் மன்றத்தை அமைத்தார். கருநாடகம் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தது. வி.பி.சிங் கட்சியைச் சார்ந்த ராமகிருஷ்ண ஹெக்டே, எஸ்.ஆர். பொம்மை, தேவ கவுடா போன்றவர்கள் எல்லாம் ஜனதா தளத்தில் முக்கிய தூண்கள். இத்தனைக்கும் கருநாடகத்தில் ஜனதாதளம் ஆட்சியைப் பிடிக்கும் வலிமையோடு இருந்தது. ஆட்சியும் நடத்தியது. ஆனால் தமிழகத்தில் ஜனதாதளத்துக்கு எந்த ஆதரவும் இல்லை. ஒரு சட்ட மன்ற உறுப்பினர்கூட அக்கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற முடியாது. இந்த நிலையிலும் தனது சொந்தக் கட்சியினர் கருநாடகத்தில் எதிர்ப்பு தெரிவித்தும், அதைப் புறக்கணித்து தமிழகத்தின் பக்கம் நின்று, காவிரி நடுவர் மன்றத்தை அமைத்தவர் தான் வி.பி.சிங். (பலத்த கைதட்டல்) இப்படி, ஒரு தலைவரை அரசியலில் பார்க்க முடியுமா?

அண்ணல் அம்பேத்கருக்கு ‘பாரத ரத்னா’ விருது வழங்கப்பட்டது, வி.பி. சிங் பிரதமராக இருந்தபோதுதான். அம்பேத்கர் நூற்றாண்டையொட்டி அவரது எழுத்து பேச்சுகளை இந்தியில் வெளியிட்டதும் வி.பி.சிங் ஆட்சியின் போதுதான். நாடாளுமன்ற வளாகத்திலே அம்பேத்கர் படமும், அப்போது தான் திறக்கப்பட்டது. அப்போது வி.பி.சிங் பேசினார். ‘கடவுள் சிலையை வடிக்கும் சிற்பி கோயில் கர்ப்பகிரகத்துக்குள் நுழைய முடியாததைப் போல், அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய டாக்டர் அம்பேத்கர் படம் நாடாளுமன்றத்தில் நுழைய முடியாமலே இருந்தது. நாடாளுமன்ற வளாகத்தில் இடமிருந்தது. ஆனால் ஆட்சியல் இருந்தவர்கள் இதயத்தில் தான் இடமில்லாமல் போய்விட்டது’ என்றார். நிர்வாக கட்டமைப்பை பரவலாக்கிட மாநிலங்களுக்கிடையிலான கவுன்சிலை உருவாக்கியது வி.பி.சிங் தான்.

இன்றைக்கு மக்களுக்குக் கிடைத்துள்ள மகத்தான ஆயுதமாகிய தகவல் உரிமை பெறும் சட்டத்துக்கு காரணமாக இருந்தவரும் வி.பி.சிங் தான். அவர் தான், இந்தக் கருத்தை தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். தனது ஒவ்வொரு பிறந்த நாளையும் டெல்லியில் வாழும் குடிசைப்பகுதி மக்களுடன்தான் கொண்டாடினார். நபிகள் நாயகம் பிறந்த நாளை மத்திய அரசின் விடுமுறை நாளாகவும் அவர்தான் அறிவித்தார். அவர் மிகச் சிறந்த ஓவியர். மிகச் சிறந்த கலைஞர். ஒன்றிரண்டு கவிதைகளை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ‘கடவுள்’ பற்றி வி.பி.சிங் எழுதிய கவிதை இது:

*கடவுள்*
*எங்கும் இருக்கிறார்*
*அதனால்தான்*
*என் கை பிடிக்குள்*
*அடக்கி வைத்துள்ளேன்*
*நீயும்*
*அவ்வாறு*
*செய்து கொள்*

*இந்த இரண்டு கைக்குள் இருக்கும்*
*கடவுள்களில்*
*பெரியவர் யார்?*

*அது*
*அவரவர்*
*கை வலிமையைப்*
*பொறுத்தது.*

- என்ன அற்புதமான பகுத்தறிவு சிந்தனை.

சோதிடர் என்ற தலைப்பில் அவர் எழுதிய கவிதை இது.

*ஜோதிடர்*
*எனது வருங்காலம் பற்றி*
*வகை வகையாய்*
*சொல்லி வைத்தார்*
*நான் கேட்டேன்*
*அவ்வளவு தூரம் வேண்டாம்.*
*இன்று இரவு – ஆம்*
*இன்று இரவு எனக்கு*
*என்ன கனவு வரும்?*
*ஜோதிடர்*
*மவுனமாகிப் போனார்.*

*விண்மீன்கள் ஆதிக்கத்தால்*
*கண்ணுறக்கம் இல்லாமல்...*
*நான் மட்டும் இருக்கிறேன்...*
*என் கனவுகள் இல்லை...*
*எனவேதான் ஜோதிடர்*
*மவுனமாகிப் போனார்.*

சோதிடம் பொய் என்பதை இவ்வளவு அழகாக படம்பிடித்தார். அவர் பகுத்தறிவாளர் என்பதை இதன் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார். உண்மையான மானுடப் பற்றுக் கொண்ட எவரும் இயல்பாகவே பகுத்தறிவாளர்களாகத் தானே இருக்க முடியும்?

இந்திய அரசியலை மண்டல் மயமாக்கி பார்ப்பன ஆதிக்கத்தை அரசியலில் வீழ்த்தியவர் வி.பி.சிங் தான்.

எந்த ஆணைக்காக வி.பி.சிங் ஆட்சியை வீழ்த்தினார்களோ, அவர்களாலேகூட வி.பி.சிங் ஆணையை வீழ்த்த முடியவில்லை. அந்த ஆணையில் கை வைத்துவிட்டு - எவரும் ஆட்சி அதிகாரத்தில் அமர முடியாது. அந்த சமூக நீதிகளை நிலைத்திருக்கும் வரை வி.பி.சிங் வரலாற்றில் நிலைத்திருப்பார்.

(நிறைவு)

# கழகத்தினரின் களப்பணிகள்

டிசம்பர் 20 ஆம் தேதி சேலத்தில் பழைய மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு, மாவட்ட செயலாளர் சக்திவேலு தலைமையில், மாவட்ட தலைவர் மார்ட்டின், அமைப்பாளர் டைகர் பாலன் முன்னிலையில் கொளத்தூர் மணி, மணியரசன், சீமான் கைதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் ஈ.ஆர். (குடியுரிமை பாதுகாப்பு நடுவம்), இராமச்சந்திரன் (ம.தி.மு.க.), இளமாறன் (இளைஞர் இயக்கம்), காமராசு (தமிழ் மண் வாசகர் வட்டம்), அருள் (சட்டக் கல்லூரி மாணவர்), மணி (சாலையோர சிறு வியாபாரிகள் சங்கம்), பிந்துநாதன் (த.தே.பொ.ச.) ஆகியோர் உரையாற்றினர். கோகுல கண்ணன் நன்றி கூறினார்.

## கொள்ளிடத்தில்

கொள்ளிடத்தில் 8.11.2008 இரவு 8.40க்கு பிரச்சாரம் துவங்கியது. கொள்ளிட ஒன்றிய தலைவர் பா.பாக்கியராசு தலைமை வகித்தார். சீர்காழி பெரியார் செல்வம் வரவேற்புரையாற்றினார். ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக சீமான் பேசிய பேச்சும், ஈழத் தமிழர்களிடம் துயரங்களை விளக்கும் காட்சிகள் திரையிடப்பட்டது. நிகழ்ச்சியின் துவக்கத்தில் கழகத் தோழர்கள் இலங்கை பயங்கரவாத அரசையும், இந்திய அரசையும் கண்டித்தும், தமிழ் ஈழத்தை ஆதரித்தும் விண்ணதிர முழக்கமிட்டனர். இரவு நேரமாக இருந்தாலும் பெரும் அளவில் பொது மக்கள் இறுதி வரை நிகழ்வை கண்டனர். கழகத்தின் முயற்சியை பாராட்டினர். இறுதியாக மாணவரணி தலைவர் அருண் நன்றியுரையாற்ற இரவு 10.30க்கு நிறைவடைந்தது.

## சீர்காழி

5.11.2008 புதன் மாலை 6 மணிக்கு திருமுல்லைவாசல் பேருந்து நிலையம் அருகில் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பெரியார் செல்வம் தலைமையுரையாற்றினார். அனைவரையும் வரவேற்று மாணவரணி செயலாளர் ரகுநாத் உரையாற்றினார். அடுத்து 8.15 மணிக்கு திருமுல்லைவாசல் மீனவர் குடியிருப்பிலும் இரவு 9.30க்கு தொடுவாய் மீனவர் வசிக்கும் பகுதிக்கு பயணம் சென்றடைந்தது. இராமேசுவரத்தில் பேசிய சீமானின் உரை ஒலிபரப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து ஈழத் தமிழர்களின் கொடுமைகளை விளக்கும் காட்சிகளை திரையில் காண்பிக்கப்பட்டது. நிகழ்வில் ஏராளமான மீனவர் கிராமமே திரண்டு வந்து பார்த்தனர். கழகத்தின் முயற்சியை அனைவரும் பாராட்டினர். இறுதியாக மாணவரணி தலைவர் அருண் நன்றியுரையாற்றினார்.

## வைத்தீஸ்வரன் கோவில்

8.11.208 சீர்காழி அருகே உள்ள வைத்தீஸ்வரன் கோவிலில் நடைபெற்ற பிரச்சாரத்திற்கு சீர்காழி ஒன்றிய துணை செயலாளர் இரா.மே.ராமமூர்த்தி வரவேற்புரையாற்றினார். மாவட்ட துணை தலைவர் இர.ரசீத்கான் சிறப்புரையாற்றினார். அதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் நூலகம் எரிக்கப்பட்ட கொடுமைகளையும், 1983 நடைபெற்ற போரில் பாதிக்கப்பட்ட துயரங்களையும், ராமேசுவரத்தில் சீமான் ஆற்றிய உரையும், ஈழத் தமிழர்களின் துயரக் காட்சிகள் திரையில் காண்பிக்கப்பட்டது. பிரச்சாரத்தில் சீர்காழி ஒன்றிய தலைவர் பொன் தேவேந்திரன், சீர்காழி பெரியார் செல்வம், அருண், ரகுநாத், சரவணன், இன்பசேகரன், தினேசு ஆகியோர் கலந்து கொண்டனர். பா.ம.க. நகர மாணவரணி செயலாளர் சிலம்பரசன் நன்றியுரையாற்றினார். நிகழ்வில் ப.ம.க., விடுதலை சிறுத்தைகள் மற்றும் இனவுணர்வாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**கொளத்தூர் மணி, மணியரசன், சீமான் சிறையில் 20 ஆவது நாள்**
**(ஜன.8 வரை)**

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொளத்தூர் மணியை அழைத்தார்கள். ஈழத் தமிழர் பிரச்சினைக்காக பெரும் பங்களிப்பை வழங்கி, கடுமையான விலை தந்து சிறைச்சாலைகளில் ஆண்டுக்கணக்கில் இருந்த தோழர் கொளத்தூர் மணி, அப்போது திராவிடர் கழகத்தில்தான் இருந்தார்.

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணியிடம், கொளத்தூர் மணி அனுமதி கேட்டார். அப்போது துணைப் பொதுச்செயலாளராக இருந்த கோ.சாமிதுரை, பங்கேற்கக் கூடாது என்றார். காரணம் கேட்ட போது, விடுதலை இராசேந்திரனும் அதில் பேசுவதால் பங்கேற்கக் கூடாது என்றார். அவர் வேறு ஒரு இயக்கம்; நான் வேறு ஒரு இயக்கம். அவர் பங்கேற்பதால், நான் பங்கேற்கக் கூடாது என்பது என்ன நியாயம் என்று, தோழர் கொளத்தூர் மணி கேட்டார். பதில் இல்லை. ஆனாலும் கழகத்தின் ஆணைக்கு கட்டுப்பட்டு தோழர் கொளத்தூர் மணி, அந்நிகழ்வில் பங்கேற்கவில்லை என்றாலும், தனது எதிர்ப்பை தி.க. பொதுச் செயலாளர் கி.வீரமணிக்கு கடிதமாக எழுதினார்.

“கடைவீதிக்குப் போன மனைவி, எங்கே கண்டவன் பின் ஓடிவிடுவாளோ என்று சந்தேகிக்கும் கணவனின் மனநிலையைப் போலவே உங்களின் அணுகுமுறை இருக்கிறது” என்று அந்தக் கடிதத்தில் தனது அழுத்தமான எதிர்ப்பை பதிவு செய்தார். கொளத்தூர் மணி கழகத்திலிருந்து பிறகு ஓரம் கட்டப்பட்டதற்கு இவை எல்லாம் காரணமாயின.

2001 ஆம் ஆண்டில் பதவிக்கு வந்த ஜெயலலிதாவுக்கு புகழாரம் சூட்டி, சமூகநீதி காத்த வீராங்கனையாக்கிய கி.வீரமணி, விடுதலைப்புலிகளின் கடும் பகைவர் ஜெயலலிதா என்ற காரணத்தால் அந்த 5 ஆண்டுகாலத்தில் எந்த சிறு நிகழ்வையும் ஈழத்தமிழர்களுக்கு நடத்தவில்லை; துரும்பையும் அசைக்கவில்லை. இதை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

ஜெயலலிதாவின் புகழ் பாடிக் கொண்டு - அவருக்கு உடன்பாடில்லை என்றால் தனக்கும் உடன்பாடில்லை என்று - ஈழத் தமிழர் பிரச்சினை பக்கம் திரும்பவே மறுத்தவர்தான், கி.வீரமணி!

2001-2006 காலகட்டத்தில் இவர்கள் திரும்பிப் பார்க்காதது ஈழத் தமிழர் பிரச்சினை மட்டும்தானா? எத்தனையோ பெரியாரிய கொள்கைகள் காவு கொடுக்கப் பட்டன; அந்தப் பட்டியல்களின் தொகுப்பும், இத் தொடரில் வரத்தான் போகிறது.

**(புரட்டுகள் உடைப்பு தொடரும்)**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 9th January 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

புரட்சிப்
பெரியார் முழக்கம்
பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 சனவரி 15, 2009 புரட்சி 8 முழக்கம் 01 விலை : ரூ.2.50

## மன்மோகன் சிங்குக்கு கருப்புக் கொடி

# 1000 கழகத்தினர் கைது

ஈழத்தில் போர் தொடருவதற்கு துணை நின்று தமிழகத் தமிழர்களின் உணர்வுகளை அவமதித்து விட்டு, தமிழகம் வந்த பிரதமர் மன்மோகன் சிங்குக்கு பெரியார் திராவிடர் கழகம், கருப்புக்கொடி காட்டும் போராட்டத்தை எழுச்சியுடன் நடத்தியது. தமிழகம் முழுதுமிருந்தும் 1000 கழகத் தோழர்கள் கருப்புக்கொடி காட்ட திரண்டு வந்தனர். பெரியார் திராவிடர் கழகம் முதலில் போராட்டத்துக்கான அறிவிப்பை வெளியிட்டது. அதைத் தொடர்ந்து, ஈழத் தமிழர் பாதுகாப்புக் குழுவின் சார்பில், அதன் அமைப்பாளர் பழ.நெடுமாறன், பிரதமருக்கு கருப்புக்கொடி காட்டும் போராட்டத்தை அறிவித்தார். ஜன. 8 ஆம் தேதி காலை 7 மணியிலிருந்து கழகத் தோழர்கள் ஆளுநர் மாளிகையில் தங்கியுள்ள பிரதமருக்கு கருப்புக்கொடி காட்ட சைதை பனகல் மாளிகை அருகே திரளத் தொடங்கினர்.

கோவை, பொள்ளாச்சி, உடுமலை, திருப்பூர், சேலம், மேட்டூர், கொளத்தூர், ஏற்காடு, பவளத்தானூர், நெமிலி, தர்மபுரி, ஈரோடு, கோபி, பவானி, சத்தியமங்கலம், புதுவை, சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கழகத் தோழர்கள் திரண்டு வந்தனர். பகுதி முழுதும் கருஞ்சட்டைக் கடலாக காட்சி அளித்தது. துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் தலைமையில் பொதுச்செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் உள்ளிட்ட 900 தோழர்கள் கருப்புக்கொடி ஏந்தி, ‘மன்மோகன்சிங்கே திரும்பிப் போ!’ என்ற முழக்கத்துடன் திரண்டனர். 20 பெண்களும் பங்கேற்றனர்.

ஈழத் தமிழர் ஆதரவு ஒருங்கிணைப்புக் குழு பழ. நெடுமாறன் தலைமையில் தோழர்கள் தியாகு, இராசேந்திர சோழன், தேனிசை செல்லப்பா, பாவலர் இராமச்சந்திரன், குமரிநம்பி, வைகறை, மெல்கியோர், கவிஞர் தமிழேந்தி, அற்புதம் அம்மாள், பா.ஜெயப்பிரகாசம் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் திரண்டிருந்தனர். அனைவரையும் காவல்துறை கைது செய்தனர். இரண்டு திருமண மண்டபங்களில் தோழர்கள் தங்க வைக்கப்பட்டனர். பிற்பகல் 3 மணியளவில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.
















# கிளிநொச்சி வீழ்ச்சி நிலையானதா?

தமிழர்களின் அரசியல் தலைநகரமாக கம்பீர மாக நின்ற கிளிநொச்சி, இப்போது ராணுவத்தின் பிடியில். இலங்கை ராணுவம் கிளிநொச்சியைப் பிடித்தபோது, சில நாய்கள் மட்டுமே தென்பட்டன. மக்கள் முழுதும் வெளியேறி விட்டார்கள். மக்களும் புலிப்படையும் இல்லாத மண்ணைப் பிடித்துள்ளது, சிங்கள ராணுவம்.

கிளிநொச்சியின் வரலாறு என்ன? முதலாவது ஈழப்போரில் யாழ் மாவட்டம் முழுதும் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் இருந்தபோது, கிளிநொச்சி நகரம் மட்டும் ராணுவத்தின் வசம் இருந்தது. இலங்கை ராணுவ தளபதி டென்சில் கொப்பேகடுவ - 1984 இல் கிளிநொச்சியில் முகாமிட்டு, விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தை வழி நடத்தி வந்தார். 1985 இல் கிளிநொச்சியில் ராணுவம் முகாமிட்டிருந்த காவல் நிலையத்தில் குண்டுகள் நிரப்பிய வாகனங்களை செலுத்தி, புலிகள் பெரும் தாக்குதலை நடத்தினர். ராஜீவ் காந்தி தமிழர்களைக் கொன்று குவிக்க அனுப்பி வைத்த இந்திய ராணுவமும், கிளிநொச்சியில் கடும் பாதிப்புகளை உருவாக்கியது. இந்திய ராணுவம் வெளியேறிய பிறகு, ஈழத்தில் இரண் டாம் கட்டப் போர் தொடங்கியது. கிளிநொச்சி யைப் பிடிக்க விடுதலைப்புலிகள் தீவிரமான தாக்குதல்களைத் தொடங்கியபோது, இலங்கை ராணுவம் கிளிநொச்சியிலிருந்து பின்வாங்கி, ஆணையிறவுக்கு தப்பிச் சென்றனர். கிளிநொச்சி மாவட்டத்தின் முழுப் பகுதியும் புலிகள் கட்டுப் பாட்டில் வந்தது.

1996 இல் சந்திரிகா பிரதமராக இருந்தபோது கிளிநொச்சியை மீட்க 'சஞ்ஜெய' என்ற பெயரில் மூன்று கட்ட ராணுவ நடவடிக்கைகளை மேற் கொண்டார். கிளிநொச்சி மீண்டும் வரும் நிலையில் ஆக்கிர மிக்கப்பட்டது. 1997 இல் விடுதலைப் புலிகளின் கடற்படை வலிமை பெற்றது. ராணுவம் யாழ்ப்பாணக் கடல் போக்குவரத்தைப் பயன்படுத்த முடியாத நிலைக்கு புலிகள் தாக்குதல்கள் நடந்தன. எனவே யாழ்ப்பாணத்துக்கு தரைவழிப் பாதையைத் தேட ஆரம்பித்த ராணுவம், 'ஜெயசிங்குறு' என்ற ராணுவ தாக்குதலை மேற்கொண்டது. வவுனியாவி லிருந்து கிளிநொச்சி வரையுள்ள தரைவழிப் பாதையை விடுதலைப்புலிகளிடமிருந்து மீட்பதே, இந்தத் தாக்குதல் நோக்கம். 'ஏ9' பாதை வழியாக ராணுவம் தாக்குதலுக்கு வந்தபோது, விடுதலைப் புலிகள் எதிர்ப்பு தெரிவிக்காமல் உள்ளே அனுமதித்தனர். வழியிலுள்ள மாங்குளம் என்ற ஊரைக் கடந்து, கிளிநொச்சிக்கு ராணுவம் எதிர்ப்பே இன்றி நுழைந்து அங்கே முகாமிட்டது. ராணுவத்தின் மற்றொரு பிரிவு எதிர்ப்பே இன்றி மாங்குளம் வந்தது. உள்ளே நுழைய விட்டு ராணுவத்தினரை வெளியேற முடியாமல் சுற்றி வளைத்து, விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் ராணுவம் பலத்த உயிர்ச் சேதத்துடன் பின்வாங்கி ஓடியது. புலிகள் நடத்தி அத்தாக்குதலுக்கு 'ஓயாத அலைகள்-2' என்று பெயர். மீண்டும் கிளிநொச்சி புலிகள் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. 1999 நவம்பரில் விடுதலைப்புலிகளின் ஓயாத அலைகள் - 3 தாக்குதல் தொடங்கியது. ஆணையிறவு புலிகள் வசமானது. விமானப்படை, தரைப்படை, கப்பல் படை என்று முப்படையினரும் முகாமிட் டிருந்தும், ஆனை யிரவை ராணுவத்தால் தக்கவைக்க முடியவில்லை.

இந்தியாவின் ராணுவ உதவிகள், ராணுவ பயிற்சிகள், ராணுவ ரீதியான ஆலோசனைகளோடு 'ராடார்' கருவிகளைப் பொருத்தி, உளவுத் தகவல்களையும் சிங்கள ராணுவத்துக்கு வழங்கி வரும் நிலையில் சீனா, பாகிஸ்தான், இந்தியாவின் ராணுவ உதவியோடு சிங்கள ராணுவம் கிளிநொச்சியைப் பிடித்துள்ளது. இந்திய ராணுவம் சென்றிருந்தபோது விடுதலைப்புலிகள் இடம் பெயர்ந்த முல்லைத் தீவில் மீண்டும் புலிகள் மக்களோடு இடம் பெயர்ந்துள்ளனர்.

## கடலூரில் மாநாடுபோல் நடந்த கூட்டம்!






'நெருப்பின் நடுவில் தமிழினம்' என்கிற தலைப்பில் கூட்டம் கடலூரில் 28.12.08 ஞாயிறு மாலை 6 மணி யளவில் சுப்புராயலு ரெட்டியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கழகப் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் தலைமை வகித்தார்.

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், இயக்குனர் மணிவண்ணன், பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினரும், பாட்டாளி மக்கள் கட்சியின் மாநில அமைப்புச் செயலாளருமான தி.வேல்முருகன், விடுதலை சிறுத்தைகள் கட்சி பொதுச் செயலாளர் சிந்தனைச் செல்வன், பெரியார் திராவிடர் கழக புதுவை மாநிலத் தலைவர் லோகு. அய்யப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கடலூர் மாவட்ட கழகத் தலைவர் வெங்கடேசு நன்றி கூறினார்.

கூட்டம் தொடங்குவதற்கு முனபே அரங்கு முழுவதும் மக்கள் நிறைந்திருந்தனர். ஈழத் தமிழர் கண்ணீர் காட்சி குறுந்தகடு திரையிடப்பட்டது. அதைத் தொடர்ந்து கூட்டம் மிக எழுச்சியோடு நடைபெற்றது.

கூட்டத்திற்கு சீர்காழியிலிருந்து 20-க்கும் மேற்பட்ட தோழர்கள் வேனில் வந்திருந்தனர். புதுவையிலிருந்து 25 தோழர்கள் மோட்டார் சைக்கிளில் ஊர்வலமாக வந்தனர். கழக தலைமை செயற்குழு உறுப்பினர் வடலூர் கலியமூர்த்தி, கடலூர் நகர மன்ற துணைத் தலைவர் தாமரைச்செல்வன் (விடுதலை சிறுத்தைகள் கட்சி), விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர்கள் திருமேனி, அறிவுடைநம்பி, கழகத் தோழர்கள் பொள்ளாச்சி பிரகாசு, விழுப்புரம் மாவட்ட தலைவர் நடராசன், சிற்பிராசன், மயிலாடுதுறை மகேசு, சீர்காழி பெரியார் செல்வம் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை தலைமை செயற்குழு உறுப்பினர் கு. அழகிரி மிகச் சிறப்பாக செய்திருந்தார். கூட்டம் நடத்த தோழர் திருமால் பேருதவியாக இருந்தார். 50-க்கும் மேற்பட்ட தோழர்களுக்கு மறுமலர்ச்சி தி.மு.க. ஒழுங்கு நடவடிக்கைக் குழு உறுப்பினர் என்.ஆர். என்கிற என். இராமலிங்கம் இரவு உணவு அளித்தார்.

**செய்தி : பொள்ளாச்சி பிரகாசு**

கருத்துரிமையைப் பறிக்கும் தமிழக அரசின் சிறையில்
கொளத்தூர் மணி, மணியரசன், சீமான்
**27 ஆவது நாள்** (ஜன.15 வரை)

## இதன் பிறகும் இந்த அரசு இருக்கத்தான் வேண்டுமா...!

'ஆயுதம் ஏந்திய விடுதலைப் புலிகளை ஒடுக்குகிறோம்' என்ற பெயரில், நிராயுத பாணிகளான அப்பாவித் தமிழர்களின் ரத்தத்தைத் தொடர்ந்து குடித்துக் கொண்டே இருக்கிறது இலங்கை ராணுவம். 'ஒரு தமிழனைக் கொன்றால் நூறு சிங்கள ஓட்டு கிடைக்கும்' என்பதே தங்கள் சூத்திரம் என இலங்கை அரசு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. இப்போது, 'புலிகளின் கோட்டை எங்கள் கைவசம்' என்ற கொக்கரிப்பையும் கேட்க முடிகிறது. கோட்டையைப் பிடிக்கும் அந்த முயற்சியில் அப்பாவித் தமிழர்கள் எத்தனை ஆயிரம் பேர் வேட்டையாடப்பட்டார்களோ!

இலங்கைத் தமிழரைப் பாதுகாக்கப் போராட்டம், ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், ராஜினாமா மிரட்டல், சர்வ கட்சிக் கூட்டம், டெல்லிப் பயணம் என்று தமிழகத் தலைவர்கள் எடுத்துக் கொண்ட எந்த முயற்சிக்குமே மத்திய அரசு கடைசி வரை செவி சாய்க்கவில்லை. நம் ராணுவ அதிகாரிகள் அங்கு சென்று பயிற்சி தரும் தகவலையும் மத்திய அரசு மறுக்கவில்லை. 'மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பி வைக்கிறோம்' என்று கொடுத்த வாக்குறுதியைக்கூடத் தந்திர மாகத் தள்ளிப் போட்டுக் கொண்டே வருகிறது டெல்லி.

இதையெல்லாம் பார்க்கும்போது, 'புலிகளை நாங்கள் முழுவதுமாக ஒடுக்கி விடுகிறோம். அதுவரை உங்கள் தேசத்து மக்களைத் திசை திருப்பும் வகையில் கண்ணாமூச்சி அரசியல் நடத்திக் காலத்தைக் கடத்துங்கள்' என்று மத்திய அரசோடு எழுதப்படாத 'புரிந்துணர்வு ஒப் பந்தம்' ஒன்றைப் போட்டிருக்கிறதோ இலங்கை அரசு என்ற பலமான சந்தேகம் தான் எழுகிறது!

நினைத்ததை எல்லாம் நிபந்தனைகளாக விதித்து, குறித்த நேரத்துக்குள் சாதித்துக் கொள்கிற தமிழக ஆளுங்கட்சி, இந்த விஷயத்தில் எள் முனையளவுகூட எதையும் சாதிக்கவில்லை என்பதுதான் வேதனையளிக்கும் நிதர்சனமான உண்மை!

'இதன் பிறகும் இந்த அரசு இருக்கத்தான் வேண்டுமோ?' என்று பொதுக்கூட்ட மேடையில் முதல்வர் தழுதழுத்த குரலில் எழுப்பிய கேள்வி, தமிழ் மக்களின் காதில் இன்னமும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது!

**நன்றி: 'ஆனந்த விகடன்' தலையங்கம் 14.1.09**

## அமைச்சர் டி.ஆர்.பாலுவின் ஆணவப் பேச்சு

தமிழக நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் டி.ஆர்.பாலு, பிரணாப் முகர்ஜி இலங்கைக்குப் போகாமல் தமிழர்களை அவமதிப்பதை நியாயப் படுத்துகிறார். வெளிநாட்டுக்கு, "நினைத்தபோது போய் விட முடியுமா? கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்து விட முடியுமா?" என்று காங்கிரசார் கூட பேசத் தயங்கும் வார்த்தைகளை தான்தோன்றித்தனமாக கூறி யிருப்பது வன்மையான கண்டனத்துக்கு உரியதாகும்.

நினைத்த போதெல்லாம் போய்விட முடியுமா? என்பது உண்மையானால், உடனடியாக இலங்கைக்குப் போய் போரை நிறுத்தச் சொல்ல வேண்டும் என்று தமிழக முதல்வர் கலைஞர், ஏன் டெல்லி சென்று வலியுறுத்தினார்? ஏன், அனைத்துக் கட்சியினர் தீர்மானம் போட்டார்கள்?

டி.ஆர். பாலு, இந்த ஆணவமான பதிலால் அவருக்குப் 'பதவி பிச்சைப்' போட்டுள்ள தமிழக முதல்வர் கலைஞரைத்தான் அவமதித்திருக்கிறார். தலை இருக்கும்போது வால்கள் ஏன் ஆடுகின்றன?

டிராக்டர்கள் வேலை நிறுத்தத்தைச் சரியாகக் கையாளாமல் போனதற்காக குட்டு வாங்கி நிற்கும் டி.ஆர்.பாலு, பிரதமரிடம் நம்பிக்கையைப் பெறு வதற்காக இந்த துரோகக் குரலை ஒலிக்கிறாரா?

# தீஸ்டா செதல்வாட் – விளக்கம்

# வெறுப்பைத் திணிக்கும் மதவெறிக் கோட்பாடு

*'காம்பட் கம்யூனலிசம்' ஆசிரியரும், மதவெறி சக்திகளுக்கு எதிராக களத்தில் நின்று போராடும் போராளியுமான தோழர் தீஸ்டா செதல்வாட் டிச.11 அன்று 'மதச்சார்பற்றோர் மாமன்றம்' சார்பில் சென்னையில் ஆற்றிய உரை.*

நம் நாடு சுதந்திரம் அடைந்துவிட்ட நிலையில், ஒரு அறுபது ஆண்டுகள் அல்லது அதற்குக் கொஞ்சம் மேல் நாம் பின்னோக்கிப் பார்ப்போமேயானால், மதச்சார்பற்ற ஜனநாயக இந்தியாவுக்கு ஏற்பட்டிருக்கும் உண்மையான சவால் என்ன என்று நம்மை நாமே கேட்டுக் கொள்வோமேயானால், நம்முன் இருக்கும் முக்கியமான பிரச்சனைகளில் ஒன்று, பெரிய அளவில் கட்ட விழ்த்துவிடப்பட்ட வன்முறைக்கு இலக்கானவர்களுக்கு நீதி கிடைக்கச் செய்வதில் ஏற்பட்ட தோல்வி தான். நம்முடைய நாட்டின் மதச்சார்பற்ற தன்மைக்கு இருக்கும் இன்னொரு முக்கிய சவால் நம்முடைய எண்ண ஓட்டங்களும், நம்முடைய மதவெறி தத்துவங்களும் தான் என்று நான் நம்புகிறேன். அவை பெரும்பான்மை சமூகத்துக்கானதாக இருந்தாலும் சரி, சிறுபான்மை சமுதாயத்தினதாக இருந்தாலும் சரி. அது பிரிவினையையும், தனிமைப்படுத்துதலையும், தன் மதக் கொள்கைக்கு எதிரானவர்களை வெறுப்பதையும் தூண்டுகிறது. ஒரு காலகட்டத்தில் இந்த நாடு முழுவதும் இதனால் மிகவும் கசப்பான வேதனையை அனுபவித்துள்ளது. ஹிந்து வலதுசாரியினராலும் அவர்களுக்கு இணையான முஸ்லிம் எதிரிகளாலும் இந்த தேசம் பிரிவினையை சந்தித்தது. நாம் அதை 1947ல் எதிர்கொண்டோம்.

நீண்ட காலத்துக்கு முன்பு முக்கிய ஆங்கில செய்தித்தாள்களும், தொலைக்காட்சி சானல்களும் கொள்கை தத்துவம், சார்ந்த பிரச்சனைகளில் ஆர்வம் காட்டின. நமது பத்திரிக்கையான 'கமயூனலிசம்' காம்பாட் இந்த வெறுப்பு சித்தாந்தத்தை துருவித் துருவி ஆராய்ந்தது. அந்த சித்தாந்தம்தான் காந்தியைக் கொன்றதா? அல்லது ஆப்கனில் பாமியான் புத்தர்களை அழித்த சித்தாந்தமா? நண்பர்களே, பாமியான் புத்தர் சிலைகளை அழிப்பதற்கு முன்னர், தாலிபான் தன் மக்கள் மீதே, தன் பெண்கள் மீதே வன்முறையை ஏவிவிட்டிருந்தது. எனவே, அடிப்படைவாதமும், சாதீயமும் அதன் மக்களுக்கே எதிரியாகும் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

ஜாதியைப் புரிந்து கொள்ளாமல் வகுப்பு வாதத்தைப் பற்றிப் பேச முடியாது. திராவிட கலாச்சாரத்தின் இதயமாக இருக்கும் தமிழ்நாட்டின் மக்களுக்கு இந்த நாட்டின் மற்ற பகுதிகளில் உள்ளவர்களைவிட இது மிக நன்றாகவே தெரியும். ஜாதியத்தின் பின்னால் உள்ள அரசியலைப் புரிந்து கொள்ள, ஒருங்கிணைக்கப்பட்ட ஹிந்து மத அமைப்பின் கொடூரமான தன்மையைப் புரிந்துகொள்ள வேண்டும். அதுதான் ஹிந்து மதத்தின் ஜாதிய அமைப்பு. அது நம் மக்களையே சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக தள்ளி வைத்தது. தான் மரியாதைக் குறைவாகக் கருதிய மிகக் கடுமையான தொழில்களை எல்லாம் அவர்கள் செய்யும்படிச் சொன்னது.

எனவே ஜாதியும், ஜாதிக்கு அடிப்படையிலான வன்முறையும் ஒன்றேதான்.

நமது பாராளுமன்றத்தைப் போலல்லாமல், நம் பஞ்சாயத் ராஜ் அமைப்பு பெண்களுக்கு 50 சதவீத ஒதுக்கீடு தருகிறது. தலித் மற்றும் முஸ்லிம் பெண்கள், சமூகத்தின் மிகக்கீழ் நிலையில் இருந்த பெண்கள், கிராம அளவிலான அரசியலில் பங்கெடுக்கும் வாய்ப்பைக் கொடுத்தது. ஆனால் நமது மதச்சார்பற்ற ஜனநாயகம் எப்படிப்பட்டது?

ஜனவரி 26 அன்று முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம பஞ்சாயத்து அமைப்பைச் சேர்ந்த தலித் பெண் தேசியக் கொடியை ஏற்ற முயற்சித்ததால், அவரை நிர்வாணப்படுத்தி அவர் மீது பாலியல் வன்முறையை கட்டவிழ்த்து விடுகிறது அவரது கிராமத்தில். அது ராஜஸ்தானாக இருந்தாலும் சரி, மகாராஷ்டிராவாக இருந்தாலும் சரி, மத்தியப் பிரதேசமாக இருந்தாலும் சரி, இதே கதை தான். ஏனெனில் ஒரு தலித் பெண்ணானவள் தேசம், தேசியம், தேசப்பற்று இதிலெல்லாம் உரிமை கொண்டாடக் கூடாது என்று அது கருதுகிறது. சுதந்திரம் கிடைத்து 60 ஆண்டுகளுக்கு மேலாகியும் உண்மையான, உயிர்த்துடிப்புள்ள ஜனநாயகத்தை அடைய நாம் இன்னும் போராடிக்கொண்டுதான் இருக்கிறோம்.



ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடத்துகிறோம், நமது தலைவர்களை நாம் தேர்ந்தெடுக்கிறோம். ஆனாலும் நமது சூழ்நிலை என்ன? முஸ்லிம் சமுதாய மக்கள் பொருளாதார, சமூக ரீதியாக உரிமைகள் மறுக்கப்படு கிறார்கள், கடந்த 55 ஆண்டுகளாக அவர்கள் நிலை மேலும் மேலும் மோசமாகிக் கொண்டு போகிறது என்பதை சச்சார் கமிட்டி அறிக்கை காட்டுகிறது. ஒவ்வொரு நாளும் 7000 குழந்தைகள் பசி, பட்டினியால் இந்தியாவில் இறந்துபோகின்றனர். பஞ்சாப், ஹரியானா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தில் உள்ள வசதி படைத்த மேல்தட்டு மக்கள் பிரிவினரால் பெண் குழந்தைகள் பிறப்பதற்கு முன்னரே, கருவறையிலேயே கொல்லப்படுகிறார்கள். மக்களில் பெரும்பான்மையானோருக்கு பொருளாதார, சமூக உரிமைகளை வழங்காத இந்த ஜனநாயகம் எந்த வகையானது? இந்த தருணத்தில் இதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

குற்றங்களுக்கு தண்டனை வழங்கி நீதியை நிலைக்கச் செய்யும் அமைப்பின் நீதித்துறை பற்றி இப்போது மறுபடியும் பார்ப்போம். நமது செஷன்ஸ் நீதிமன்றம், உயர்நீதிமன்றம், ஏன், உச்ச நீதிமன்றத்தில் கூட நிறைய வழக்குகள் இன்னும் தீர்ப்பு சொல்லப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. சராசரியாக, ஒரு சாதாரண குற்றவியல் வழக்கு முடிவுக்கு வர 15லிருந்து 20 ஆண்டுகள் ஆகின்றன. சொத்து தகராறு பற்றிய வழக்கு குறைந்தது மூன்று அல்லது நான்கு தலைமுறைகளுக்கு நடக்கின்றது. தாமதப்படுத்தப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு ஒப்பாகும் என்று சொல்கிறோம். அப்படியானால், ஒவ்வொரு நாளும் நமது நீதி மன்றங்கள் குற்றம் சார்ந்த வழக்குகளில் நீதியை மறுத்துக்கொண்டே இருக்கின்றன.

வரலாற்றில் கும்பல் கும்பலாக வன்முறைகள் நிகழ்த்தப்பட்ட சில முக்கியமான தேதிகளைப் பார்ப்போம். அத்தகைய வன்முறைகள் மக்களில் ஒரு பிரிவினர் மீது மட்டும் ஏன் கட்டவிழ்த்துவிடப்பட்டது? ஏனென்றால் அவர்கள் கூலிக்கு வேலை செய்யும் பிரிவினர், ஏனென்றால் அவர்கள் சிறுபான்மையினர், அவர்கள் தலித்துகள், வன்முறைக்கு இலக்கான அவர்களுக்கு நீதி வழங்கப்படவே இல்லை.

1984ல், நமது முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் படுகொலைக்குப் பிறகு, டெல்லியில் 3006 பேர் கொல்லப் பட்டனர். நாடு முழுவதும் 7000 பேர் கொல்லப்பட்டனர். ஆனால் மூன்று பேர் மட்டும்தான் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டனர். கொல்லப்பட்ட சீக்கியர் ஒருவரின் விதவையான தர்பன் கௌர் வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் எச்.கே.எல். பகத்தால் மிரட்டப்பட்டார். தனக்கு நீதி கிடைக்கும் என்று அவர் இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறார். 24 ஆண்டுகளுக்கு மேலாகியும்!

புது டில்லியிலும் நாட்டின் மற்ற பகுதிகளிலும் நடத்தப்பட்ட சீக்கியர்களுக்கு எதிரான போராட்டங்கள் முடிந்த இரண்டு மாதங்களுக்குப் பிறகு போபால் விஷவாயுக்கசிவு துன்ப நிகழ்ச்சி நடந்தது. சட்டத்துக்குப் புறம்பாக பன்னாட்டு கம்பெனியால் கசியவிடப்பட்ட மிதைல் விஷ வாயுவினால் 3000 ஊழியர்கள் இறந்தனர். இன்னும் உயிரோடு இருப்பவர் களும் விஷவாயுக் கசிவினால் ஏற்பட்ட கதிர்வீச்சுகளால் மெல்ல மெல்ல இறந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு இதுவரை எந்த இழப்பு ஈடும் தரப்பட வில்லை. பல அரசாங்கங்கள் மாறி மாறி வந்து போயின. இப்போது யூனியன் கார்பைடின் மறு அவதாரம் போன்ற இன்னொரு வகையான ரசாயனம் மகாராஷ்டிராவின் உள்ளே வர, விரிந்த கைகளுடன் அன்புடன் வரவேற்றுள்ளது. இதுதான் உலகமயமாக்கல், இதுதான் தாராளமயமாக்கல்.

ஜட்ஜர், திருநெல்வேலி போன்ற பகுதிகள் தலித்துகள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். குற்றவாளிகள் எவ்வளவு பேர் பிடிபட்டுள்ளனர்? எவ்வளவு விழுக்காடு குற்றவாளிகள் கண்டுபிடித்து தண்டிக்கப் பட்டுள்ளனர்? (தொடரும்)

## ஏன்? ஏன்? ஏன்?

அன்றைக்குத் தமிழர்கள், 'கங்கை கொண்டான்', 'கடாரம் வென்றான்' என்பது மட்டும் பழங்கதையாக வில்லை. இரு மாதங் களுக்கு முந்தைய நம் ஆவேச முழு, கொந்தளிப்பும், சவாலும்கூட 'பழங்கதை' ஆகிவிட்டதா?

தமிழகத்திலும் இலங்கைப் பிரச்னைக்காக இன உணர்வை வெளிப்படுத்தி உண்ணாவிரதம் இருந் தார்கள். சட்டமன்றத்தில் மத்திய அரசுக்குக் 'கெடு' விதித்தார்கள். இன்னும் நான்கு மாதங்களுக்குள் நிறைவடையப் போகிற நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளைத் துறக்கப் போவதாக வசனம் பேசினார்கள். நிதி திரட்டினார்கள். டெல்லிக்குச் 'சுற்றுலா' போய் வந்தார்கள். உணர்வு வயப்பட்டுப் பேசியவர் களைத் தூக்கிச் சிறையில்தள்ளினார்கள்.

இன உணர்வைக் காப்பதாகச் சொல்லி கவிதையும் எழுதலாம். கூட்டணி தர்மம் அதைவிட மேலோங்கித் 'தண்டனை'யும் அளிக்கலாம். இன உணர்வுக்கு வால்; கூட்டணி உறவுக்குத் தலை.

இலங்கை ராணுவம் கிளிநொச்சியைப் பிடித்து விட்டதாக அறிவிக்கிறது. முல்லைத் தீவை நோக்கி முன் னேறிக் கொண்டிருக்கிறது. லட்சக்கணக்கான தமிழர்கள், ஒண்டியிருந்த கொஞ்சம் நிழலையும் இழந்து பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். பிரபாகரனைப் பிடிக்கும் முயற்சியில் நடக்கும் இந்த இனக் கொடூரத்தை விலகி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது மத்திய அரசு.

இலங்கை பற்றி எரியும்போது இங்குள்ள கட்சிகள் திருமங்கலத்தில தங்களுக்குள் மோதி துணை ராணுவத்தை வரவழைக்கும் சூழ்நிலையை உருவாக்கியிருக்கின்றன. புலி களுக்கு ஆதரவுக்குரல் கொடுப்பது என்பதுவேறு; இலங்கைத் தமிழர் களுக்கு ஆதரவுக்கரம் நீட்டுவது என்பது வேறு.

இந்த இரண்டையும் சேர்த்துக் குழப்பி, ஈழத் தமிழர் களின் பிரச்சினையைப் பார்க்க மறுக்கிற எதிர்நிலையில் காங்கிரசுக்கு இங்குள்ள கட்சிகள் எந்தவிதத்திலும் சளைத் தவை அல்ல. இல்லை யென்றால் இவர்களின் மௌனத்திற் கும் செயலற்ற தன்மைக்கும், இயலாமைக்கும் என்ன அர்த்தம்?

**நன்றி : 'குமுதம்' தலையங்கம் 14.1.2009**

## சிறை வைக்கப்பட்ட கொளத்தூர் தோழர்கள்




22.12.08 திங்கள் மாலை 5 மணியளவில் கொளத்தூர் பேருந்து நிலையத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இயக்குனர் சீமான், ததேபொக. பொதுச்செயலாளர் பெ.மணியரசன் மற்றும் கைதைக் கண்டித்து காவல்துறையின் தடையை மீறி மாவட்ட தலைவர் மார்ட்டீன் தலைமையில், மாவட்ட செயலாளர் சக்திவேல், மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் ஆகியோர் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழின விரோதி கே.வி.தங்கபாலு, ஈ.வெ.கி.எஸ். இளங்கோவனின் உருவ பொம்மையை தீயிட்டு எரிக்கப்பட்டது. தோழர்கள் 150-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். பெண்கள், மாணவர்கள், ஆதரவாளர்கள் தவிர கழகத் தோழர்கள் 55 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். தோழர்களை மண்டபத்திலிருந்து அழைத்து செல்லும்போது தமிழின உணர்வாளர்கள் முழக்கமிட்டு, பட்டாசு வெடித்து பறையடித்து உற்சாகமுடன் வழியனுப்பி வைத்தனர். இந்நிகழ்வு கொளத் தூர் மக்களிடையே பெரும் பரபரப்பையும், வரவேற்பையும் ஏற்படுத்தியது.

கைது செய்யப்பட்ட தோழர்கள் 25.12.08 அன்று பிணையில் விடுதலை செய்யப் பட்டனர்.

கைது செய்யப்பட்ட தோழர்கள்: மார்ட்டீன், சக்திவேல், டைகர் பாலன், சூரியகுமார், இளஞ் செழியன், விசயகுமார், இளவரசன், சம்பத் குமார், தர்மலிங்கம், அருள்செல்வம், பெ.சக்திவேல், பிரவின் குமார், கணேசன், ஆனந்தன், இரா.முத்து குமார், இராரவிச்சந்திரன், குமரப்பா, சுரேசுகுமார், தேவராசு, முத்துராசு, பாஸ்கர், செல்வம், நல்ல தம்பி, இராசேந்திரன், சேகர், மந்திரி, குமரேசன், சின்னண்ணன், சக்திகுமார், விசுவநாதன், மூர்த்தி, குமார், சந்திரசேகர், சேட்டுகுமார், பூபதி, கண்ணன், ராமமூர்த்தி, சென்னியப்பன், சுரேசு, இராசன், முனுசாமி, ஆட்டோ செல்வம், முத்துசாமி, நாகராசன், கோவிந்தராசு, பூசாரி (எ) பெரியசாமி, சுப்பிரமணி, ரவி, மோகன்ராசு, வெள்ளையன், குமாரசாமி, எழிலன், குமார், துரை. சுந்தரம், மாது.

# ‘குடிஅரசு’ ‘விடுதலை’யை தேடுகிறார்களாம்!

**திரிபுவாத திம்மன்கள் - யார்? (16)**

இந்திய வரலாற்றில் பார்ப்பனியத்துக்கு எதிராக முதல் புரட்சியைத் தொடங்கியவர் புத்தர். பகுத்தறிவு பொருள் முதல்வாதக் கருத்துகளை முன் வைத்த புத்தத்தை கருத்து முதல்வாதத்தின் பக்கம் திருப்பிடும் பார்ப்பன சதிகள் நடந்தன. புத்தருக்குப் பிறகு ஹீனயான பவுத்தம், மகாயன பவுத்தம் என்று புத்த மார்க்கம் இரு பிரிவுகளாயிற்று. நாகர்ஜுனன் எனும் பார்ப்பான், மகாயான பவுத்தப் பிரிவைப் பார்ப்பனிய கோட்பாடுகளுக்கு இசைந்ததாக மாற்றி அமைத்துவிட்டான். புத்தர் உருவாக்கிய சமூகப் புரட்சி தடம் புரண்டது.

வேதங்களை மறுத்த கலகக் குரல்கள் பலவும் பார்ப்பனியத்தால் பல்வேறு சூழ்ச்சிகளால் வீழ்த்தப்பட்டதை வரலாறுகள் உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

நீலகேசி என்ற சமண காப்பியத்தில் வரும் நீலகேசி என்ற பெண் வேதம் சுயம்புவாகத் தோன்றியது என்ற பார்ப்பன கருத்தியலை மறுத்தார். வேதத்தையும் யாகங்களையும் கடுமையாக சாடும் வாதங்கள் நீலகேசியில் இடம் பெற்றுள்ளன. இப்படி பார்ப்பனர்களை சாடும் வாதங்கள் அடங்கிய வாத சருக்கத்தில் பல செய்யுள்கள் காணாமலே போய்விட்டன.

வேத, கடவுள் மறுப்புக் கொள்கையாளர்களின் இலக்கியங்களை எல்லாம் பார்ப்பனர்கள் திட்டமிட்டு அழித்தார்கள். ‘லோகாயதம்’ என்ற தத்துவம், கடவுள் மறுப்பை பேசியது. பார்ப்பனர்களை எதிர்த்தது. லோகாயதவாதிகள் பல நூல்களை எழுதினார்கள். ஆனால், அவைகள் முழுமையாக அழிக்கப்பட்டுவிட்டன. இந்திய தத்துவங்கள் பற்றிய பல ஆய்வு நூல்களை எழுதிய தேவிப் பிரசாத் சட்டோபாத்யாய இவ்வாறு குறிப்பிடுகிறார்:

> *“லோகாயதர்களின் உன்னதப் படைப்பிலயக்கியங்களின் மூலப் படிகள் மீட்கவே முடியாதவாறு அழிக்கப்பட்டு விட்டன. துண்டு துண்டாக வெட்டப்பட்ட சில வரிகள் காணக் கிடைக்கின்றன. அவைகூட லோகாயத எதிர்ப்பாளர்களின் நூல்களில் தான் உயிர்வாழ்கின்றன. அதாவது லோகாயதக் கோட்பாடுகளை மறுத்துரைக்கவும், இகழ்ந்துரைக்கவும் பார்ப்பன நூலாசிரியர்கள் லோகாய வரிகளை மேற்கோள்களாகப் பயன்படுத்தியுள்ள இடங்களில் மட்டும் உயிர் வாழ்கின்றன” - என்று குறிப்பிடுகிறார். (‘லோகாயதா’ நூல்).*

பார்ப்பனர்களுக்கு தானம் வழங்கிய நிலங்களையெல்லாம் பறிமுதல் செய்த களப்பிரர்கள் ஆட்சி பற்றிய வரலாற்றுக் குறிப்புகளே இல்லாமல் அழித்துவிட்டு, ‘களப்பிரர் காலம் இருண்ட காலம்’ என்று வரலாற்றை எழுதியவர்கள் பார்ப்பனர்கள்தான். இப்படி வேத பார்ப்பன எதிர்ப்பு இயக்கங்களும், சிந்தனைகளும், தலைவர்களும் வரலாற்றில் சுவடு இல்லாமல் அழித்தொழிப்புக்கு உள்ளான அவலங்கள் வரலாற்றில் ஏராளம் உண்டு. இந்த வேத பார்ப்பனக் கொடுமைகளை எல்லாம் மக்களுக்கு எடுத்துச் சொல்லி, மகத்தான பார்ப்பன எதிர்ப்பு இயக்கத்தை நடத்திய பெரியார் சிந்தனைகளும் இதே விபத்துகளை சந்திக்கிறது என்பது மிகப் பெரும் அவலமாகும்!

பெரியாரும், அவருடைய இயக்கமும் கட்டுப்பாடாக பார்ப்பன ஊடகங்களால் இருட்டடிக்கப்பட்டே வந்த நிலையில் அந்த இயக்கத்தின் எதிர்நீச்சல் பயணத்தை உள்ளது உள்ளவாறே அறிவதற்கான ஒரே ஆதாரமாகத் திகழ்பவை பெரியர் நடத்திய ஏடுகள்தான். அவைகள் மறைந்து விட்டால், அக்கால கட்டங்களில் பெரியார் இயக்கத்தின் வரலாறுகளும் இருண்டு போய் விடுகிறது. பயணத்தின் பாதை தடைபட்டு விடுகிறது. பெரியாரின் எழுத்து பேச்சுகளின் வரலாற்றுப் பதிவுகளை பெரியார் இயக்கம் நடத்துவதாகக் கூறுவோரே, தொலைக்கலாமா? அதைக் கருவூலமாக கண்காணித்துப் பேண வேண்டியவர்களே, அவற்றை எக்கேடு கெட்டுப் போனால் என்ன, என்று அலட்சியப்படுத்தலாமா?

பெரியார் சுயமரியாதைப் பிரச்சாரத்தின் நிறுவனர் - திராவிடர் கழகத் தலைவர் என்ற பதவிப் பொறுப்புகளோடு உலாவரும் கி.வீரமணி, கடந்த டிசம்பர் 20 ஆம் தேதி ‘விடுதலை’யில் வெளியிட்ட ஒரு அறிவிப்பு இதற்கு சான்றாக விளங்குகிறது!

அதை அப்படியே வெளியிடுகிறோம்:


கழகத் தோழர்களின் கவனத்திற்கு....

பெரியார் பகுத்தறிவு நூலகம் மற்றும் ஆய்வு மையத்தில் “பெரியார் களஞ்சியம்” தொகுப்புப் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. நமது இயக்க இதழ்களான ‘விடுதலை’, ‘குடிஅரசு’ போன்ற இதழ்கள் நமது நூலகத்தில் விடுபட்டுள்ளன. தாங்கள் கழகத் தோழர்கள் மற்றும் கழக பற்றாளர்கள் கீழ்க்காணும் ஆண்டுக்குரிய இதழ்களை நூலகத்திற்கும், கழகத்திற்கும் கொடுத்து உதவ வேண்டும்.

தேவையான ஆண்டுகள் மற்றும் மாதம்.

‘விடுதலை’

1. 1935, 1936 முழுவதும் (சில மாதங்கள், தேதிகள் மட்டும் உள்ளன)
2. 1937 – ஜனவரி முதல் ஜூன் வரை
3. 1938 – பிப்ரவரி மாதம் மட்டும்
4. 1941 – அக்டோபர், நவம்பர் மாதம் மட்டும்.
5. 1942 – ஏப்ரல், மே மட்டும்
6. 1943 – அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்கள்.
7. 1944 – ஜனவரி முதல் டிசம்பர் வரை முழுவதும் வேண்டும்.
8. 1945 – அக்டோபர் முதல் டிசம்பர்.
9. 1946 – ஜனவரி – மே மாதம் வரை
10. 1952 – மார்ச் முதல் டிசம்பர் வரை
11. 1956 – ஏப்ரல் மாதம் மட்டும்
12. 1957 – மார்ச், ஏப்ரல், ஜூன் – ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மாதங்கள்.
13. 1989 – மார்ச் மட்டும் விடுபட்டுள்ளது.
14. 1990 – ஜனவரியில், 8, 13, 14, 16, 21, 28 – ஆகிய தேதிகள் மட்டும் மே மாதத்தில் – 6, 7, 20, 25, 30 ஆகிய தேதிகள் விடுபட்டுள்ளன.

‘குடிஅரசு’ வாரஇதழ்

1. 1925 – மே மாதம் முதல் 1928 வரை
2. 1946 முதல் 1949 வரை

– கி. வீரமணி,
செயலாளர்,
பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம்

1935, 1936 ஆம் ஆண்டுகளுக்கான ‘விடுதலை’ நாளேடுகள், தங்களிடம் முழுமையாக இல்லை என்கிறார். இதைத் தவிர 12 ஆண்டுகளுக்கான ‘விடுதலை’ நாளேடுகள் பாதிக்கு மேல் அவர்களிடம் இல்லை. இதைவிடக் கொடுமை - 1989, 1990 ஆம் ஆண்டுகளின் ‘விடுதலை’ நாளேடுகள்கூட இவர்களிடம் முழுமையாக இல்லை என்பதாகும். ‘குடி அரசு’ வார பத்திரிகையோ, 8 ஆண்டுகளுக்கான பத்திரிகை இவர்களிடம் ஒன்றுகூட இல்லை என்பதாகும். இது ஏதோ, இல்லாத பத்திரிகைகள் என்று பார்ப்பது மிகவும் குறுகிய பார்வையாகும். முழுமையான வரலாறுகளைக் கூறும் ஆவணங்களே இல்லாமல் போவதால் வரலாறுகளும் இருட்டுக்குள் தள்ளப்பட்டு விடுகிறது; இது வரலாற்றுத் துரோகம்!

பெரியார் கருத்துக் கருவூலங்களைப் பாதுகாப்பதைவிட பெரியார் இயக்கத்துக்கு முதன்மையான பணி வேறு இருக்க முடியுமா? பெரியார் கொள்கைகளை பரப்புவதுகூட இருக்கட்டும்; அவர் சேமித்து வைத்த அறிவுச் செல்வங்களை பாதுகாக்கவாவது வேண்டாமா? பெரியாரின் கட்டிடங்களையும், நிலங்களையும் சொத்க்களையும் பத்திரப்படுத்தினால் போதும். இந்தக் “காகிதங்கள்”, சந்தையில் விலை போகாது என்று கருதி விட்டார்கள் போலும்!

இந்த வரலாற்று ஆவணங்கள் தங்களிடம் இல்லை என்பதுகூட - எப்போது இவர்களுக்கு தெரிகிறது?

பெரியார் திராவிடர் கழகம் ‘குடிஅரசு’ தொகுப்பு வெளியீட்டு முயற்சிகளுக்குப் பிறகுதான். பெரியார் திராவிடர் கழக செயல்பாட்டை முடக்கத் துடிக்கும் போதுதான் இவ்வளவு பெரியார் நூல்கள் தங்களிடம் இல்லை என்பதே இவர்களுக்குத் தெரிகிறது. பெரியார் திராவிடர் கழகம் இந்த முயற்சியில் இறங்காவிட்டால், இந்த வரலாற்று ஆவணங்களைத் தேடும் முயற்சிகளில் இறங்கியிருக்கவே மாட்டார்கள்.

பார்ப்பன வேத எதிர்ப்பு வரலாற்றுச் சான்றுகளை அழித்தவர்கள் பார்ப்பனர்கள் தான்! ஆனால், பெரியார் வரலாற்று ஆவணங்களைத் தொலைத்தவர்கள் அது பற்றி இத்தனை ஆண்டுகளாக கிஞ்சித்தும் கவலைப்படாதவர்கள். பெரியார் இயக்கத்தின் பெயரைச் சொல்கிறவர்களாகவே இருக்கிறார்கள் என்பது வரலாற்று துரோகம் அல்லவா?

பெரியார் திராவிடர் கழகத்தைப் பார்த்து, ‘திரிபுவாதிகள்’, ‘புரட்டர்கள்’, ‘திருடர்கள்’, ‘திம்மன்கள்’ என்று தரம் குறைந்த வார்த்தைகளைத் தேடித் தேடி எழுதும் கி.வீரமணியை கேட்கிறோம்:

இப்படி ஒரு அறிக்கை வெளியிடும் நிலைக்கு நீங்கள் வந்திருப்பதே, அவமானம் அல்லவா? பெரியாருக்கு இழைத்த துரோகம் அல்லவா?

‘நான் என்ன செய்வது; எனக்கு முன்னால் இருந்தவர்கள் பாதுகாக்கவில்லை’ என்று சமாதானம் சொல்வீர்களேயானால், இதைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளில் இறங்குவதற்கு இவ்வளவு காலம் தேவையா என்ற கேள்விக்கு என்ன சமாதானம் கூறப் போகிறீர்கள்? அதுவும், 1989, 90 ஆம் ஆண்டு ‘விடுதலை’ ஏடுகள் கூட காணாமல் போனதற்கான பழியை எவர் மீது போடப் போகிறீர்கள்? பதில் வருமா?

**(புரட்டுகள் உடைப்பு தொடரும்)**

## இனி எவரும் வெளியிடலாம்
# காந்தி நூல்களின் பதிப்புரிமை முடிவுக்கு வந்தது

காந்தியின் கடிதங்கள், நூல்கள், கட்டுரைகளை வெளியிடும் உரிமை ‘நவஜீவன் டிரஸ்ட்’ என்ற அறக் கட்டளையிடம் தான் இதுவரை இருந்து வந்தது. 1919 ஆம் ஆண்டிலிருந்து இந்த அறக்கட்டளைதான் இதற்கான உரிமையை தன்னிடம் வைத்திருந்தது. இதற்கான பதிப்புரிமையை சட்டப்பூர்வமாக, இந்நிறுவனம் தன்னிடம் வைத்திருந்தது.

காந்தியின் நூல்களை வெளியிட விரும்பிய நிறுவனங்கள் - இந்த அறக் கட்டளையிடம் அனுமதி பெற்று, நூல்களை வெளியிட்டு, அதற்கான ‘ராயல்டி’யை இந்நிறுனத்துக்கு வழங்கி வந்தன.

1957 ஆம் ஆண்டு பதிப்புரிமை சட்டம் 22வது பிரிவின்படி, காந்தி புத்தகங்கள் மீதான உரிமை மீண்டும் இந்த அறக்கட்டளைக்கே தொடர்ந்து கிடைத்தது. கடந்த ஜனவரி 2009 முதல் தேதியோடு பதிப்புரிமை பெற்று 60 ஆண்டுகள் முடிந்துவிட்டன. பதிப்பாளர்கள் இறந்து 60 ஆண்டுகளாகி விட்டால் பதிப்புரிமை தானாகவே சட்டப்படி முடிவுக்கு வந்துவிடும் என்பதால் கடந்த ஜனவரி முதல் ‘நவஜீவன் டிரஸ்ட்’ பதிப்புரிமையை இழந்துவிட்டது. இனி, இந் நிறுவனத்தின் அனுமதியின்றியே காந்தி நூல்களை எவரும் வெளியிடலாம்.

டிரஸ்ட் நிர்வாகிகள் இது பற்றிக் கூறுகையில், “காந்தி நூல்களை இனி யார் வேண்டுமானாலும் வெளியிடலாம்; நாங்களும் மலிவு விலையில் வெளியிட்டு பரப்புவோம்” என்று கூறியுள்ளனர்.

காந்தி நூல்கள் பரவ வேண்டும் என் பதில் கவலையுள்ள இந்த அறக் கட்டளை நிர்வாகிகளைப் பாராட்டலாம்.

**கழகத்தினருக்கும், வாசகர்களுக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் வாழ்த்துகள்.**


**– ஆசிரியர்**

**“புரட்சிப் பெரியார் முழக்கம்”**
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 15th January 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2040 சனவரி 22, 2009 புரட்சி 8 முழக்கம் 02 விலை : ரூ.2.50

## ஏ.கே. அந்தோணிக்கு கருப்புக்கொடி: 50 கழகத்தினர் கைது

கோவை வந்த மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சருக்கு கருப்புக் கொடி காட்ட முயன்ற கழகத்தினர் 50 பேர் கைது செய்யப்பட்டனர். ஈழத் தமிழர்கள் மீது சிங்கள ராணுவம் நிகழ்த்தி வரும் இனப் படுகொலையை நிறுத்தக்கோரி தமிழகம் வரும் மத்திய அமைச்சர்களுக்கு எதிராக கருப்புக்கொடி காட்டப் படும் என்று பெரியார் திராவிடர் கழகம் அறிவித்திருந்தது. அதன்படி கடந்த ஜன.8 ஆம் தேதி சென்னை வந்த பிரதமருக்கு கருப்புக்கொடி காட்ட முயன்ற 1000க்கும் அதிகமான கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். திருச்சி வந்த மத்திய அமைச்சர் ஜி.கே. வாசனுக்கு கழகம் கருப்புக்கொடி காட்டியது.

இதற்கிடையில் ஜன.18 ஆம் தேதி மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே.அந்தோணி, கோவைக்கு தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க வந்திருந்தார். கோவை வரும் செய்தி அறிந்த கழகத்தினர், உடனே கருப்புக்கொடி போராட்டத்துக்கு தயாரானார்கள். அமைச்சர் ஏ.கே.அந்தோணி நிகழ்ச்சி முடிந்து விமானம் மூலம் திருவனந்தபுரம் போக விமான நிலையம் போகும் வழியில் பகல் 12 மணியளவில் பீளமேடு ஹோப்ஸ் கல்லூரி அருகே கருப்புக் கொடி களுடன் திரண்டனர். ஏராளமான போலீசார் குவிக்கப் பட்டனர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆறுச்சாமி தலைமையில் கோபால் (கோவை மாநகர செயலாளர்), திருப்பூர் துரைசாமி (கோவை-வடக்கு மாவட்டக் கழகத் தலைவர்), வெள்ளியங்கிரி (பொள்ளாச்சி நகர கழக செயலாளர்), பன்னீர்செல்வம் (தமிழ்நாடு மாணவர் கழகம்), திருப்பூர் முகில்ராசு, யாழ். நடராசன் (உடுமலை நகர கழகத் தலைவர்) உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட தோழர்கள் கருப்புக்கொடியுடன் திரண் டனர். தோழர்கள் கருப்புக்கொடியுடன் திரண்ட செய்தி அறிந்து, அமைச்சர் ஏ.கே.அந்தோணி வேறு பாதையில் விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ஈழத் தமிழர்கள் மீதான போரை நிறுத்தக் கோரியும், மத்திய அரசின் துரோகத்தையும் கண்டித்து தோழர்கள் முழக்கமிட்டனர். காவல்துறை அனைவரையும் கைது செய்தது. மாலையில் விடுதலை செய்யப்பட்டனர்.

## தீக்குளிக்க முயன்ற 3 கழகத்தினர் கைது

ஈழத்தில் தமிழர்கள் மீதான இனப் படுகொலைக்கு துணை போகும் இந்திய பார்ப்பன அரசின் துரோ கத்தைக் கண்டித்து, தீக்குளிக்க முயன்ற 3 கழகத் தோழர்களை போலீசார் சுற்றி வளைத்து, தடுத்து கைது செய்தனர். கடந்த 16 ஆம் தேதி பகல் 11 மணியளவில் நடந்த இந்த சம்பவம், கோவையில் பெரும் பரபரப்பை உருவாக்கியது. திடீரென்று, கோவை ஆட்சியர் அலு வலகம் முன் வெவ்வேறு பகுதியிலிருந்து வந்த மூன்று கழகத் தோழர்கள் கையில் பெட்ரோலுடன் வந்து உடல் முழுதும் கொட்டிக் கொண்டு, இந்திய பார்ப்பன அரசின் துரோகத்தை எதிர்த்து முழக்கமிட்டு தீக்குளிக்க முயன்றனர்.

300க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்ட நிலையில் அவர்கள் பாய்ந்து சென்று தோழர்களை மடக் கிப் பிடித்து கைது செய்தனர். கழகத் தோழர்கள் ஈரோடு பெரியார் ஜெகன், திருப்பூர் கழகத் தோழர்கள் கோபிநாத், சம்பூகன் என்கிற சண்முகம் ஆகிய மூவரும் கைது செய்யப் பட்டனர்.

## தோழர் திருமாவை ஆதரித்து கழகத்தினர் குவித்த தந்தி

மறைமலைநகரில் ஈழத் தமிழர் களுக்காக பட்டினிப் போராட்டத்தை நடத்திய விடுதலை சிறுத்தைகள் கட்சி யின் தலைவர் தொல். திருமாவளவன் அவர்களை கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் தலைமையில் சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் நேரில் சந்தித்து ஆடை போர்த்தி, ஆதரவினை வெளிப்படுத்தினர். புதுவை கழகத் தலைவர் லோகு. அய்யப்பன் தலைமை யில் 100க்கும் அதிகமான பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள், தோழர் திருமாவளவனை நேரில் சந்தித்து, ஆதரவு தெரிவித்தனர். தமிழ்நாடு முழுதுமிருந்தும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பெரியார் திராவிடர் கழகம் சார்பில் தோழர்கள் நூற்றுக் கணக்கான தந்திகளை தோழர் திருமா வளவனுக்கு அனுப்பினர்.

– *உள்ளே தலையங்கம்*

### *கொளத்தூர் மணி – மணியரசன் – சீமான்*

## பிணையில் விடுதலை

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ்த் தேச பொதுவுடைமை கட்சி பொதுச்செயலாளர் மணியரசன், இயக்குனர் சீமான் ஆகியோர் 31 நாட்கள் சிறைவாசத்துக்குப் பிறகு உயர்நீதிமன்றம் 19.1.2009 அன்று பிணை வழங்கி உத்தரவிட்டது. பிணை மனுவை கழக வழக்கறிஞர்கள் எஸ்.துரைசாமி, இளங்கோ ஆகியோர் தாக்கல் செய்தனர். தடை செய்யப்பட்ட இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது ஒரு குற்றமல்ல என்று வழக்கறிஞர் துரைசாமி வாதிட்டார்.

உயர்நீதிமன்ற நீதிபதி டி.சுதந்திரம் அவர்கள் முன் மனு விசாரணைக்கு வந்தது. ரூ.10 ஆயிரத்துக்கு சொந்த பிணைத் தொகையும், அதே தொகைக்கு இரு நபர் பிணை உறுதியும் வழங்கி, பிணையில் விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டார். காவல்துறை அழைக்கும் போது விசாரணைக்கு வரவேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த டிசம்பர் 14 ஆம் தேதி ஈரோட்டில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசிய பேச்சுகள் தேச விரோதமானவை என்று குற்றம்சாட்டப்பட்டு, மூவரும் கைது செய்யப்பட்டனர். டிசம்பர் 19 ஆம் தேதி கைது செய்யப்பட்டு, கோவை மத்திய சிறையில் மூவரும் அடைக்கப்பட்டனர்.

ஈரோடு மாஜிஸ்திரேட் அலுவலகத்தில் இரு முறையும், மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு முறையும் பிணை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், சென்னை உயர்நீதி மன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்யப்பட்டது. செவ்வாய் அல்லது புதன் கிழமை சிறையிலிருந்து விடுதலையாகக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## காங்கிரஸ் கூறுவதிலும் 'நியாயம்' இருக்கிறது!

காங்கிரஸ் கட்சி தொடங்கி 125 ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே அண்மைக்காலத்தில் தோன்றிய விடுதலை சிறுத்தைகளால் வீழ்த்த முடியாது என்று, சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் சுதர்சன் பேசியுள்ளார்.

உண்மை தான். காங்கிரசை வெளியி லிருந்து வீழ்த்துவதற்கு அக்கட்சி எவரையும் அனுமதிக்காது. அந்த உரிமையை காங்கிரசாரே தங்களின் 'ஏகபோகமாக' வைத்துக் கொண்டுள்ள னர். தமிழ்நாட்டில் 1967 இல் கடையை கட்டிக் கொண்ட காங்கிரஸ் கட்சி, இன்னும் கோட்டைக் கதவைத் தட்டிக் கொண்டுதான் நிற்கிறது. தி.மு.க., அ.தி.மு.க. என்று மாநில கட்சிகளின் தோளின் மீது சவாரி செய்து, அவர்கள் கருணையோடு வழங்கும் இடங்களில் தான் 125 ஆண்டு காங்கிரஸ் போட்டி யிட்டு வருகிறது.

சத்தியமூர்த்தி பவன் வரலாற்றி லேயே முதல்முறையாக வேறு ஒரு அமைப்பினர் தாக்குதல் நடத்தியதுகூட அண்மையில்தான் நடந்திருக்கிறது. அந்த உரிமையையும் காங்கிரசாரே தங்கள் கைகளை விட்டுப் போய்விடா மல் தேசபக்தியோடு பாதுகாத்து வைத் திருந்தனர். சத்தியமூர்த்திபவனிலே நடந்த கட்சிக் கூட்டங்களிலே அரிவாள் வெட்டு விழுவதும், கட்சி மேலிடப் பார்வையாளர்களை உள்ளாடையுடன் உதை கொடுத்து ஓட வைப்பதும், தமிழக காங்கிரசாரின் தேசபக்தி திருப்பணிகளாகவே நிகழ்ந்து வந்துள்ளன.

இப்படி எல்லாம் 'உட்கட்சி ஜன நாயகத்தை' ஆயுதங்களுடன் கட்டிக் காத்து காங்கிரசை மக்களிடமிருந்து தனிமைப் படுத்தி வரும் காங்கிரசார், பிற கட்சியின் மூலம் அழிவதற்கு அனுமதிப் பார்களா? ஒரு போதும் மாட்டார்கள். அண்மையில் நடந்து முடிந்த சட்ட மன்றத் தேர்தல்களில்கூட, சில மாநிலங் களில் காங்கிரஸ் கட்சி தோற்றதற்குக் காரணம் கட்சிக்குள் நிகழ்ந்த உட்பகை தான் என்று அவர்கள் கட்சியின் தலைவர் சோனியாவே கூறியிருக்கிறார்.

எனவே, தோழர் திருமாவளவன் - காங்கிரசை காணாமல் ஒழித்திடும். காங்கிரசாரின் முயற்சிகளைத் தட்டிப் பறித்துவிடக் கூடாது என்பதே நமது கோரிக்கை. பெரியவர் சுதர்சனத்துக்கு எவ்வளவு கோபம் வருகிறது, பாருங்கள்.

## கைதைக் கண்டித்து திருச்சியில் வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டம்

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திரைப்பட இயக்குநர் சீமான், தமிழ் தேசியப் பொதுவுடைமைக் கட்சிப் பொதுச்செயலாளர் பெ. மணியரசன் ஆகியோரை விடுவிக்கக் கோரி திருச்சியில் வழக்குரைஞர்கள் ஜன.9, வெள்ளிக்கிழமை அன்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். திருச்சி மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் தமிழ்நாடு வழக்குரைஞர்கள் பேரவை சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு வழக்குரைஞர் த. கங்கைசெல்வன் தலைமை வகித்தார். பேரவையைச் சேர்ந்த வழக்குரைஞர்கள் மதி, சோழர், இளமுருகு, பானுமதி, கனகராஜ், கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட 50 வழக்கறிஞர்கள் இதில் கலந்து கொண்டனர்.

**ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்ட கோரிக்கைகள்:**

கைது செய்யப்பட்ட கொளத்தூர் மணி, பெ.மணியரசன், திரைப்பட இயக்குநர் சீமான் ஆகியோரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

இந்திய அரசு இலங்கைக்கு ராணுவ உதவி அளிப்பதை உடன் நிறுத்த வேண்டும். தமிழக மக்களை ஏமாற்றும் மத்திய அரசின் போக்கைக் கண்டிக்கிறோம்.

தலையங்கம்

## ‘போர் நிறுத்த’ அணி

விடுதலை சிறுத்தை கட்சியின் தலைவர் தோழர் திருமாவளவன் ஈழத் தமிழர்களுக்காக கூட்டணி அரசியலையும் கடந்து உண்மையான பங்களிப்போடு, தொடர்ந்து போராட்டங்களையும், இயக்கங்களையும் நடத்தி வருகிறார். ஈழத் தமிழர் போராட்டம் கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ள சூழலில், பட்டினிப் போராட்டத்தைத் தொடங்கி, தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி உருவாக்கி வைத்த தேக்கத்தை தகர்ப்பதிலும் வெற்றி பெற் றுள்ளார். இதற்காக தமிழின உணர்வாளர்கள் தோழர் தொல். திருமாவளவன் அவர்களுக்கும், விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கும் என்றென்றும் நன்றி கூறி வாழ்த்துவார்கள்.

அய்ந்து நாள் பட்டினிப் போராட்டத்தை முடித்த நிலையில், ஈழத்தில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தும் தமிழக கட்சிகள், இயக்கங்கள் ஒரே அணியாகத் திரள வேண்டும் என்ற கோரிக்கையை அவர் முன்மொழிந்துள்ளார். இது பாராட்டி வரவேற்று செயல்படுத்த வேண்டிய ஆக்கப்பூர்வமான யோசனையாகும். இப்போது ஈழத் தமிழர்களுக்கு எதிரான துரோகத்தில் வெளிப்படையாக தங்களை அடையாளப்படுத்திடும் கட்சிகள் காங்கிரசும், ஜெயலலிதாவும் தான்! (ஜெயலலிதா கட்சியிலுள்ள பல உணர்வுள்ள தமிழர்களே, ஜெயலலிதாவின் துரோகக் கருத்துகளை ஏற்கவில்லை என்பதே உண்மை)

ஜெயலலிதா தலைமையில் கூட்டணி சேர்ந்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ம.தி.மு.க. ஆகியவை, ஜெயலலிதாவின் துரோகக் கருத்துகளை இந்தப் பிரச்சினையில் ஏற்காமல், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தங்களது உறுதியான கருத்துகளை வெளிப்படுத்தியும், போராடியும் வருகிறார்கள். வழக்கம் போல மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தனது பார்ப்பன அடையாளத்தையே இப்பிரச்சினையில் வெளிப்படுத்தி வருகிறது. காசா பகுதியில் இஸ்ரேல், பாலஸ்தீனர்களைக் கொன்று குவிப்பதும், ஈழத் தமிழர்களை சிங்கள ராணுவம் கொன்று குவிப்பதும் ஒன்றுதான் என்ற பார்வை அக்கட்சிக்கு இல்லை. தேசிய சுயநிர்ணய உரிமைக்காக மக்களோடு போராடும் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு பயங்கரவாத முத்திரை குத்திடும் ஏகாதிபத்திய நாடுகளின் குரலையே இக்கட்சியும் எதிரொலிக்கிறது. தி.மு.க.வைப் பொறுத்தவரை அதன் இரட்டை வேடம் வெளிப்படையாகவே அம்பலமாகி வருகிறது. தமிழின உணர்வு என்ற தளத்தில் கால் பதித்து நிற்கும் தி.மு.க., அந்த உணர்வுகளுக்கு எதிரான துரோகம் காங்கிரசிலிருந்து வெளிப்படும்போது, ‘கூட்டணி ஆட்சி அதிகாரம்’ என்பதற்கே முன்னுரிமை தந்து, மீண்டும் மீண்டும் பழைய வரலாற்றுப் ‘பெருமை’களைப் பேசி, அதற்குள் தன்னை முடக்கிக் கொள்ளவே விரும்புகிறது.

இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சி வெளிப்படையாக இழைக்கும் துரோகத்தைக் கண்டிப்பதற்கான வார்த்தைகளை முதலமைச்சர் கலைஞர் இன்னும் தேடிக் கொண்டே இருக்கிறார். தமிழகத்தின் ஆளும் கட்சியாக இருந்தும் என்ன பயன்? டெல்லிக்கு அடிமை ஆட்சியாகத் தானே இருக்க வேண்டியிருக்கிறது? இத்தனைக்கும் மத்தியில் நடப்பது கூட்டணி ஆட்சிதான். காங்கிரசுக்கு பெரும்பான்மை இல்லை. ஆனாலும், பார்ப்பன ஆட்சி அதிகாரமே நாட்டை வழி நடத்துகிறது! முடிவுகள் எடுப்பதும், செயல்படுத்துவதும் ‘அவாள்’கள் தான்.

தமிழக முதல்வர் கலைஞர் தம்மிடம் உள்ள அதிகாரத்தை இந்திய தேசிய ஆட்சியின் துரோகத்துக்கு எதிராக வெடித்துக் கிளம்பும் எழுச்சிகளை அடக்கவே பயன்படுத்துகிறார். அவரிடம் உள்ள அதிகாரம் மத்திய அரசை பணிய வைக்க பயன்படவில்லை. உண்மையைச் சொன்னால் தி.மு.க. ஆட்சி – வரலாற்று துரோகத்தை சுமந்து நிற்கிறது. தி.மு.க.வின் இந்த நிலையில் மாற்றம் ஏற்படும் அறிகுறிகள் ஏதும் தெரியவில்லை.

இந்த நிலையில் – ‘வாழ்வா, சாவா’ போராட்டத்தில் நிற்கும் ஈழத் தமிழர்களைக் காப்பாற்றும் உரிமைக் குரல் தமிழகத்திலிருந்துதான் எழுந்தாக வேண்டும். இதற்கு ஆதரவான மக்கள் எழுச்சியை மேலும் வலிமைப்படுத்த வேண்டும். வெளிப்படையான துரோக சக்திகள் ஒருபுறம்; ஆட்சி அதிகாரத்துக்காக அடங்கிப் போய் நிற்கவே விரும்பும் சக்திகள் மறுபுறம்; இந்தத் தடைகளுக்கு இடையே ஈழத்தில் போர் நிறுத்தம் செய்யவும், அவர்களின் விடுதலைக்கு ஆதரவாக இயக்கங்களை நடத்திச் செல்லும் அணுகுமுறைகளை உருவாக்கிடவும் வேண்டிய நேரம் இது. பிரச்சினையை தடம்புரளச் செய்துவிடாமல் போர் நிறுத்தம் கோரும் கட்சிகள், இயக்கங்கள், ஓரணியாகி – மக்கள் இயக்கத்தை நடத்துவதன் மூலம் துரோக சக்திகளை மக்கள் மன்றத்தில் பலமிழக்கச் செய்ய வேண்டும்!

தோழர் திருமாவளவன் முன்மொழிந்துள்ள கோரிக்கை செயலாக்கம் பெற வேண்டும்.

# சங்கராச்சாரி மடத்துக்குள் தலித் சிற்பிகளின் சிலை

***தலித் சிற்பிகள் வடித்தசிலைகளே சங்கராச்சாரி மடத்துக்குள்ளும் இருக்கிறது. இந்த சாதனையை நிகழ்த்திய பெரியார் திராவிடர் கழகத்தைச் சார்ந்த சிற்பி ராசனின் சமூகப் புரட்சியை ஏடுகள் பலவும் வெளியிட்டு வருகின்றன. ‘குமுதம் ரிப்போர்ட்டர்’ ஏடு வெளியிட்டுள்ள அவரது பேட்டி இது.***

கோயில்களுக்குள் நுழைந்து சாமி கும்பிடக் கூட தலித்துகளுக்கு பல இடங்களில் தடையிருக்கும் இந்தக் காலகட்டத்தில் கருவறைகளுக்குள் கம்பீரமாக நிற்கும் தெய்வத் திருவுருவச் சிலைகளை இன்று தலித்துகள் தயாரிக்கிறார்கள் என்பது ஆச்சரியமூட்டும் தகவல் அல்லவா? அப்படி சிலை வடிக்கும் வேலைகளில் தலித்துகளைத் தயார்படுத்தி சைலண்டாக ஒரு புரட்சியை நடத்தி வருகிறார் ராஜன் என்பவர்.

தஞ்சை மாவட்டம் சுவாமி மலையிலிருந்து கும்பகோணம் செல்லும் வழியில் உள்ள திம்மக்குடியில் சிலை செய்யும் பட்டறை வைத்திருக்கிறார் அந்த அற்புத மனிதர் ராஜன். சிலை செய்யும் தொழில் ஆன்மிகம் கலந்தது என்றாலும், ராஜன் ஒரு பழுத்த பெரியார்வாதி என்பது ஆச்சரியம் கலந்த ஆனந்தம். சிலை செய்வதில் இருக்கும் ஐதீகங்களை உடைத்து, முற்போக்காக சிலை வடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார் இவர்.



அவரைப் பற்றிக் கேள்விப்பட்டதும் ஆச்சரியம் விலகாமல் திம்மக்குடிக்கு விரைந்தோம். இதோ அவரே நம்மிடம் பேசுகிறார்:

“திருச்சி ஸ்ரீரங்கம்தான் என் சொந்த ஊர். பதின்மூன்று வயதிலேயே பெரியார் கொள்கைகளால் நான் ஈர்க்கப்பட்டேன். யாராவது என்னிடம், ‘நீ என்ன சாதி? மதம்?’ என்று கேட்டால், ‘மனுஷ சாதி. திராவிட மதம்’ என்றுதான் சொல்வேன். ஆனால், என் குடும்பத்தவர்கள் ஆன்மிகத்தில் ஊறிப் போனவர்கள். அதனால் என்னை அவர்கள் கண்டிக்க, வீட்டில் தினம் தினம் சண்டை சச்சரவுதான்.

1978 இல், என் பத்தொன்பது வயதில், பி.யூ.சி. முடித்தேன். அப்போது சுவாமிமலையில் சிலை செய்யும் கலை செழிப்பாக இருப்பதாகக் கேள்விப்பட்டு, அங்கே போய் அந்தக் கலையைக் கற்றுக் கொள்ள ஆர்வமானேன். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த என் அப்பா, ‘இதற்காகவா உன்னைப் படிக்க வைத்தேன்?’ என தாம்தூமென்று குதித்தார். கோபமான நான், என் பி.யூ.சி. சான்றிதழைக் கிழித்தெறிந்து விட்டுக் கிளம்பத் தயாரானேன். ‘நீ எங்களை மீறிப் போனால் மீண்டும் திரும்ப வராதே’ என்றார் அப்பா. ‘சரிப்பா’ என்று செருப்பைக்கூட உதறித் தள்ளிவிட்டு இங்கே வந்து விட்டேன். இன்றைக்கு முப்பத்தொன்பது வருஷங்கள் ஆச்சு. இன்னும்கூட நான் வீட்டுக்குப் போகவில்லை” என்று கூறி நிறுத்திய ராஜன் தொடர்ந்தார்.

“78 இல் சுவாமிமலை வந்த நான் மூன்று வருட காலம் சிலை செய்யும் கலையைக் கற்றுக் கொண்டு 81 ஆம் வருடம் கும்பகோணத்தில் தங்கியிருந்து சிலை செய்ய ஆரம்பித்தேன். நான் செய்த சிலைகள் பிரபலமாகி மற்ற மாநிலங்கள், வெளிநாடுகளுக்குப் போக ஆரம்பித்தன. சிலைகளுக்கான தேவை அதிகமானதால் எனக்கு ஆட்கள் அதிகமாகத் தேவைப்பட்டார்கள். அப்போதுதான் சிலை வடிக்கும் தொழிலில் பெரியாரிசத்தைப் புகுத்தி சாதி ஒழிப்புச் செய்தால் என்ன என்று எனக்குத் தோன்றியது.

அதனால் தலித்துகளைப் பயன்படுத்தி சிலை வடிக்கத் தீர்மானித்தேன். அதுவரை விவசாயக் கூலிகளாக வெட்டியான்களாக, பறை அடிப்பவர்களாக இருந்த தலித்துகளை அழைத்து சிலை செய்ய சொல்லித் தந்தேன். ‘இந்தத் தொழில் நமக்கு ஒத்து வருமா?’ என்றுஆரம்பத்தில் தயக்கம் காட்டிய அவர்கள், பிறகு ஆர்வத்துடன் கற்றுக் கொண்டார்கள். ‘தலித்துகள் சிலை செய்வதா?’ என்று ஆரம்பத்தில் பலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, என் முயற்சியை மழுங்கடிக்கப் பார்த்தாலும் நான் மசிந்து கொடுக்கவில்லை.

இதுவரை முந்நூறு தலித்துகளுக்கு சிலை செய்ய கற்றுத் தந்திருக்கிறேன். அதில் முக்கால்வாசிப் பேர் இன்று தனிப் பட்டறை அமைத்து சிலை செய்து வருகிறார்கள். அவர்களை இந்தத் தொழிலைச் செய்ய விடாமல் தடுக்க முயன்ற சிலரது முயற்சி எடுபடாமலேயே போய்விட்டது. இன்று தலித் சிற்பிகள் தமிழகம் முழுவதும் பரவியிருக்கிறார்கள். இதே சுவாமிமலையில் கண்ணன் என்பவரும், பட்டீஸ்வரத்தில் சுந்தர் என்பவரும் பெரிய அளவில் சிலை செய்யும் பட்டறை வைத்திருக்கிறார்கள். இவர்கள் இருவருமே தலித்துகள்.

கும்பகோணம் நீதிமன்றம் அருகிலுள்ள கோயிலில் உள்ள ஐயப்பன் சிலையை ஒரு தலித்துதான் செய்தார். பெருந்துறை சிவன் கோயில், சென்னை, கோவை, சேலம், மதுரையிலுள்ள கோயில்கள், அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து, ஜெர்மனி, மொரீஷியஸ் போன்ற நாடுகளிலுள்ள கோயில்களில் எல்லாம் என் பட்டறையில் பணிபுரிந்த தலித்துகள் செய்த சிலைகள் இருக்கின்றன. நாங்கள் சங்கராச்சாரியாரின் ஸ்ரீ மடத்திற்கு நூற்றுக்கணக்கில் மகாமேரு செய்து தந்திருக்கிறோம். அந்தப் பணியில் பாதிக்குப் பாதி ஈடுபட்டவர்கள் தலித்துகள்தான்.

நடராஜரின் 108 தாண்டவத்தில், 103-வது தாண்டவமான அதோ தாண்டவத்தை’ சிலையாகச் செய்பவர்கள் செத்து விடுவார்கள் என்று ஒரு ஐதீகம் இருக்கிறது. அந்தத் தாண்டவத்தின் அமைப்பை ஒரு புத்தகத்தில் யதேச்சையாகப் பார்த்த நான், 83 ஆம் ஆண்டு நாலரை அடி உயரத்தில் மும்பை கோயில் ஒன்றுக்கு அதைச் செய்து கொடுத்தேன். ஆனால், இன்றுவரை நான் இறந்து போகவில்லை. அதே மாதிரி சில தலித்துகளும் அந்த தாண்டவச் சிலையைச் செய்திருக்கிறார்கள். அதில் ஒரு சிலை என் மியூசியத்திலும், இன்னொன்று என் பட்டறையிலும் இருக்கிறது.

என் பட்டறை மற்றும் மியூசியத்தைப் பார்க்க உச்சநீதிமன்ற நீதிபதி ஏ.ஆர்.லட்சுமணன், உயர்நீதிமன்ற நீதிபதி ஆனந்த், நடிகர் முரளி, இசைஞானி இளையராஜா போன்றவர்கள் வந்திருக்கிறார்கள். இதில் இளையராஜா வந்தபோது நடராஜர் சிலையைப் பார்த்து அதிசயமாகி, ‘இதை நான் தொட்டுப் பார்க்கலாமா?’ என்றார். ‘தொடுவதற்குத் தானே சிலை?’ என்று நான் சொன்னதும் கண்கலங்கிப் போனார்.

தலித்துகளுக்கு நான் சிலை செய்யக் கற்றுத் தந்ததால் ஏதோ பூமியைப் புரட்டிப் போட்டு சாதனை செய்துவிட்டதாக நினைக்கவில்லை. மனிதர்களைப் பிடித்து ஆட்டி, அலைக்கழிக்கும் சாதிப் பேயை ஏதோ கொஞ்சம் வேப்பிலையடித்து விரட்டியிருப்பதாக நினைக்கிறேன். என் மியூசியத்தைப் பார்க்க வந்த ஒருவர், ‘இவ்வளவு நாத்திகம் பேசும் நீங்கள் ஏன் ஆத்திக சமாசாரமான சிலைகளைச் செய்கிறீர்கள்’ என்று கேட்டார். அதற்கு நான், ‘இவ்வளவு ஆத்திகம் பேசும் நீங்கள்

(4 ஆம் பக்கம்)

# தீஸ்டா செதல்வாட் – விளக்கம்

# சட்டத்தின் பிடியிலிருந்து தப்பும் மதவன்முறையாளர்கள்

*'காம்பட் கம்யூனலிசம்' ஆசிரியரும், மதவெறி சக்திகளுக்கு எதிராக களத்தில் நின்று போராடும் போராளியுமான தோழர் தீஸ்டா செதல்வாட் டிச.11 அன்று 'மதச்சார்பற்றோர் மாமன்றம்' சார்பில் சென்னையில் ஆற்றிய உரை. சென்ற இதழ் தொடர்ச்சி.*

இப்போது டிசம்பர் 6, 1992க்கு வருவோம். பாபர் மசூதியின் இடிப்பு. அந்த ஒரேயொரு பயங்கரவாதச் செயல், மென்மேலும் பயங்கரவாதம் பரவுவதற்கும் தனிமைப் படுத்துதல் அதிகமாவதற்கும் வழி வகுத்தது. ஆனால் 1985க்கும் 1992-வுக்கும் இடைப்பட்ட காலத்தின் வரலாற்றை நாம் பார்ப்போமேயானால், ரத யாத்திரை நடத்தப்பட்ட இடங்களிலெல்லாம், குறிப்பாக இரண்டு நிகழ்ச்சிகளை குறிப்பிட விரும்புகிறேன். மீரட்டில் ஹாஷிம் புரா என்ற இடத்தில் 1987, மற்றும் 89-ல் இரண்டு நிகழ்ச்சிகள் ரதயாத்திரையின்போது நடந்தன. ஐம்பத்தோரு முஸ்லிம் சிறுவர்கள் ஆயுதம் தாங்கிய உத்தரபிரதேச ஊர்க்காவல் படையினரால் துடிக்கத் துடிக்க சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்த வழக்கு இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. சாட்சிகள் தொலைந்து விட்டனர். எனினும் பாதிக்கப்பட்டவர்கள் நீதி வேண்டி குரல் எழுப்பிக் கொண்டுள்ளனர்.

ம.பி. மாநிலம் பகல்பூரில் சந்தேரி, லொகாயன் என்ற இரண்டு கிராமங்கள். ஒரே இரவில் எண்ணற்ற மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். சென்ற ஆண்டு சிலர் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்டனர். ஆனால் கத்தி, லத்தி, துப்பாக்கி போன்ற ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டிருப்பவர்கள் யாரும் திட்டம் தீட்டியவர்களல்ல. வெறுப்பை உருவாக்கும் தலைவர்கள் அல்ல. அவர்கள் எய்யப்பட்ட வெறும் அம்புகள்தான்.

1992க்கு வருகிறோம். வெறுப்பு கர்நாடகத்தையும் விடவில்லை. இப்படிப்பட்ட மத வெறுப்பு உள்ளே வர தென்னிந்தியா அனுமதிக்காது என்றே என்னைப்போன்ற வரலாற்று மாணவர்கள் நம்புகிறோம். 1980களிலும், குறிப்பாக 1992லும் நாம் பார்த்தோம், டிசம்பர் 92லும், ஜனவரி 93-யிலும் மும்பை போன்ற ஒரு மாநகரில், காவல்துறையினரின் ஒரு சார்புத் தன்மை கொண்ட முகத்தை, பெரும்பான்மை சமூகத்தவருக்கு ஆதரவாக இருந்ததையும், சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த அப்பாவி மக்களுக்கு எதிராக இருந்ததையும் நாம் பார்த்தோம். 1980கள் முழுதும் இதுதான் நிகழ்ந்தது. அதன் பிறகு 92ல் மசூதி இடிப்பு. பின் திட்டமிடப்பட்ட படுகொலை பம்பாயில் நிகழ்ந்தது. அப்போது அது பம்பாய்தான். மும்பை ஆகவில்லை. குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை என்ற சிறீ கிருஷ்ணா விசாரணை ஆணையமும் கூறிவிட்டது.

நண்பர்களே, 1984, 1992, 2002களில் குஜராத். இடையே, 1998லிருந்து இந்தியாவில் இருக்கும் கிறிஸ்தவ சிறுபான்மை சமூகத்தவர் தெளிவாகத் திட்டமிட்டு குறி வைக்கப்பட்டனர். 1998லிருந்தே, ஒரிசாவும் கர்நாடகாவும் குறிவைக்கப்பட்டன. ஒரே ஆண்டில் 48 தாக்குதல்கள் கிறிஸ்தவர்களையும், கிறிஸ்தவ நிறுவனங்களையும், குறிவைத்து நிகழ்த்தப்பட்டது என்பதை அகில இந்திய கத்தோலிக்க யூனியனோடு சேர்ந்து நாங்கள் பதிவு செய்தோம். 1998ல், மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம், ஏன் தமிழ்நாட்டின் ஊட்டியிலும் ஒரு தாக்குதல் நிகழ்த்தப் பட்டது. குஜராத்தில்தான் மிக அதிகமான எண்ணிக்கையில் அது நடந்தது. ஒவ்வொரு இடத்திலும் நிகழ்த்தப்பட்ட முறையில் வித்தியாசம் இருந்தது. ஆனால், கல்வி, மருத்துவம் போன்ற துறைகளில் கிறிஸ்தவ சமுதாயம் செய்து கொண்டிருக்கும் சேவைகளையெல்லாம் மீறி, தூரமாக இருக்கும் பகுதிகளில் கூட ஆதிவாசிகளுக்கு கிறிஸ்தவ சமுதாயத்தினர் செய்த சேவைகளைபெல்லாம் கூட மதமாற்றம் செய்யப்படுகிறது என்று சொல்லி அந்த சமூகத்தை கொச்சைப்படுத்தும் வேலை நடந்தது. எல்லாத் துறைகளிலும் முஸ்லிம் சமுதாயத்தினரின் சேவைகள் இருந்தாலும், அந்த சமுதாயமும் மதமாற்றம் செய்கிறது என்று சொல்லி கேவலப்படுத்தப்பட்டது. மறுபடியும் சட்டம் தன் கடமையைச் செய்யத் தவறியது. குற்றவாளிகள் திரிந்து கொண்டிருக்க நாம் அனுமதித்தோம்.

2002ல் என்ன நடந்தது, தொடர்ந்து என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் நாமனைவரும் அறிவோம். முடிந்துபோன கதை அல்ல இது. ஆண்டுதோறும், அதிக எண்ணிக்கையில் படுகொலைகள் ஒரு சமூகமும், அரசும், நாடும் அனுமதிக்குமானால், குற்றவாளிகளை தண்டனைக் குரியவர்களாக அடையாளம் காட்டாது விடுமானால், பெரிய அளவில் தனிமைப் படுத்துதலையும், காழ்ப்புணர்வையும் தேக்கி வைக்க உதவும். ஒரு சமூகம் என்ற அளவிலும், அரசாங்கம் என்ற அளவிலும் நாம் இதைச் சரி செய்யத் தவறிவிட்டோம். அப்படி ஒன்று நடந்தது என்று கூட நாம் ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை.



குஜராத்தில் வெகுகாலத்துக்கு திட்டமிட்டு சிறுபான்மையினரைத் தனிமைப்படுத்துதல், குஜராத் நகர்ப்புறத்தை ஒரு சமுதாயத்தினர் வாழும் பகுதியாக ஒதுக்கி வைத்தல், பாடப்புத்தகங்களில் சிறுபான்மை சமூகத்தினரை கேவலப்படுத்தி எழுதுதல்... இந்தக் காரியங்கள் யாவும் இனப்படுகொலை நிகழ்த்தப்படுவதற்கு குறைந்தது ஐந்து அல்லது பத்து ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிட்டு செய்யப்பட்டன. இனப்படுகொலை ஒரு இரவில் நடப்பதல்ல. அது ஒன்றும் மேஜிக் அல்ல. அது ஒரு திட்டமிடப்பட்ட செயல். மௌனமாக இருப்பதன் மூலம் குற்றச்செயலுக்கு உடந்தையாக இருந்ததை பெரும்பான்மை சமூகம் ஒத்துக்கொள்கிறது. குஜராத் இதற்கு மிகச்சிறந்த உதாரணம்.

கம்யூனலிசம் காம்பாட் ஆங்கில பத்திரிகையின் இனப்படுகொலை பற்றிய இதழின் தமிழாக்கத்தை வெளியிட்டது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது. அது சென்னையில் இருக்கும் தோழர்களால் வெளியிடப்பட்டது. அதை நான் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களுக்கு வேண்டுமென்றே தமிழில் கொடுத்தேன். ஏனெனில் குஜராத்தில் ஒரு நிவாரண முகாமில் அவர் முதல்வர் மோடிக்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார். நிவாரண முகாமுக்குள் செல்லக்கூடாதென எனக்கு மாவட்ட அதிகாரி சொல்லி இருந்தார். எனவே, நான் புர்கா அணிந்து உள்ளே சென்று தமிழ் இதழை அப்துல் கலாமிடம் கொடுத்தேன்.

குஜராத் பெஸ்ட் பேகரியில் உயிருடன் எரிக்கப்பட்ட வழக்கு பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். ஆனால் எங்கள் குழு 67 வழக்குகளுக்காகப் போராடிக் கொண்டுள்ளது. நாம் இப்போது பேசிக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் இன்றுகூட, சிறப்பு புலனாய்வு குழு, முன்னாள் சிபிஐ இயக்குனர், சென்னையைச் சேர்ந்த திரு. ராகவன் அவர்கள் தலைமையில் கோத்ரா, குல்பர்க், நரோடாகாம், நரோடா பாட்டியா, ஓட், மற்றும் சர்தார் பூர் படுகொலைகளை மறுபுலனாய்வு செய்து கொண்டிருக்கிறது.

வழக்கை உயிருடன் வைத்திருக்க மூன்று நான்கு ஆண்டுகளாக நாங்கள் உச்ச நீதிமன்றத்தோடு போராட வேண்டியிருந்தது. காலம் கடந்து விட்டது, இந்த வழக்குகள் எல்லாம் குஜராத்திலேயே அழுகிச் சாகட்டும் என்று தடுப்பதற்கு தன் சக்தியையெல்லாம் பயன்படுத்தியது குஜராத் அரசு. ஆனால் குஜராத்தில் பயங்கரமான சூழலில் வாழும் 468 சாட்சிகள் இன்னும் துணிச்சலோடும் மனசாட்சியோடும் சாட்சி சொல்ல தயாராக இருக்கிறார்கள் என்று பெருமையோடு சொல்லிக் கொள்கிறோம். அவர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள், அவமானப்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் வசதி படைத்தவர்களும் அல்ல. தங்களது பண்ணை நிலத்தில் கூடாரம் அடித்துக் கொண்டு வசிக்கும் அவர்கள் நீதி கிடைக்க வேண்டும் என்பதில் மட்டும் உறுதியாக இருக்கிறார்கள். அமைப்பு அவர்களுக்கு எந்த உதவியும் செய்யவில்லை. அவர்கள் துணிச்சல் நீடித்திருக்க எங்களில் சிலர் எங்களால் ஆனதைச் செய்து கொண்டிருக்கிறோம். இதுவரை அவர்கள் எந்த அச்சுறுத் தலுக்கும் பணிந்துவிடவில்லை. உங்களைப்போன்ற மக்களின் ஆதரவுக்கு நான் நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

பெஸ்ட் பாக்டரியில் குடும்பமே உயிருடன் எரிக்கப்பட்டபோது உயிர் பிழைத்த ஒரே பெண் - ஜாஹிரா தான் சாட்சி. அவரை மிரட்டி, ஆட்சியாளர்கள் பொய் சாட்சி கூற வைத்தனர்.

ஜாஹிராவை நான் பழிசொல்ல மாட்டேன். பெரியதொரு விளையாட்டில் அவர் ஒரு பகடைக்காய் மட்டுமே. வடோதரா என்ற பி.ஜே.பி எம்.எல்.ஏ செய்த காரியம் அது. தூக்கி எறிவதற்கு ரொம்ப எளிமையானது பணம்தான். பலவீனமான இளம்பெண் என்ன செய்வாள்? உச்ச நீதிமன்றத்துக்கு எதிரான ஒரு முறையீடு என்னிடம் இன்னும் உள்ளது. பொய்சாட்சி சொன்னதற்காக அவளுக்கு ஒரு ஆண்டு தண்டனை கொடுத்தார்கள். ஆனால் அவளுக்கு லஞ்சம் கொடுத்த பா.ஜ.க. தலைவர் மது ஷிவாசுக்கு ஒரு மாதம் கூட தண்டனை கொடுக்கவில்லை. நமது அமைப்பில் எங்கோ தவறு உள்ளது. இப்படியெல்லாம் பேசியதால் நீதிமன்றத்தின் கோபத்துக்கு நான் ஆளாகி இருக்கிறேன்.

குஜராத்துக்குப் பிறகு, ஒரிசாவும் கர்நாடகாவும் வந்துள்ளன. ஒரிசாவில் பயங்கரம் இன்னும் தொடர்கிறது. 35000 பேருக்கு மேல் நிவாரண முகாமில் உள்ளனர். ஜூலை மாதத்திலிருந்து இதுவரை நான் மூன்று முறை அங்கு சென்று வந்துவிட்டேன்.

குஜராத்தில் இன்னும் கும்பல் கும்பலாக கல்லறைகள் உள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் நேசத்துக்கு உரியவர்களின் உடல்களை கேட்டுப் பெறுவதற்கும் முடியாமல் இருக்கின்றனர். குஜராத்தில் படுகொலைகள் நடந்து கொண்டுதான் உள்ளன. ஆனால் கேமராக்கள் அங்கிருந்து நகர்ந்துவிட்டன. சிறுபான்மை சமூகத்தின் செல்வாக்குள்ளவர்கள் சமரசம் செய்து கொண்டுவிட்டனர். இதைச் சொல்வதற்கு வருந்துகிறேன். சாட்சிகளும், பாதிக்கப்பட்டவர்களும்தான் இப்போது களத்தில் தனியாக உள்ளனர். நாம் இதையெல்லாம் கேட்பதற்கு ஒரு மேடையைத் தயார் செய்தோமெனில், காயங்களை மறுபடியும் திறப்பதாக நாம் குற்றம் சுமத்தப்படுகிறோம். நான் கேட்கிறேன், ரத்தத்தை ஓடவிடாமல் தடுத்துவிட்டால், எந்தக் காயமாவது குணமடையுமா?

ஒரிசா பயங்கரவாதத்தால் தொடர்ந்து பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அரசே முன் நின்று நடத்திய பயங்கரவாதம்தான் குஜராத்தில் அரங்கேறியது. கிறிஸ்தவர்கள் மீதும், தலித்துகள் மீதும் நடத்தப்பட்டது பயங்கரவாதச் செயல்பாடுகள். பெண் குழந்தைகளைக் கருவில் கொல்வதும் பயங்கரவாதச் செயல்பாடுதான். பயங்கரவாதம் பற்றிப் பேசுகிறோம் இன்று. ஆனால் நாம் எங்கே தொடங்கி எங்கே முடிக்கிறோம்?

கடந்த 15 ஆண்டுகளில் நான்கு முக்கிய சீர்திருத்தங் கள் வேண்டுமென்று நாம் கேட்டு கொண்டிருக்கிறோம். ஒன்று, காவல்துறை சீர்திருத்தம். அது தொடர்பான சட்டதிட்டங்கள் எல்லாம் நமது காலனிய முதலாளியாக இருந்த பிரிட்டிஷாரால் வகுக்கப்பட்டவை. அவை நமது அடிமை மனப்பான்மை கொண்ட மக்கள் தொகையை அடக்கியாள்வதற்காக, நம் அரசியல் சாசனம் 100 ஆண்டுகளுக்குப் பிறகு வந்தது. நமது காவல் துறையை நாம் அரசியல் சாசன ரீதியாக அமைக்கவோ, ஜனநாயகப்படுத்தவோ இல்லை. எனவே காவல் துறையினர் மக்களுக்கு சேவை செய்யவில்லை. மாறாக, மக்களை அடக்கியாளவே அவர்கள் விரும்புகின்றனர். இந்த உறவு முறை மாற வேண்டும். சட்டம் மாற வேண்டும்.


ஓய்வு பெற்ற நமது மூத்த காவல்துறை அதிகாரிகளும், 1975லிருந்து 1999 வரையிலான நேஷனல் போலீஸ் கமிஷன் அறிக்கைகளும் காவல்துறையில் சீர்திருத்தங்கள் தேவை என்று பலமாக சிபாரிசு செய்துள்ளன. ஆனால் நமது அரசியல் கட்சிகள், அது யாராக இருந்தாலும், காவல்துறை மீது உள்ள கட்டுப்பாட்டை இழக்க விரும்பவில்லை.

காவல்துறை சீர்திருத்தத்துக்கான கோரிக்கையை மக்கள் கோரிக்கையாக முன்வைக்க வேண்டும். இது ஒரு அறிவுஜீவித்தனமான கோரிக்கை அல்ல. இது நமது பாதுகாப்பு தொடர்பான விஷயம். சார்பு எதுவும் இல்லாமல் காவல்துறை நடக்க வேண்டும் என்பதற்காக. சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் காவல்துறையில் இன்னும் அதிகமான எண்ணிக்கையில் இருக்க வேண்டும் என்பதற்காக. காவல்துறையை ஜனநாயகப்படுத்த வேண்டும் என்பதற்காக. எனவே பொதுமக்கள் அமைப்புகள் இந்த கோரிக்கையை நிச்சயம் முன்வைத்துப் போராட வேண்டும்.

இரண்டாவது, நீதித்துறைச் சீர்திருத்தம். நீதித்துறை கோபப்பட்டாலும் பரவாயில்லை என்று நாம் இந்த சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தே ஆக வேண்டும். நீதிமன்ற அவமதிப்பு சட்டத்தை நீக்க வேண்டும். இந்திய நாட்டின் குடிமகன் என்ற நிலையில், ஒருமுறை ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டதென்றால், நீதிபதியின் நோக்கத்தில் எனக்கு சந்தேகம் எதுவும் இல்லையெனில், அந்த தீர்ப்பை விமர்சனம் செய்யும் உரிமை எனக்கு இருக்க வேண்டும்.

(தொடரும்)

# லண்டனில் கடவுள் பிரச்சாரத்துக்கு பதிலடி




'கடவுளை மறுத்தால் நரகத்தில் துன்பம் அனுபவிக்க வேண்டும்' என்று மக்களை எச்சரித்து, கிறிஸ்தவ மத நிறுவனங்கள் லண்டனில் விளம்பரப் பலகைகளை வைத்திருந்தன.

இந்த மதவெறிப் பிரச்சாரத்துக்கு எதிராக பிரபல நகைச்சுவை பெண் எழுத்தாளரான ஏரியன்ஷெரைன் களமிறங்கினார். மக்களிடம் நன்கொடைகளை திரட்டினார். ஒவ்வொருவரிடமும் அவர் கேட்டது 5 பவுண்ட் மட்டும். "கடவுள் என்று ஒன்று இல்லை. எனவே கவலையை நிறுத்துங்கள். வாழ்க்கையை மகிழ்ச்சியாக்குங்கள்" என்ற வாசகங்களை பேருந்துகளில் விளம்பரமாக வெளியிட்டார். தனது உடையிலும் அதை பொறித்துக் கொண்டார். வாசகம் பொறித்த பேருந்து ஒன்றின் முன் அவர் நிற்கும் காட்சி.

## விடியல் எப்போது?

**– தமிழேந்தி –**

கொடுமைகள் முற்றும் தொலையுமா இங்கு?
கொஞ்சம்நீ எண்ணடா தோழா! – இந்த
அடிமைத் தமிழ்நாட்டில் வாழ்கின்ற வரைநம்
அல்லல்கள் தீருமா தோழா!

வாக்குப் பொறுக்கும் திராவிடக் கட்சிகள்
வஞ்சகம் கொஞ்சமோ தோழா! – நாளும்
தூக்கிச் சுமக்கிறார் காங்கிரசுக் கழுதையை
சொரணையே இல்லையே தோழா!

தேசிய இனங்களைச் சிதைப்பவ ரோடா
தேர்தலில் கூட்டணி தோழா! – விலை
பேசியே பெற்ற அன்னையை விற்றும்
பிழைப்பது பிழைப்போ தோழா!

அம்மவோ... எத்தனை உயிர்க்கொலை அங்கே!
அழுகுரல் தொடருதே தோழா! – சே... சே...
பம்மாத்து அரசியல் பண்ணிப் பிழைப்பதா?
பச்சை நரித்தனம் தோழா!

ஏங்கி ஏங்கியே ஈழத்திற் கழுகிறோம்
இங்கென்ன நிலையடா தோழா! – நாளும்
வீங்கிப் பெருக்கும் மார்வாரி குசராத்தி
வேட்டைக்குத் தீர்வென்ன தோழா!

துடிக்கிற சோதரன் கண்ணீர் துடைக்கவும்
சொந்தக்கை வேண்டுமென் தோழா! – முற்றி
வெடிக்கிற தேசிய விடுதலைப் புரட்சிஓர்
விடியலைக் காட்டுமென் தோழா!

(சிற்பி ராசனின் பேட்டி
2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிலை செய்ய வேண்டியது தானே? ஏன் என்னைத்தேடி வருகிறீர்கள்? இது ஒரு தொழில். இதில்கூட நாத்திக கருத்துகளைப் பரப்ப முடியும்' என்று நான் சொன்னதும் வாயடைத்துப் போனார்.

கடவுள் விஷயத்திலும் மறைமுகமாக இப்படி சாதிகளை ஒழிக்க முடிகிறபோது, மற்ற தொழில்கள், விஷயங்களிலும் மனம் ஒப்பி முயற்சி செய்தால் சாதியை முழுமையாக ஒழித்து விடலாம்" என்ற நமக்கு நம்பிக்கை ஊட்டினார் ராஜன்.

அவரது பட்டறையின் மேலாளரான கார்த்திகேயனிடம் பேசினோம்.

"இங்கே வேலை பார்ப்பதை ஒரு பாக்கியமாக நினைக்கிறோம் சார். ராஜன் கல்யாணமே செய்து கொள்ளவில்லை. கேட்டால், 'நான் பெரியார் கொள்கையைத் திருமணம் செய்து விட்டேன். எனக்கு எதற்கு இரண்டாவது தாரம்? என்பார். ஆரம்பத்தில் வீட்டில் வைத்துச் சிலை செய்து வந்த அவர், 1990 இல் இந்த இடத்தை வாங்கி இங்கே பட்டறை அமைத்தார். 'இந்த இடம் நாலைந்து பேர் தூக்கு மாட்டிச் செத்த இடம். இங்கே அவர்களின் ஆவி உலவுது, பேய் பிறாண்டுது' என்றெல்லாம் சிலர் கதைகளை அள்ளி விட்டார்கள். அதைப் புறந்தள்ளிவிட்டு இந்த இடத்தை வாங்கிப் பட்டறை அமைத்தார். ராஜனுக்கு ரேஷன் கார்டு கூட கிடையாது. ரேஷன் கார்டு வாங்கப் போனபோது, 'என்ன மதம்?' என்று கேட்டிருக்கிறார்கள். இவர், 'திராவிட மதம்' என்றிருக்கிறார். கடுப்பான அவர்கள், 'ஒழுங்கா மதத்தைச் சொல்லுங்க. இல்லாவிட்டால், ரேஷன் கார்டு கிடைக்காது' என்றிருக்கிறார்கள். 'அப்படியொரு ரேஷன் கார்டே எனக்கு வேண்டாம்' என்று கூறிவிட்டு இவர் வந்துவிட்டார். அதுபோல வாக்காளர் பட்டியலிலும் இவரது பெயர் இல்லை. அதனால் ஓட்டுரிமையும் இவருக்கு இல்லை.

பல நாட்டுச் சுற்றுலா கையேடுகளில் ராஜன் சாரின் பெயர் இடம் பெற்றிருக்கிறது. ஒரு முறை பிரான்ஸ் நாட்டிலிருந்து வந்து எங்கள் மியூசியத்தைப் பார்த்துவிட்டுச் சென்ற சிலர், அந்த நாட்டின் ஒன்பதாம் வகுப்பு பாடப் புத்தகத்தில் ராஜனைப் பற்றிய ஒரு பாடத்தை இடம்பெறச் செய்து விட்டார்கள். அதுபோல சென்னையில் உள்ள விக்டோரியா டெக்னிக்கல் இன்ஸ்டிடியூட் தரும் மாநில விருதை ஐந்து முறை இவர் வாங்கியிருக்கிறார். லண்டனில் 97 ஆம் ஆண்டு 'ஆர்ட் அண்ட் ஆக்ஷன்' என்ற பெயரில் நடந்த சிலை வடிக்கும் போட்டியில் உலகம் முழுவதும் இருந்து எட்டாயிரம் பேர் கலந்து கொண்டார்கள். அதில் இந்தியா சார்பாகக் கலந்து கொண்டு ராஜன் சான்றிதழ் பெற்றிருக்கிறார்.

தற்போது மாநிலம் முழுவதும் உள்ள சமத்துவபுரங்களில் தமிழக அரசு நூறு பெரியார் சிலைகளை வைக்கப் போகிறது. அதில் தஞ்சை மாவட்டத்திலுள்ள ஆறு சமத்துவபுரங்களுக்கு பெரியார் சிலை செய்து தரும்படி எங்களிடம் கேட்டிருக்கிறார்கள்" என்றார் அவர்.

ராஜனின் பட்டறையில் பாண்டுரங்கன் என்ற தலித்தும் சிலை செய்யப் பழகி வருகிறார். ஏகரத்தைச் சேர்ந்த அவரிடம் பேசினோம். "கூலி வேலை பார்த்து வந்த நான், இப்போது நான்கு வருடங்களாக இங்கே தொழில் கற்று வருகிறேன். அடுத்த வருடம் தனியாகப் பட்டறை போடப் போகிறேன். இந்தத் தொழிலைச் செய்வதை நினைத்தால் எனக்கு நெகிழ்ச்சியாக இருக்கும் சார். கோயில்களிலும் கருவறைகளிலும் நுழைந்து சிலை எப்படி இருக்கிறது என்று எங்களைப் பார்க்கக்கூட விடாத இந்த சமூகத்தில், என் இன ஆட்கள் செய்த சிலைகள் முக்கிய கோயில்களிலும், கோயில் கருவறைகளிலும் இருப்பதை நினைத்தால் பெருமையாக இருக்கிறது. நாங்கள் தொட்டுத் தடவி, செதுக்கி, கூர் நேர் பார்த்து அங்குல அங்குலமாக வடித்துத் தரும் சிலைகளை மற்றவர்கள் வணங்குகிறார்கள் எனும்போது மனதுக்குள் ஒரு சிலிர்ப்பு ஏற்படுகிறது. எல்லா எதிர்ப்பையும் மீறி எங்களுக்கு ஒரு நம்பிக்கையும், திடமும் கொடுத்து இந்தத் தொழிலில் ஈடுபடுத்தியவர் ராஜன் அய்யா தான். எங்களுக்கு அவர் இன்னொரு பெரியாராகத் தெரிகிறார்" என்றார் பாண்டுரங்கன் நெகிழ்வுடன்.

**நன்றி : 'குமுதம் ரிப்போர்ட்டர்'
11.1.2009**

**திரிபுவாத திம்மன்கள் – யார்? அடுத்த இதழில்**

## கோவை சிறையில் தா.பாண்டியன் தோழர்களை சந்தித்தார்

தேசிய பாதுகாப்புக்கு களங்கம் விளைவித்ததாகவும், கலவரம் ஏற்படும் வகையில் பேசியதாகவும் கைது செய்யப்பட்டு கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள இயக்குனர் சீமான், தமிழ் தேச பொதுவுடைமை கட்சி பொதுச் செயலாளர் மணியரசன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோரை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநில செயலாளர் தாபாண்டியன் சிறையில் சந்தித்து நலம் விசாரித்தார். அவர்களை பார்த்துவிட்டு வெளியே வந்த தா. பாண்டியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கொளத்தூர் மணி, இயக்குனர் சீமான், மணியரசன் ஆகியோர் தேசிய பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் விதத்தில் பேசியதாக கைது செய்யப்பட்டு கடந்த ஒரு மாதமாக கோவை சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு கடந்த 2 முறையாக பிணை மறுக்கப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்புக்கு களங்கம் விளைவித்ததாகவும், கலவரம் ஏற்படும் வகையில் பேசியதாகவும் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் தந்த புகாரின் பேரில் சில நாட்கள் கழித்து இவர்களை போலீசார் கைது செய்துள்ளனர். இவர்கள் மீது கொடுத்த புகாரை முறையாக விசாரித்து முதல் தகவல் அறிக்கை (எப்.ஐ.ஆர்.) பதிவு செய்யவில்லை. புகாரை விசாரிக்காமலேயே பிணையில் வெளிவர முடியாத வகையில் வழக்கு பதிவு செய்து சிறையில் அடைத்துள்ளனர் என்று கூறினார்.

## மறைவு

மதுரை மாவட்ட பெரியார் பெருந்தொண்டர் கைவண்டி கருப்பு அவர்களின் மகனும், கழகத் தொண்டருமாகிய க. திராவிடமணி (30) 8.12.2008 அன்று மரணமடைந்தார். மதுரை மாவட்ட கழகத் தோழர்களும், தோழமை அமைப்புத் தோழர்களும் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றனர். எந்த மூடச் சடங்குமின்றி உடல் அடக்கம் நடந்தது.

## நன்கொடை

புதுச்சேரி மாநிலம் அரியாங்குப்பம், மணவெளி, கழகச் செயல்வீரர், இரா. வேல்முருகன்-அருணா இணையர்களின் மகள் இரா. வெண்ணிலா முதலாம் ஆண்டு பிறந்த நாள் 15.12.2008 சிறப்பாக கொண்டாடப்பட்டது. புரட்சிப் பெரியார் முழக்க வளர்ச்சி நிதியாக ரூ.1000 அளிக்கப்பட்டது. (நன்றி-ஆர்)

## வந்த கடிதம்


'புரட்சிப் பெரியார் முழக்கம்' 25.12.2008 இதழ் கண்டேன். பெரியார் நூல்கள் நாட்டுடைமையாக்க வேண்டும் என்று தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என் நெஞ்சில் தேனாய் இனித்தது. பெரியார் நூல்களை அரசுடைமையாக்கிட நாம் மக்கள் இயக்கம் கட்ட வேண்டும். பெரியார் நூல்களை ஆதிக்கவாதிகளின் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டியது ஒவ்வொரு உண்மையானப் பெரியார் தொண்டரின் நீங்காக் கடமையாகும். 'வி.பி.சிங் ஆட்சிக்கு எதிராக அரங்கேறிய தீக்குளிப்பு நாடகங்கள்' என்ற விடுதலை இராசேந்திரனின் இரங்கலுரை அற்புதம்.

**– தங்க. சங்கரபாண்டியன்,
சென்னை – 600 103.**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 23rd January 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | www.puratchiperiyarmuzhakkam.com | திருவள்ளுவர் ஆண்டு 2040 | சனவரி 29, 2009 | புரட்சி 8 | முழக்கம் 03 | விலை : ரூ.2.50


## இலங்கை ராணுவத்துக்கு உதவி: சோனியாவே பின்னணி?

தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த உணர்வை மத்திய அரசு புறக்கணித்து, சிங்கள ராணுவத்தின் தமிழின அழித்தொழிப்புக்கு ராணுவ உதவிகளையும் செய்து வருகிறது. இந்திய அரசின் இந்த முடிவுக்கு பின்னால் இருப்பது காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திதான் என்ற உண்மைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

தமிழகத்தின் ஒருமித்த கோரிக்கைக்கு செவி சாய்க்க மறுத்த இந்திய அரசு, பிரபாகரன் பிடிபடுவார் என்று இலங்கை அரசு அறிவித்து வருவதைத் தொடர்ந்து, பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்கக் கோருவதற்காக இப்போது வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, சோனியா உத்தரவுப்படி இலங்கை செல்வதாக செய்திகள் கூறுகின்றன.

முல்லைத் தீவுப் பகுதியில் கடந்த சில நாட்களில் 300க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை ராணுவம் கொன்று குவித்துள்ளது. இலங்கையிலுள்ள அய்.நா. சபையின் ஒருங்கிணைப்பு அதிகாரி நீல்புனே, இதைத் தெரிவித்த நிலையிலும், இந்தியா, இதைக் கண்டிக்கவில்லை.

# ஈழத் தமிழருக்காக சிறை நிரப்பத் தயாராவோம்!

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறைகூவல்





ஒரு மாத சிறைவாசத்துக்குப் பின் கோவை சிறையிலிருந்து விடுதலையான கழகத் தலைவர் கொளத்தூர் மணி, த.தே.பொ.க. பொதுச் செயலாளர் பெ. மணியரசன், இயக்குனர் சீமான் ஆகியோருக்கு கோவையில் எழுச்சியான வரவேற்பு வழங்கப்பட்டது. கோவையிலிருந்து மேட்டூர் வரை 40 வாகனங்கள் புடை சூழ தோழர்கள், கழகத் தலைவருக்கு வரவேற்பு தந்தனர். சிறை நிரப்பும் போராட்டத்துக்கு தயாராகுமாறு கழகத் தலைவர் கொளத் தூர் மணி வேண்டுகோள் விடுத்தார்.

ஈரோட்டில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியதாக வழக்கு புனையப்பட்டு சிறையிலடைக்கப் பட்ட கழகத் தலைவர், இயக்குநர் சீமான், மணியரசன் ஆகியோர் 32 நாட்கள் சிறைவாசத்திற்கு பிறகு பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

ஈரோடு ஜே.எம்.1 மற்றும் மாவட்ட நீதிமன்றத்தில் போடப்பட்ட பிணை மனுக்கள் 3 முறை தள்ளுபடி செய்யப் பட்டது. இறுதியில் உயர்நீதிமன்றத்தில் பிணை மனுதாக்கல் செய்யப்பட்டு, நிபந்தனையற்ற பிணை வழங்கியது. அந்த உத்தரவின் அடிப்படையில் சனவரி 20 ஆம் தேதி மாலை கழகத் தலைவர் உட்பட 3 பேரும் சிறையிலிருந்து வெளியே வரும்போது கோவை சிறைவாயிலில் கழகப் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் தலைமையில் எழுச்சியான வரவேற்பு வழங்கப் பட்டது.

சிறை வாயிலில் மதியம் 3 மணி முதலே தோழர்கள் வரத் துவங்கினர். கோவை மாநகரம், திருப்பூர், பொள்ளாச்சி, பல்லடம், உடுமலை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து தோழர்கள் சிறையிலிருந்து வரும் தலைவர்களை காண ஆர்வத்துடன் வந்திருந்தனர். மாலை 5 மணிக்கே சுமார் 500க்கும், மேற்பட்ட தோழர்கள் குவிந்திருந்தனர்.

திருமலையம் பாளையம் பகுதி கழகத் தோழர்கள் 'ஜமாப்' வாத்தியங்களுடன் வந்து சிறப்பான எழுச்சி பறை முழக்கம் செய்தனர்.

சிறையிலிருந்து வெளியே தலைவர்கள் வரும்போது ஆயிரக்கணக்கில் திரண்டிருந்த கழகத் தோழர்களும் , பல்வேறு அமைப்பினரும், பொது மக்களும் எழுப்பிய முழக்கத்தால் அந்த பகுதியே அதிர்ந்தது. தலைவர்களை ஊர்வலமாக அழைத்துச் செல்ல சிறப்பு வாகனம் ஏற்பாடு செய்யப்பட்டிந்தது. ஆயினும் காவல்துறை அனுமதி மறுத்ததனால் காந்திபுரம் பெரியார் சிலை வரை வாகனத்தில் சென்று அங்கு அய்யா சிலைக்கும், அம்பேத்கர் படத்திற்கும், மார்க்ஸ் படத்திற்கும் மாலை அணிவித்தனர்.

அதன் பின் காந்திபுரம் பெரியார் படிப்பகத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. ஏறக்குறைய 50க்கும் மேற்பட்ட செய்தியாளர் சந்திப்பிற்கு பிறகு குழுமியிருந்த தோழர்கள் மத்தியில் தலைவர்கள் உரை நிகழ்த்தினார்கள். அதன் பின் இயக்குனர் சீமான் படப்பிடிப்பு தளத்திற்கு சென்றார்.

(4 ஆம் பக்கம்)

## பார்ப்பனர்களின் பூணூல் இறுமாப்பு!

ஈழத் தமிழர்களின் பூர்வீகத் தாயகத்தின் மீது முப்படைகளையும் ஏவி, ராணுவத் தாக்குதல் நடத்துவதை இந்தியப் பார்ப்பன ஆட்சியானாலும், பார்ப்பன ஊடகமானாலும் கண்டிக்க முன்வரவில்லை.

நார்வே தலையீட்டில் உருவான சமரச உடன்பாட்டில் தமிழர்களின் பிரதேசத்தை சிறீலங்கா அங்கீகரித்தது. தமிழர்களின் ஒரே பிரதிநிதியாக விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் அங்கீகரித்து, அந்த இயக்கத்துடன் போர் நிறுத்த உடன்பாடும் செய்து கொண்டது. போர் நிறுத்த உடன்பாடு உருவாகி, மீண்டும் அமைதி திரும்பும் சூழல் உருவான நிலையில் விடுதலைப் புலிகள் தமது மக்களுக்காக ஒரு தலைநகரையும், நிர்வாகக் கட்டமைப்புகளையும் உருவாக்கி, மக்கள் நலத் திட்டங்களை அமுலாக்கி வந்தனர். சிறந்த நிர்வாக அமைப்பையும் வழங்கினர். அமைதியான இந்த சூழ்நிலையை மீண்டும் குலைத்து, போர் நிறுத்த உடன்பாட்டை கிழித்தெறிவேன் என்று சிங்களர்களிடம் வாக்குறுதி தந்து, பதவிக்கு வந்த ராஜபக்சே தான் மீண்டும் தேன்கூட்டைக் கலைத்துப் போர் நிறுத்த ஒப்பந்தங்களுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளை தொடங்கினார். போர் நிறுத்த ஒப்பந்தத்தை தன்னிச்சையாக நிராகரித்தார். போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ள விரும்பினால், இருதரப்பினரும் முன் கூட்டியே ஒரு காலக்கெடுவை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் விதிகளையே தூக்கி எறிந்தார் ராஜபக்சே.

ராஜபக்சேயின் இந்த பச்சை இனவெறியை இந்தியா கண்டிக்கவில்லை. பார்ப்பன ஊடகங்கள் கண்டிக்க தயாராக இல்லை. மாறாக - ராஜபக்சேயைத் தூண்டிவிட்டன. போர் நிறுத்தத்தைக் குலைக்கும் நடவடிக்கைகளுக்கு தூபம் போட்டன.

ராஜபக்சேயின் ராணுவ வெறியாட்டம் எல்லை மீறியது; கைவிடப்பட்ட குழந்தைகளுக்காக நடத்தப்பட்ட 'செஞ்சோலை' முகாம் மீதே குண்டு வீசி, 63 குழந்தைகளை பிணமாக்கியது ராஜபக்சே ராணுவம். தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளரும், சமரசப் பேச்சு வார்த்தைகளில் பல சுற்றுகளில் பங்கேற்றுப் பேசியவருமான தமிழ்ச்செல்வனை குறி வைத்து குண்டு வீசி பிணமாக்கினார்கள். மீண்டும் ராணுவத்தின் துப்பாக்கிகள், தோட்டாக்களை கக்கின. போர் மேகம் சூழ்ந்தது.

சுனாமி சீற்றத்துக்கு உள்ளாகி உடைமைகளையும், உயிரையும் இழந்த பல்லாயிரம் ஈழத் தமிழர்களுக்கு சர்வதேச நாடுகள் வழங்க முன் வந்த மறுவாழ்வு நிதி உதவியைக்கூட கிடைக்கவிடாமல் ராஜபக்சே ஆட்சி தடுத்து நிறுத்தியது. வடக்கு-கிழக்கு மாநிலங்களை தனித்தனியே பிரித்துதான் வைப்போம்; ஒன்றாக இணைக்க மாட்டோம் என்று நீதிமன்றத்தின் மூலம் உத்தரவைப் பெற்றது. மிக முக்கிய தேசியப் பிரச்சினையில் நீதிமன்றத்தின் தீர்ப்புகளைப் புறக்கணிக்கும் அதிகாரம் அந்நாட்டின் அதிபருக்கு உண்டு என்றாலும், இந்த முக்கியப் பிரச்சினையில் அதைப் பயன்படுத்த ராஜபக்சே தயாராக இல்லை.

தமிழர்கள் மீது நடத்தப்படும் இனப் படுகொலையினால் உலகின் மிக மோசமான மனித உரிமை மீறல் நடக்கும் நாடுகளில் ஒன்றாக சிறிலங்கா அறிவிக்கப்பட்டது. அய்.நா.வின் மனித உரிமைக் குழுவில் இடம் பெற்றிருந்த சிறீலங்கா - இதன் காரணமாகவே குழுவிலிருந்து நீக்கப்பட்டது.

தமிழ் ஈழ மக்களின் தலைநகரான கிளிநொச்சிக்குள் ராணுவம் நுழைந்தது. அப்போதும் விடுதலைப்புலிகள் எதிர்த் தாக்குதல் நடத்தவில்லை. அங்கே வாழ்ந்த 3 லட்சம் தமிழர்களும் தங்களின் பாதுகாப்புக் கவசமான விடுதலைப்புலிகளோடு முல்லைத் தீவுக்கு இடம் பெயர்ந்தார்கள். அப்போதும் ராணுவம் விடவில்லை. முல்லைத் தீவை நோக்கியும் படையுடன் நுழைந்திருக்கிறது.

இப்போது மக்களை பாதுகாப்புக் கேடயமாக புலிகள் பயன்படுத்துகிறார்கள் என்று ராஜபக்சேயும் பார்ப்பன 'இந்து' ஏடும் பார்ப்பன இந்திய அரசும் ஒரு பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளன.

மக்களின் கேடயமே விடுதலைப்புலிகள் தான். தங்கள் இன்னுயிரை இழந்து, தற்கொலைப் படையாகி, இந்த வீரர்கள் 30 ஆண்டுகாலமாக போராடிக் கொண்டிருப்பதே இந்த மக்களின் விடுதலைக்குத்தான்.

தமிழ் ஈழ மக்கள் அனைவருக்கும் இது புரியும். சர்வதேசத்துக்கும் தெரியும். துரோகக் கும்பலின் உண்மையான முகமும், ஈழத் தமிழர்களுக்கு நன்றாகவே தெரியும். தமிழ் மக்கள் கருணாவையும், டக்ளசையும் புரிந்தே வைத்துள்ளனர்.

மக்களைக் கேடயமாக்கி, விடுதலைப்புலிகள் போரிடுகிறார்கள் என்று ராஜபக்சே, ஏதோ, தமிழர்கள் மீது பாசம் பொங்கி வழிபவர் போல் பேசுகிறார். 'இந்து' பார்ப்பானோ ராஜபக்சேயின் மனிதாபிமானத்தை வானளவப் புகழ்கிறான்.

இந்திய ராணுவத்தினரே தமிழர்களின் இனப்படுகொலைக்காக சிங்கள ராணுவத்துடன் களத்தில் நிற்கும் அதிர்ச்சி தரும் உண்மைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தமிழ் மக்கள் மீது குண்டு வீசிய விமான ஓட்டியாக இந்திய விமானப் படையைச் சார்ந்த ஒருவனும் பாகிஸ்தான் விமானப் படையைச் சார்ந்த ஒருவனும் புலிகளிடம் பிடிபட்டுள்ளதாக செய்திகள் வருகின்றன.

பார்ப்பனர் கூட்டம் மகிழ்ச்சிக் கூத்தாடுகிறது.

இந்திய பார்ப்பனிய ஆட்சியே!

தமிழினப் படுகொலைகளை கண்டு மகிழ்ச்சிக் கூத்தாடி, ராஜபக்சேயுடன் கட்டிப் புரளும் 'இந்து', 'தினமலர்' திமிர் பிடித்தக் கூட்டமே!

ஈழத்தில் போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் குலைத்த ராஜபக்சேயை நீ கண்டித்தாயா? அமைதியான தீர்வை நோக்கித் திரும்பியபோது - அதைக் குலைத்து மீண்டும் ராணுவ மோதலை உருவாக்கிய சிங்கள அரசைக் கண்டித்தாயா?

செஞ்சோலைக் கொடுமையையோ, சுனாமி நிவாரண உதவிகளைத் தடுத்ததையோ, கண்டித்தாயா?

**இந்தியப் பார்ப்பன அரசே!**

**பார்ப்பன 'ராமே!' துரோகக் காங்கிரசே!**

**தமிழ்நாட்டுத் தமிழர்களின் உணர்வுகள் உனக்கு அவ்வளவு அலட்சியமா? இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் உங்களின் பார்ப்பன இறுமாப்புத் தொடரப் போகிறது?**

**பதில் கிடைக்கும் காலம் விரைந்து வரும்! மறந்து விடாதீர்!**

# ஆனந்தக் கடலில் 'அவாள்' கூட்டம்!

முல்லைத் தீவில் ராணுவத்தின் ஷெல் வீச்சுக்கு நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் உயிர்ப் பலியாகியுள்ளனர். இதை அய்.நாவின் அதிகாரியே கண்டித்துள்ள செய்தி வெளி வந்த அதே நாளில் (ஜன.27) 'இந்து' ஏடு வெளியிட்ட வாசகர்களுக்கு கடிதங்களைக் கீழே தருகிறோம்:

*எல்.வி. முகுந்தன், சென்னை என்ற பெயரில் வெளிவந்த கடிதம்:*

"இலங்கையின் 20 ஆண்டுகால சிவில் யுத்தம், முடிவை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. கடந்தகால இலங்கை அதிபர்கள் சந்தித்த தோல்வியை ராஜபக்சே வெற்றியாக்கி சாதித்துக் காட்டிவிட்டார். விடுதலைப்புலிகள் தோல்வியின் எல்லைக்கு வந்து நிற்கிறார்கள். தமிழ்நாட்டுக்கு ஈழத் தமிழர்கள் அகதிகளாக வருவதே - அவர்கள் புலிகளையோ, பிரபாகரனையோ ஆதரிக்கவில்லை என்பதை காட்டுகிறது. தீவிரவாதத்தை ஒடுக்குவதில் - இந்தியா, பெரிய நாடாக இருந்தாலும், இலங்கையிடமிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்."

*கடலூரிலிருந்து ரம்யா ரவீந்திரன் என்ற பெயரில் வெளி வந்துள்ள வாசகர் கடிதம்:*

"ராஜபக்சே வெற்றிக் கனியை சுவைக்கப் போகிறார். முல்லைத் தீவும் வீழப் போகிறது. அங்கே தான் பிரபாகரன் பதுங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த நெருக்கடியான நேரத்தில் இந்தியா, இலங்கை அரசுக்கு கட்டாயம் உதவ வேண்டும். தமிழ்நாட்டில், சில அரசியல் கட்சிகளின் கோரிக்கையை ஏற்று, இலங்கை அரசை பகைத்துக் கொள்ளக் கூடாது."

*எஸ். இராமச்சந்திரன், சென்னை என்ற பெயரில் வெளியிடப்பட்ட கடிதம்:*

பிரபாகரன் பிணையக் கைதிகளாக பிடித்து வைத்துள்ள ஒரு லட்சம் தமிழர்களை விடுவிக்குமாறு, இப்போதாவது, தமிழ்நாட்டிலுள்ள விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் பிரபாகரனுக்கு வேண்டுகோள் வைக்க வேண்டும்."

- இப்படி கடிதங்களை பார்ப்பனக் கொழுப்புடன் வெளியிடுகிறது 'இந்து'.

இதே தேதியில் 'இந்து எழுதிய தலையங்கம் - பிரபாகரன் தோல்வி அடைந்துவிட்டதாக மகிழ்ச்சி கூத்தாடுகிறது. 2006 ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டில் 15000 சதுர மைல் இருந்தது. இப்போது அது 350 சதுர கிலோ மீட்டராக சுருங்கிவிட்டதாக சிங்கள ராணுவத்துடன் சேர்ந்து வெற்றி முழக்கமிடுகிறது அந்த ஏடு.

2006 ஆம் ஆண்டு வெளிவந்த இதே ஏட்டில் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் 15000 சதுர கிலோ மீட்டர் பகுதி இருந்ததை எப்போதாவது ஒப்புக் கொண்டு எழுதியது உண்டா? இவ்வளவு பெரிய பகுதியை மக்கள் ஆதரவின்றி கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியுமா? தமிழர்கள் தங்களுக்கான பகுதியை தங்களிடம் வைத்திருப்பது எப்படி கட்டுப்பாடு ஆகும் என்று 'இந்து' பார்ப்பானை கேட்கிறோம்! அவ்வளவு பெரிய தமிழர் பகுதியை, சிங்கள ராணுவம் பிடித்து வைத்திருப்பது என்பதே 'ஆக்கிரமிப்பு' அல்லவா? இந்து ராமின் மனுதர்மக் கண்ணோட்டத்தில் இவை எல்லாம் நீதியாகிறதா?

தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களையெல்லாம் கோமாளி என்று திமிருடன் பேசிய ராணுவ தளபதி பொன்சேகாவுக்கு 'இந்து' தலையங்கம் பாராட்டு மழைகளை பொழிகிறது. "25 ஆண்டுகால போரில் 95 சதவீதம் முடிந்துவிட்டது" என்று பொன்சேகா கூறியிருப்பது மிகைப்படுத்தப்பட்ட அறிவிப்பு அல்ல; மிகச் சரியாகவே பேசுகிறார் என்று பூரிக்கிறது.

சிங்கள ராணுவம் வெற்றி மேல் வெற்றி குவிக்கிறது என்று பூரிக்கும் 'இந்து' ஏட்டின் தலையங்கம் - ராணுவத்தின் முன்னேற்றத்தைத் தடுக்க கல்மடு நீர்த் தேக்கத்தை விடுதலைப் புலிகள் தகர்த்ததைக் கண்டிக்கிறது.

ராணுவம் முல்லைத் தீவில் முன்னேறுவதைத் தடுக்க முயன்ற நடவடிக்கையை முல்லைத் தீவிலிருந்து மக்கள் வெளியே வர முடியாமல் தடுக்கவே புலிகள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாக பழி போடுகிறது!

அட, மான - ஈனமற்ற - பார்ப்பனப் பதர்களே! 'போரில்லாப் பகுதி' என்று ராணுவத்தால் அறிவிக்கப்பட்ட பகுதிக்கு வந்த அப்பாவித் தமிழர்கள் மீது சிங்கள ராணுவம் குண்டு வீசி, பல நூறு மக்களை பிணமாக்கியுள்ளதே. இதை ஊடகங்கள் வெளியிட்டு வருகின்றனவே. இந்து பார்ப்பானின் காமாலைக் கண்களுக்கு ராணுவத்தினர் இந்த அட்டூழியங்கள் தெரியாதோ! மக்களைக் காக்கவே - மக்கள் விடுதலைக்குப் போராடும் இயக்கத்தை மக்களுக்கு எதிராக சித்தரிப்பது எவ்வளவு கேவலம்? விடுதலைப் புலிகள் பிரபாகரனின் கதை முடிவுக்கு வந்துவிட்டதாக எக்காளச் சிரிப்பு சிரிக்கிறான் 'இந்து' பார்ப்பான். விடுதலைப்புலிகளையும் பிரபாகரனையும் இப்படி எல்லாம் பாப்பாரக் கூட்டம் எழுதுவதற்கு இந்த நாட்டில் உரிமை உண்டு. ஆனால், இதற்கு பதில் கூறி, தமிழின உணர்வோடு விடுதலைப்புலிகளையும், பிரபாகரனையும் ஆதரித்துப் பேசினால் மட்டும் கலைஞர் ஆட்சியில் அடக்குமுறை பாயும்; சிறைக் கதவுகள் திறக்கப்படும்.

இது ஜனநாயக நாடு தானா?

தமிழன் ஆட்சி நடந்தாலும் இங்கே பார்ப்பன நாயகம் தானா?

வெட்கம்! வெட்கம்! வெட்கம்!

**வி.பி.சிங்கை இழிவுபடுத்தும் 'புதிய ஜனநாயக'த்திற்கு பதில் அடுத்த இதழில்**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

## தீஸ்டா செதல்வாட் — விளக்கம்

# உளவுத்துறையில் ‘இந்துத்துவ’ சக்திகள்

*‘காம்பட் கம்யூனலிசம்’ ஆசிரியரும், மதவெறி சக்திகளுக்கு எதிராக களத்தில் நின்று போராடும் போராளியுமான தோழர் தீஸ்டா செதல்வாட் டிச.11 அன்று ‘மதச்சார்பற்றோர் மாமன்றம்’ சார்பில் சென்னையில் ஆற்றிய உரை. சென்ற இதழ் தொடர்ச்சி.*

நீதிமன்ற அவமதிப்புச் சட்டம் எல்லா ஜனநாயக நாடுகளிம் நீக்கப்பட்டுவிட்டது. ஆனால் நமது நீதித்துறைக்கு அதை விட்டுவிட மனசில்லை. ஆனால் அது நிச்சயம் ரத்து செய்யப்படவேண்டியது. அது ஒரு தொன்மையான சட்டம். தவறான தீர்ப்புகளை விமர்சனம் செய்வதிலிருந்து அது நம்மைத் தடுக்கிறது. மக்களின் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டு எந்த அமைப்பும் இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. நீதித்துறை மட்டும் இதற்கு ஏன் விதிவிலக்காக இருக்க வேண்டும்?

நாம் அரசியல்வாதிகளை திட்டுகிறோம். அவர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது மக்களை சந்திக்கச் செல்கின்றனர். ஆனால், ஒரு காவல்துறை ஊழியரை ஒருமுறை நியமனம் செய்துவிட்டால், ஒரு நீதிபதியை ஒருமுறை நியமனம் செய்துவிட்டால், பிறகு அவர் மக்களின் விமர்சனத்துக்குள் எப்போதுமே வருவதில்லை. அவருடைய செயல்பாடுகளில் குறை காண்கின்ற வாய்ப்பு மக்களுக்கு எப்போதுமே கிடைப்பதில்லை. ஆனால் ஒரு நாகரீகமான நேர்மையான தணிக்கை அவசியம். யார் மீதும் சேறு வாரி இறைப்பது நமது நோக்கமல்ல. எந்த அமைப்பையும் குறைத்து மதிப்பிடுவது நமது எண்ணமல்ல.

ஆனால், ராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தில் பன்வரி தேவி வழக்கில் நடந்தது போன்ற ஒரு தீர்ப்பு கொடுக்கப்படுமானால், உங்களுக்கு அது பற்றி கொஞ்சம் சொல்லி விடுகிறேன். பன்வரி தேவி ஒரு துணிச்சலான பெண். ராஜஸ்தானில் பால்ய விவாகத்துக்கு எதிராகப் போராடிய ஒரு தலித் அவர். அவர் ஒரு சதின். சதின் என்றால் சமூக ஊழியர் என்று பொருள். உயர் ஜாதி ஆண்களால் அவர் கொடூரமான முறையில் கற்பழிக்கப்பட்டார். தொடர்ந்து அவர் அப்படி குரல் எழுப்பக்கூடாது என்பதற்காக அது ஒரு பாடமாம். ஆனால் அவர் உயர்நீதிமன்றத்துக்கு சென்றார். ஆனால் ராஜஸ்தான் உயர்நீதிமன்றம் என்ன சொன்னது? ஒரு உயர் ஜாதி ஆண் ஒரு தாழ்ந்த ஜாதிப் பெண்ணை கற்பழிப்பது சாத்தியமில்லை என்று ராஜஸ்தான் உயர்நீதிமன்றம் சொன்னது!

தலித் பெண்கள் இயக்கத்தில் இருக்கும் எனது நண்பர்கள் ஒரு முழக்கத்தை சொல்வார்கள். பகலில் தீண்டத்தகாதவர், இரவில் தீண்டத் தகுபவர். இது சிரிப்பதற்கல்ல. நமது கலாச்சாரத்தின் துயரக் கதை இது. ஒரு நீதிபதி இப்படி ஒரு தீர்ப்பு வழங்குவாரென்றால், அவரை விமர்சிக்க நமக்கு உரிமை இல்லையா? அதற்கு எதிராக போராட நமக்கு உரிமை இல்லையா?

நமது உளவுத்துறை பற்றியும் நான் கொஞ்சம் பேசிவிட விரும்புகிறேன். ஐ.பி.மற்றும் ரா. இவை எந்த பாராளுமன்றத்தின் விமர்சனப்பார்வைக்கும் படாமல் இயங்கும் அமைப்புகள். எவ்வளவு நிதி அவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது, எப்படி அந்தப் பணத்தை அவர்கள் செலவு செய்கிறார்கள், அவர்கள் எப்படி செயல்படுகிறார்கள், எந்த இயக்கங்களை அவர்கள் ஆதரிக்கிறார்கள் — எதுவுமே ஆராயப்படுவதில்லை. எனவே காவல்துறை, நீதித்துறைக்கு அடுத்தபடியாக, உளவுத்துறையிலும் சீர்திருத்தங்கள் கொண்டு வர வேண்டும், அதற்காக போராட வேண்டும் என்று மக்கள் தலைவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய உளவுத்துறையில் (அய்.பி.) ஒன்று அல்லது இரண்டு முஸ்லிம்களுக்கு மேல் பார்க்க முடியாது. ஒரு பொதுக் கூட்டத்தில் இந்த கருத்தை நான் பிரதம மந்திரிக்கு முன்னால் வைத்தேன். இந்திய உளவுத்துறையில் வலது சாரியை நோக்கிய சித்தாந்த சாய்வு இருக்கிறது. நான் இதை மிகுந்த பொறுப்புணர்வவோடுதான் சொல்கிறேன். ஏனெனில் நான் இது பற்றி ஆழமாக ஆராய்ச்சி செய்துள்ளேன்.

நான்டே வழக்கை நான் புலனாய்வு செய்து கொண்டிருந்த நேரத்தில், பூனாவில் பணி புரிந்து கொண்டிருந்த ஒரு மத்திய புலனாய்வு அதிகாரி ஒரு பஜ்ரங்தள் உறுப்பினருக்கு ஆயுதம் தயாரிக்கும் முறையையும், பயன்படுத்துவதையும் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்ததைக் கண்டோம். எனவே புலனாய்வுத்துறையும் மக்கள் ஆய்வுக்கும் விமர்சனத்துக்கும் உட்பட்டதாக வரவேண்டிய அவசிய முள்ளது.

முன்னாள் புல னாய்வுத்துறை அதிகாரிகள் எழுதிய மூன்று புத்தகங்களை இங்குள்ள அறிஞர் பெருமக்களுக்கு நான் சிபாரிசு செய்கிறேன். நான் அவற்றைப் படித்துள்ளேன். அவர்கள் சொல்வதையெல்லாம் நாம் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் அனை வருமே ஒரு விஷயத்தை ஒத்துக் கொள்கிறார்கள. இந்திய உளவுத்துறை தொழில்ரீதியான திறமைகளில் குறையுள்ளதாக உள்ளது என்பது தான் அது. இந்திய அரசியல் சாசனத்தின்படி உளவுத்துறை சீர்திருத்தத்துக்கும் விமர்சனத்துக்கும் உட்பட்டதுதான்.



ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதத்தை ஒடுக்க, ஒரு முன்னாள் அரசு ஆர்எஸ்எஸ் உதவியை நாடலாமா என்று கூட யோசித்தது என்று ஒரு புத்தகம் கூறுகிறது. இந்தப் போக்கு எவ்வளவு அபாயகரமானது என்பதை நீங்கள் புரிந்துகொள்ளலாம்.

மதச்சார்பற்ற ஜனநாயகத்துக்கான சவால்களைப் பற்றிப் பேசும்போது ஒரு சில ஆலோசனைகளை நான் வழங்க ஆசைப்படுகிறேன். அதில் முக்கியமானது கல்வி. 13 ஆண்டுகள் பள்ளி வாழ்க்கையில் நம் குழந்தைகளுக்கு நாம் தரும் பாடப்புத்தகங்கள், சொல்லித்தரும் வரலாறு, உருவாக்கும் சமூக உணர்வு இதெல்லாம் முக்கியம். தமிழ்நாட்டில் சரியாகத்தான் இருக்கும். ஆனால் குஜராத், மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள பாடப்புத்தகங்களில் ஜாதியை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டங்களுக்கு மிகக்குறைந்த இடமே அளிக்கப்பட்டுள்ளது. பெயருக்காக. உடல் உழைப்புக்கு மரியாதை கொடுக்கப்படவில்லை. சொல்லப்போனால் உடல் உழைப்பை மரியாதைக் குறைவாகப் பார்க்கவே குழந்தைகள் கற்பிக்கப்படுகிறார்கள். மிகவும் ஜாதியம் சார்ந்த அணுகுமுறை. அதிலும் குஜராத்தில் மிகமிக மோசம். பொருளாதார ரீதியாக ஜெர்மனியையும் இத்தாலியையும் சக்தி மிகுந்த நாடுகளாக மாற்றியதற்காக இட்லரும் முசோலினியும் புகழப்படுகிறார்கள். மோடி இன்று குஜராத்தை மாற்றிக் கொண்டிருப்பதைப்போல.

எனவே என்னவிதமான வரலாற்றை நாம் நம் குழந்தைகளுக்குப் போதிக்கிறோம்? நாட்டில் இருந்த ஒவ்வொரு ஜாதியும் காலனிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய வரலாற்றைச் சொல்கிறோமா? இல்லை. விடுதலைப் போராட்டத்தில் பெண்களுக்கு உறுதியான பங்கிருந்தது என்பதைச் சொல்கிறோமா? இன்னும்கூட அவர்கள் போராடிக்கெண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறோமா? இல்லை. காலனிய சக்திகள் நம் நாட்டுக்குள் வருவதற்கு நீண்ட காலத்துக்கு முன்னரே, கிபி 58ல், மலபார் கடல் பகுதி வழியாக, தூாய தாமஸ் என்பவர் மூலமாக, கிறிஸ்தவம் இந்தியாவுக்குள் வந்தது என்று சொல்கிறோமா? இஸ்லாம் வணிகர்கள் மூலமாக வந்தது என்று சொல்கிறோமா? சிந்துப் பகுதி படையெடுக்கப்படுவதற்கு நீண்ட காலத்துக்கு முன்பே, 110 ஆண்டுகளுக்கு முன்பே, பெருமாள் சேர்மேன் என்ற அரசன் முஸ்லிமாகிய இஸ்லாத்தைப் பரப்பினான் என்ற வரலாற்றைச் சொல்கிறோமா?

இப்படியெல்லாம் சொல்லித்தராததனால், ஜாதியம் சார்ந்த வரலாறுதான் அவர்கள் மனதில் வேர் விடுகிறது. விடுதலை, சமத்துவம் ஆகிய கொள்கைகளுக்காகவே பெருமளவில் ஒடுக்கப்பட்ட சாதி இந்தியர்கள் கிறிஸ்தவர்களாகவும், முஸ்லிம்களாகவும் மாறினர் என்ற வரலாற்றைச் சொல்கிறோமா? கேரளாவில் கொத்தடிமைச் சட்டம் ரத்தான போதுதான் அதிக அளவிலான மதமாற்றங்கள் நிகழ்ந்தன என்பதைச் சொல்கிறோமா? ஏனெனில் அடிமைகளாக இருந்த மக்கள் விடுதலை அடைந்தபோது இஸ்லாத்திலோ, கிறிஸ்தவத்திலோ தங்கள் சுயமரியாதையும் கண்ணியமும் காக்கப்படும் என்று நம்பினார்கள்.

தலித் கிறிஸ்தவர்கள், தலித் முஸ்லிம்களுடைய பிரச்சனை இன்று ஒரு அரசியல் பிரச்சனை. இன்றைய காலகட்டம் உரிமை மறுக்கப்படும் காலகட்டமாக உள்ளது. சோழர்களின் ஆட்சிக்காலத்தில் எப்படி இந்து மதம் தென் கிழக்கு ஆசியாவில் பரவியது என்றும் நாம் சொல்லித் தருவதில்லை.

டாக்டர் பாபா சாகிப் அம்பேத்கரின் உரைகள் பற்றி நம் குழந்தைகளுக்கு நாம் எதுவும் சொல்லித்தருவதில்லை. ஜோதிபா புலே ஏன் பேசினார் என்று விளக்குவதில்லை. தமிழ்நாட்டுக்கு வெளியே பெரியார் கற்பிக்கப்படுவதில்லை. நமது கல்வி அமைப்பில் உள்ள உள்ளடக்கத்தில் பெரும் மாற்றம் தேவைப்படுகிறது. நாம் சொல்லிக்கொடுக்கும் வரலாற்றில், சமூக சேவையில் எல்லாம் பெண்களையும், சமுதாயத்தையும் நாம் எப்படி பிரதிநிதித்துவப் படுத்துகிறோம்? இந்த நாட்டின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் ஒவ்வொரு சமுதாயமும் செய்த பங்களிப்பு என்ன? இதையெல்லாம் மனதில் கொண்டு நமது கல்வி உள்ளடக்கத்தை நாம் சீரமைக்க வேண்டும்.

இந்த சூழ்நிலையில் கல்விக்கூடங்கள் மூலமாக நமக்கு இருக்கும் பெரிய சவாலும் ஆபத்தும் ஆர்எஸ்எஸ்ஸின் சிஷு மந்திர், சரஸ்வதி சிஷு மந்திர் மற்றும் விஎச்பியின் ஏகல் வித்யாலயா ஆகியவையாகும். குஜராத், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் ஒரிஸ்ஸா போன்ற மத்திய இந்தியாவில், அந்த பழங்குடி இனத்தவருக்கு எந்த அரசும் கல்வி கொடுக்காத சூழ்நிலையில், விசுவ இந்து பரிசத் ஒரு இந்து மதக் கல்வியை புகட்டும் ஏகல் வித்யாலயாவைத் திறந்து வைக்குமானால், உங்கள் குழந்தைகள் அந்த பள்ளிகளுக்கு அனுப்பாதீர்கள் என்று அந்த பழங்குடியினரிடம் சொல்லும் தகுதியோ உரிமையோ நமக்கு எப்படி வரும்? இன்றைக்கு உள்ள பெரிய பிரச்சனை அதுதான்.

நமது நாட்டை ஆக்கிரமிக்கும் சவால்களை எதிர்கொள்ள விரும்பினால், ரூல் ஆப் லா’ தொடர்பான இந்த பிரச்சனைகள், மற்றும் கல்விக்கான சமூக மாற்றம் குறித்தான பிரச்சனை — இவையெல்லாம் தேர்தலின்போது நமது அரசியல் கட்சிகளின் பிரச்சனையாக மாற வேண்டும். தீவிரவாதம் நாட்டின் எந்த மூலையில், எந்த சமூகத்தில் இருந்து வந்தாலும், எல்லை தாண்டி வந்தாலும், நாம் அதை எதிர்க்கிறோம். அதுபோல, வெறுப்பை உமிழும், வெறுப்பைத் தூண்டும், வெறுப்பை வளர்க்கும் எல்லாப் பேச்சையும் நாம் முற்றிலுமாக தடை செய்ய வேண்டும்.●

## சட்டக் கல்லூரி மாணவர்கள் காலவரையற்ற உண்ணாவிரதம்

*ஈழத்தில் ராணுவத்தின் இனப்படுகொலைகளைத் தடுத்து நிறுத்தக் கோரி செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியைச் சார்ந்த 14 மாணவர்கள் 5 நாட்களாக (ஜன 27 வரை) காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். கடும்குளிரில் திறந்த வெளியில் ஈழத் தமிழர்களுக்காக தங்களையே வருத்திக் கொண்டு பட்டினி கிடக்கும் இந்த உணர்வுள்ள இளைஞர்களின் போராட்டத்தை தமிழக அரசு அலட்சியப்படுத்தி வருகிறது. கடந்த ஜன.24 ஆம் தேதி பிற்பகல் உண்ணாவிரதம் இருந்த தோழர்களை கழக சார்பில் விடுதலை இராசேந்திரன், கேசவன், உமாபதி, அன்பு தனசேகரன், அண்ணாமலை, சபரி, தமிழ்ச்சுடர் உள்ளிட்ட கழகத்தினர் சந்தித்தனர்.*

*தோழர்கள் அனைவருக்கும் கழகத்தின் சார்பில் போர்வைகள் வழங்கப்பட்டன. புதுவை கழகத் தலைவர் லோகு. அய்யப்பன உள்ளிட்ட கழகத் தோழர்கள், தொல். திருமாவளவன், நடிகர் சத்தியராஜ், இயக்குனர் பார்த்திபன், வைகோ ஆகியோர் போராடும் மாணவர்களை சந்தித்து வாழ்த்துரையாற்றினர். கெம்புகுமார், ஆறுமுக நயினார் என்ற இரு மாணவர்கள் நினைவிழந்த நிலையில் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

## பழனி கழகத்தினர் கைது

*காங்கிரஸ் கொடியை எரித்ததாக காவல் துறை வழக்குப் பதிவு செய்து, கழகத் தோழர்கள் சு.மருதமூர்த்தி, நல்லத் தம்பி, கருப்புசாமி, சுல்தான், திருச்செல்வம் ஆகியோரை கைது செய்தது. காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் கார்வேந்தன் இல்லத்தில் காங்கிரஸ் கொடி ஒன்று பாதி எரிந்த நிலையில் கிடந்ததாக புகார் கூறி கார்வேந்தனும், சில காங்கிரசாரும் தாராபுரத்தில் சாலை மறியலில் ஈடுபட்டனர். அதையொட்டி கழகத்தினரை காவல்துறை கைது செய்தது. 10 நாள் சிறையிலிருந்து தோழர்கள் பிணையில் விடுதலையானார்கள். அதன் பிறகு விசாரணை என்ற பெயரில் தாராபுரம் காவல்துறை, கழகத் தோழர்களை ஒவ்வொரு நாளும் விசாரணைக்கு அழைத்து துன்புறுத்தியது. இ.பி.கோ.143, 505, ஏ(2) ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது. பழனி கழக வழக்கறிஞர் கா.செல்லத்துரை, கழகத்தினருக்காக அனைத்து சட்ட உதவிகளையும் வழங்கினார்.*

# காஞ்சிபுரம் மாநாட்டில் பெரியார் தந்த தீர்மானம் என்ன?

**திரிபுவாத திம்மன்கள் - யார்? (17)**

பெரியார் காங்கிரஸ் கட்சிக்குள்ளே வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்காகவே போராடினார்; மக்கள் தொகையில் அவரவர் விகிதாச்சாரத்துக்கேற்ப கல்வி, வேலை வாய்ப்பு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதே பெரியார் கோரிக்கை யாக இருந்தது. அரசியல் சட்டம் முதன்முதலாக பெரியார் போராட்டத்தினால் திருத்தப்பட்ட பிறகு, சமூக கல்வி ரீதியான இடஒதுக்கீடு முறை வந்தது. உச்சநீதிமன்றம் வழக்கு ஒன்றில் வழங்கிய தீர்ப்பில் இடஒதுக்கீடு 50 சதவீதத்துக்கு மேல் இருக்கக் கூடாது என்று கூறியது. ஆனால், அரசியல் சட்டப்படி அப்படி வரையறை ஏதும் இல்லை. இதை கி.வீரமணிகூட பல்வேறு சம்பவங்களில் சுட்டிக்காட்டியுள்ளார். 69 சதவீத இடஒதுக்கீட்டை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் வழக்குகள் வந்த நிலையில் அதை 31(சி) பிரிவின் கீழ் கொண்டு வந்து தமிழக சட்டமன்றம் தீர்மானம் நிறைவேற்றி அதை குடியரசுத்தலைவர் ஒப்புதலுடன் சட்டமாக்கிவிட்டால், உச்சநீதிமன்றத்தின் தலையீட்டை சட்டப்படி தடுக்கலாம் என்ற ஒரு யோசனையை கி.வீரமணி, அன்றைய முதல்வர் ஜெயலலிதாவிடம் முன் வைத்தார். அதை ஜெயலலிதா ஏற்று, சட்டப் பேரவையிலும் தீர்மானமாக்கினார். ஆனால், அதே ஜெயலலிதா ஆட்சி, உச்சநீதி மன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தபோது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் இப்படி ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்ற தகவலையே உச்சநீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வரவே இல்லை. இப்படி ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டதே உச்சநீதிமன்றத்தின் தலையீட்டைத் தவிர்ப்பதற்குத்தான் என்று சொல்லப்பட்டாலும், எந்த நோக்கத்துக்காக கொண்டு வரப்பட்டதோ, அதற்குப் பயன்படுத்த ஜெயலலிதா ஆட்சி தயாராக இல்லை. இந்த சட்டத்தை சட்டசபையில் ஒரு மனதாக ஆதரித்து ஒப்புதல் அளித்த தி.மு.க. உட்பட, அத்தனை கட்சிகளுமே ஏமாற்றப்பட்டன. இதற்காக கி.வீரமணி - ஜெயலலிதாவைக் கண்டித்து எந்த அறிக்கையும் பதிவு செய்யவில்லை. ஜெயலலிதாவுக்கு 'சமூக நீதி காத்த வீராங்கனை' என்ற பட்டத்தை மிகப் பெரும் விழா எடுத்து வழங்கி பாராட்டினார். ஆனால் 'வீராங்கனை' சமூகநீதியைக் காக்க உண்மையில் முன் வரவில்லை.

பட்டம் அளித்ததை 'குமுதம் தீராநதி' ஏட்டுக்கு அளித்த பேட்டி ஒன்றில் நியாயப்படுத்திய கி.வீரமணி, காலம் முழுதும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்துக்காக குரல் கொடுத்த பெரியார் - 50 சதவீத இடஒதுக்கீட்டைகேட்டதாக திரித்துக் கூறினார்.

'குமுதம் தீராநதி' 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாத இதழுக்கு அவர் அளித்த பேட்டியை அப்படியே வெளியிடுகிறோம்.

"குமுதம் தீராநதி கேள்வி : இருந்தாலும் ஜெயலலிதாவுக்கு நீங்கள் 'சமூகநீதி காத்த வீராங்கனை' பட்டம் கொடுத்தது சம்பந்தமான சலசலப்பு இன்னும் நீடிக்கிறதே?

கி. வீரமணி பதில் : 69 சதவிகித ஒதுக்கீடு இப்போதும் வேலை வாய்ப்புகளில், சர்வீஸ் கமிஷனில் அமலாகியிருக்கிறதே? மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரிகளில் சேர்ப்பதற்கு எதிரான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. 31சி என்கிற சட்டப் பாதுகாப்பு போடப்பட்டு இன்றைக்கு நடைமுறையில் இருக்கிறதே? பல மாநிலங்களில் இதை இன்னும் ஆச்சரியமாகப் பார்க்கிறார்கள். **பெரியார் 50 என்று சொன்னதை அவரது தொண்டர்கள் 69 ஆக்கியிருக்கிறோம்**. சமூகநீதி என்பது இடஒதுக்கீட்டிற்கான வார்த்தை. இதைக் காத்ததால் ஜெயலலிதாவை 'சமூகநீதி காத்த வீராங்கனை' என்று சொன்னோம். இதை நிறைவேற்றியது இவர்களின் துணிச்சல் தானே? அந்த அம்சத்தில் இப்போதும் இந்த அரசு துளிகூடப் பின் வாங்கவில்லையே!" (உச்சநீதிமன்றத்தில் மவுனம் சாதித்தது பின்வாங்கல் இல்லையோ!)

தாம் 69 சதவீதத்தைப் பெற்றுவிட்டதாகக் காட்டிக் கொள்ள பெரியார் 50சதவீத ஒதுக்கீடு கேட்டதாக திரித்துக் கூறுகிறார், வீரமணி.

25.11.2001 அன்று பெரியார் திடலில் 'பெரியாரியல் தோற்கடிக்கப்பட்டதா' என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் கி.வீரமணி இவ்வாறு பேசினார்.

"நூற்றுக்கு நூறு பார்ப்பனர்கள் அனுபவித்து வந்ததைத்தான் **50 சதவீத இடமாவது** பார்ப்பனரல்லாதாருக்கு ஒதுக்கித் தாருங்கள் என்று **காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில்** தந்தை பெரியார் அவர்கள் தீர்மானமாகவே கொடுத்து கேட்டார்கள்." (13.12.2001 - விடுதலை)

காஞ்சிபுரம் மாநாட்டில் பெரியார் கொடுத்த தீர்மானத்தில் 50 சதவீத இட ஒதுக்கீடா கேட்டார்? இல்லை; இல்லவே இல்லை.

பெரியார் - முன்மொழிந்த தீர்மானம் இதுதான்.

"தேசத்தின் முன்னேற்றத்தை உத்தேசித்தும் தேசிய ஒற்றுமையை உத்தேசித்தும் அரசியல் சம்பந்தமான சகல பதவிகளிலும், இந்து சமூகத்தில் பிராமணர், பிராமணரல்லாதார், தீண்டாதோர் என்போர் ஆகிய இந்த மூன்று சமூகத்தாருக்கும் அவரவர் ஜனத் தொகையை அனுசரித்துப் பிரதிநிதி ஸ்தானம் கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமாய் மாகாண மாநாட்டைக் கேட்டுக் கொள்வதாடு, இத் தீர்மானத்தை மாகாண மாநாடு மூலமாய் காங்கிரசை வலியுறுத்தும்படியும் தீர்மானிக்கிறது." (குடிஅரசு - 16.12.1925) இதுதான் பெரியாரின் தீர்மானம். இதில் எங்கே 50 சதவீத இடஒதுக்கீடு வருகிறது?

பெரியார் காஞ்சிபுரம் மாநாட்டில் முன் மொழிந்த தீர்மானத்தின் நோக்கத்தையே திரித்துப் பேசுவதற்கு என்ன பெயர் சூட்டலாம்?

பாரதியார் நூல்கள் தேசவுடைமையாகிவிட்டதால், பாரதியின் பல கருத்துகள் சிதைக்கப்பட்டு விட்டதாக பாரதியார் பேத்தி கூறியதை - விடுதலை தலைப்புச் செய்தியாக வெளியிட்டு பெரியார் நூல்களை தேசவுடைமையாக்க வேண்டும் என்று 'கதறுவோர்' பார்வைக்கு என்று தலைப்பிட்டுள்ளது. பாரதியின் தீவிர பார்ப்பன ஆதரவுக் கருத்தை அவரை முற்போக்காகக் காட்ட விரும்பியவர்கள் - திருத்தியது உண்மை. பார்ப்பன பாரதியைத் தூக்கி நிறுத்த அப்படி திருத்தப்பட்டனவற்றை எல்லாம் உண்மையான ஆய்வாளர்கள் வெளிப்படுத்தி விட்டனர்.

வால்மீகி ராமாயண ஆபாசங்களை பெரியார் ஆதாரத்துடன் தோல் உரித்து வந்தபோது பெரியாரால் சுட்டிக்காட்டப்பட்ட பகுதிகள் பிறகு, வெளிவந்த பதிப்புகளில் பார்ப்பனர்களால் நீக்கப்பட்டன. இதை இயக்கத்தின் ஏடுகளே கண்டுபிடித்து வெளிப்படுத்தியுள்ளன. கருத்துகள் திரிக்கப்பட்டால், கண்டுபிடிக்கப்பட்டு, அம்பலமாக்கப்பட வேண்டுமே தவிர, நூல்களே தேசியமயமாக்கக் கூடாது. எல்லோரும் வெளியிட்டுவிடக் கூடாது என்று வாதிடுவதில் என்ன நியாயம் இருக்க முடியும்? அப்படியானால் எந்த சிந்தனையாளர் நூல்களும் தேசவுடைமையாகவே கூடாது என்பதுதான் கி.வீரமணியின் கொள்கையா? அப்படி அவர் வெளிப்படையாக அறிவிப்பாரா?

பெரியார் நூல்கள் பெருமளவில் மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்று வீரமணி கவலைப்படவில்லை. தனக்குப் பிறகு தனது நூல்களே வாரிசு என்று பெரியார் அறிவித்தாலும்கூட பெரியாரின் வாரிசாக தன்னை பிரகடனப்படுத்திக் கொள்ளும் வீரமணி, உண்மையான வாரிசாகிய நூல்களை, தனது கட்டுப்பாட்டுக்குள் முடக்கிப் போடவே துடிக்கிறார்.

மற்றவர்கள் வெளியிட்டால் பெரியார் கருத்தை திரித்துவிடுவார்கள் என்று கூறிக் கொண்டு, தானே பெரியார் கருத்தைத் திரிக்கலாமா? காஞ்சிபுரம் மாநாட்டில் 50 சதவீத இடஒதுக்கீட்டை பெரியார் கேட்டதாக புளுகலாமா?

"பெரியார் கேட்டது 50 சதவீதம் தான்; நான் பெற்றதோ 69 சதவீதம்" - என்று தன்னை புகழ் ஏணியில் உயர்த்திக் கொள்ள பெரியார் கூறாததைக் கூறலாமா?

பெரியாரைத் திரிப்பது யார்?

(புரட்டுகள் உடைப்பது தொடரும்)

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இரவு கோவையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பெ. மணியரசன் ஆகியோர் தங்கினர். அடுத்த நாள் காலை தோழர்கள் கோவை நோக்கி திரண்டனர்.

21-ம் தேதி காலை கழகத்தலைவரை வரவேற்க 40க்கும் மேற்பட்ட வாகனங்களில் சேலம் மாவட்ட கழகத்தினர் கோவை வந்தனர். கோவை கழக அலுவலகத்திலிருந்து காலை 10.30 மணிக்கு வாகனப் பேரணி மேட்டூர் நோக்கி புறப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி த.தே.பொ.க. பொதுச் செயலாளர் மணியரசன் ஆகியோருக்கு வழி நெடுக உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டது. புதுவைத் தோழர்கள் லோகு அய்யப்பன் தலைமையில் தனிப் பேருந்தில் வரவேற்க வந்திருந்தனர்.

விஜயமங்கலத்தில் தோழர் அர்ச்சுனன், விசு, துரை, கழகத் தோழர்கள் ஆடை போர்த்தி வரவேற்றனர். அங்கே கழகக் கொடியை ஏற்றி, தலைவர் கொளத்தூர் மணியும், பெ. மணியரசனும் உரையாற்றினர். பெருந்துறையில் சாதி ஒழிப்பு கூட்டியக்கம் சார்பில் உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டது. கூட்டியக்கத்தின் அமைப்பாளர் இரத்தினசாமி மற்றும் ஏராளமான தமிழின உணர்வாளர்கள் திரண்டிருந்தனர். ஈரோடு வந்து சேர்ந்த போது அங்கு பெருமளவில் உணர்வாளர்கள் வரவேற்கக் காத்திருந்தனர்.

பன்னீர்செல்வம் பூங்காவிலுள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து, தோழர்களிடையே கொளத்தூர் மணி, மணியரசன் இருவரும் உரையாற்றினர். பெ.மணியரசன் ஈரோட்டிலிருந்து தஞ்சைக்கு விடை பெற்றார். ரயில் நிலையத்தில் அவரை வழியனுப்பி விட்டு, தோழர்கள் ஈரோடு பெரியார் நினைவகம் சென்று பார்வையிட்டனர். பிற்பகல் 3 மணியளவில் ஒலி முழக்கங்களுடன் வாகனப் பேரணி புறப்பட்டது.

பவானி - அந்தியூர் சந்திப்பில் கழகத் தோழர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் விடுதலை சிறுத்தைகள் வரவேற்றனர்.

கழகத் தோழர்களுக்கு 'சேலமே குரல் கொடு' அமைப்பின் நிறுவனர் பீயூஸ் மாறன் சிற்றுண்டி வழங்கினார். 5.30 மணியளவில் மேட்டூரின் எல்லையான காவேரி கிராசை வந்தடைந்த போது மேட்டூர் நகர விடுதலை சிறுத்தைகளின் சார்பில் வைரமணி தலைமையில் பட்டாசுகள் வெடித்து உற்சாக வரவேற்பு தரப்பட்டது. 6 மணியளவில் செயின்ட் மேரீஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அருகிலிருந்து தாரை தப்பட்டை மேளவாத்தியம் முழங்க வரவேற்று, கழகத் தலைவர் அழைத்துச் செல்லப்பட்டார். வாகனங்களைவிட்டு இறங்கி கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் ஈழத் தமிழருக்கு ஆதரவாக முழக்கங்களை எழுப்பி ஊர்வலமாக வந்தனர். மேட்டூரில் கழகத் தலைவரின் வீடுவரை சென்று வழியனுப்பி வைத்து, தோழர்கள் திரும்பினர்.

மேட்டூரில் கொளத்தூர் மணி அவரது இல்லத்தில் கைது செய்யப்பட்டபோது இதேபோல் திரண்டு வழியனுப்பிய தோழர்கள் விடுதலைக்குப் பிறகும் வீடு வரை வந்து வழியனுப்பினர்.

தோழர்கள் அனைவரும் பெரியார் படிப்பகம் திரும்பினர். இல்லத்திலிருந்து 30 நிமிடத்தில் படிப்பகம் திரும்பிய கொளத்தூர் மணி தோழர்களிடையே உரையாற்றினார். அப்போது ஈழப் பிரச்சினையில் இனி அரசியல் கட்சிகளை நம்பிப் பயனில்லை. தேர்தலில் போட்டியிடாத இயக்கங்கள், சமூக அமைப்புகள் ஒருங்கிணைந்து ஈழத் தமிழருக்கு ஆதரவாக பிரச்சாரங்கள், போராட்டங் களை நடத்த முடிவு செய்துள்ளோம் என்று தெரிவித்தார். முதற்கட்டமாக கழகத் தோழர்கள் அனைவரும் 15 நாட்கள் சிறை செல்ல தயாராக தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள் என்ற அறை கூவல் விடுத்தனர்.

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழர்களிடையே பேரெழுச்சி உருவாக்கியிருப்பதை உணர முடிந்தது.

**செய்தி : மேட்டூர் சக்திவேலு, கோவை சாஜித்**

---

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 29th January 2009

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.